

# டாக்டர் மு.வ.வின் சிந்தனை வளம்









டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# டாக்டர் மு.வ. வின் சிந்தனை வளம்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர் &
தமிழ் மொழித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : ஆகஸ்டு 1994
நறுமலர்ப் பதிப்பக வெளியீடு

விலை ரூ. 16-00

அச்சிட்டோர் :

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ்ரோடு,
சென்னை-600 014.

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சிக்கு என் பேராசிரியப் பெருந்தகை டாக்டர் மு. வரதராசனார் ஆற்றிய தொண்டுகள் பல. இலக்கியம், புதினம், நாடகம், பிறர் வரலாறு, கடித இலக்கியம், இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு, மொழியியல் முதலான பல்வேறு துறைகளில் அவருடைய எழுதுகோல் சாதனை புரிந்தது. சென்னையில் நடந்த ஒரு தமிழ் விழாவில் அந்நாளைய இலங்கை அமைச்சர் திரு. சு. நடேசப்பிள்ளை அவர்கள் தமிழ் நாட்டின் நோபல் பரிசாளர் மு. வரதராசனார் என்று குறிப்பிட்டதனை நினைவுகூரவேண்டும். எழுத்தராய்த்தம் பணியைத் தொடங்கிய பேராசிரியர் மு.வ. அவர்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் உயர்ந்தார்கள். அவருடைய எழுத்துகளில் தனி மனித வாழ்க்கையை- சமுதாயத்தை- சீர்திருத்தும் கருத்துகள் பொதிந்து கிடக்கின்றன.

டாக்டர் மு. வரதராசனார் நினைவு அறக்கட்டளை அவருடைய மாணவர்களால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டது. அதை நிறுவியவன் என்ற முறையில் ஆண்டுதோறும் நடைபெறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளுக்குத் தலைமைதாங்கும் பேறு கிடைத்து வந்தது. இடையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராய்ச் சென்றபொழுது, அவ் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தச் சென்னைப் பல்கலைக்கழகம் என்னை அழைத்தது. அச்சொற்பொழிவுகளை இப்பொழுது நூல் வடிவில் உங்கள் முன் படைக்கின்றேன்.

டாக்டர் மு.வ. அவர்களைப் பற்றி எந்த நூல் எழுதினாலும் அவருடைய கருத்துகளை அப்படியே பெய்யாமல் எழுத இயலாது. அத்தகைய சிறந்த சிந்தனையாளர் அவர்; சமுதாய மருத்துவர் அவர். எனவே என்னை அறியாமல் அவர் எழுத்தின் தாக்கம் இந்நூலில் மிகுதியாக இருக்கலாம். எனவே நூலின் தலைப்பு 'டாக்டர் மு.வ. வின் சிந்தனை வளம்' என்று அமைகிறது.

சென்னை-600 029 சி.பா.

# உள்ளுறை


| கட்டுரை எண். | | பக்கம் |
|---|---|---|
| 1 | டாக்டர் மு.வ. வின் இலக்கிய வளம் | 5 |
| 2 | டாக்டர் மு.வ. வின் புதின வளம் | 35 |
| 3 | டாக்டர் மு.வ. வின் சிந்தனை வளம் | 67 |

# டாக்டர் மு.வ.வின் இலக்கிய வளம்

1952-ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் சென்னையில் ஒரு தமிழ் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் 'சங்க இலக்கியம்' எனும் பொருள் குறித்து டாக்டர் மு. வ. அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அவ் இலக்கிய மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர் அது பொழுது இலங்கையில் அஞ்சல் துறை அமைச்சராக இருந்த திரு.சு. நடேசப்பிள்ளை அவர்கள் ஆவர். டாக்டர் மு. வ. அவர்களை அவையோர்க்கு அறிமுகப்படுத்தி இலங்கை அமைச்சர் பேசியபொழுது, டாக்டர் மு. வ. அவர்கள் 'தமிழ்நாட்டின் இலக்கிய நோபல் பரிசாளர்' என்று குறிப்பிட்டார். அந்த அளவுக்கு டாக்டர் மு. வ. அவர்களுடைய நூல்கள் தமிழ்நாட்டில் நாற்பதுகளிலும் ஐம்பதுகளிலும் பெரும் புகழ் பெற்று மக்களிடையே விளங்கின; பரவின. சென்னை, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற அந்த இலக்கியக் கூட்டத்தில் டாக்டர் மு. வ. அவர்கள் அகநானூற்றில் முல்லைத் திணையில் அமைந்திருக்கும் ஒரு பாட்டில் வரும்,

'செந்தரர் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ...

எனும் பாட்டின் பகுதிக்கு விளக்கவுரையாற்றிய அந்தக் காட்சி இன்னும் என் நெஞ்சுத் திரையில் நிழலாடுகின்றது. தமிழ் நாட்டின் இலக்கிய நோபல் பரிசாளர் என்று அயலகத்து அமைச்சர் அவரைப் பாராட்டுகின்ற வகை

யில் டாக்டர் மு.வ. அவர்களின் இலக்கிய வளம் அந்தக் காலகட்டத்தில் மிகச் சிறப்பாகத் துவங்கியிருந்திருக்கின்றது ஏறத்தாழ இருபத்து நான்கு இலக்கிய நூல்களை எழுதியிருக்கும் டாக்டர் மு. வ. அவர்களுக்கு இலக்கியத்தின்பால் அதிலும் குறிப்பாகச் 'சங்க இலக்கியத்தின்பால்' தணியாத காதல் உண்டு. அதனால்தான் பெரும் பள்ளி இறுதித் தேர்வை (எஸ்.எஸ்.எல்.சி.) முடித்து தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தராகப் பணியைத் தொடங்கிய டாக்டர் மு.வ. அவர்கள் தாமே தமிழ் படித்து வித்துவான் தேர்வு எழுதித் திருப்பனத்தாள் காசிமடத்தின் கொடையால் ஐந்தாம் ஜார்ஜ் அரசர் பெயரால் வழங்கப்பெறும் நினைவுப் பரிசாகிய ஆயிரம் ரூபாய்ப் பரிசினைப் பெற்றுத் தேர்ந்தார். திருப்பத்தூரில் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியினை ஏற்றார். அவற்றிற்கெல்லாம் அவருடைய தமிழ்த் தோய்வே-தமிழிலக்கிய ஈடுபாடே காரணம் எனலாம்.

அவர் பிறந்த ஊர் சென்னை-பெங்களூர் செல்லும் புகை வண்டிப் பெரு வழியினிடையே வாலாசாப்பேட்டை என்னும் ஊருக்கு வடக்கே நான்கு கல் தொலைவில் அமைந்திருக்கும் 'வேலம்' எனும் சிற்றூராகும். இந்தச் சிற்றூரைக் குறித்து 'எங்கள் ஊர் : வேலம்' என்ற தலைப்பில் 3-8-1969, ஆனந்த விகடனில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் இலக்கிய மணம் இனிது கமழக் காணலாம்.

"ஆர்க்காட்டில் இருந்து ஐந்தாவது மைலில் சோளிங்கபுரம் போகும் சாலையில் அமைந்த கிராமம் அது. ஊரின் முகப்பிலேயே ஒரு நல்ல குளம் (ஊருணி) அமைந்து அழகான காட்சி தருகிறது. அதன் உயர்ந்த கரையின் மேட்டில் ஆலமரங்கள் பல சூழ்ந்து விளங்

கும். குளத்திற்கும் ஊர்க்குமிடையே நீரற்ற ஓடையும் பெரிய ஆலமரமும் அரசமரமும் உள்ளன. அந்த மரங்களே ஊர்ப் பெரியவர்களுக்கு அரசியல் அரங்கம். இளைஞர்களுக்கு ஆடும் களம்; அரட்டை மன்றம்; இவை எல்லாம் ஊர்க்கு மேற்கே உள்ளன. கிழக்கே உள்ள சத்திரம் பலருக்கு ஒதுக்கிடம்; சிலருக்கு ஊர் வம்புக் கூடம். வடக்குப் பகுதியில் உள்ள தெருவில் எங்கள் வீட்டின் திண்ணை மேல் இருந்து பார்த்தால் வேலத்து மலை ஒரு மைல் தொலைவில் தெரியும். இளமையில் அந்த மலையின் உச்சிப் பகுதி மட்டுமே தெரியும் மலைக்கும் எங்கள் தெருவுக்கும் இடையே அவ்வளவு மரங்கள் அடர்ந்திருந்தன. இப்போது வீட்டிலிருந்து பார்த்தால் மலையின் முழு வடிவமும் தெரிகிறது. மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுப் போயின.

"ஒரு பொருளின் உண்மையான மதிப்பு அல்லது ஒருவரின் உண்மையான சிறப்பு பெருங்கிப் பழகு கின்றவர்களுக்குத் தெரிவதில்லை''

கதையால் தமிழ் உலகளக்கவந்த மு. வ. அவர்கள் வேலத்து மலையைக் கதைக் கருப்பொருளாக்கி எழுதுகின்றார். தம் சொந்த ஊரைத் தம் நண்பர் ஊராக்கி உவகை கொள்கிறார்.

''நண்பனுடைய சிற்றூர் என் உள்ளத்தைக் கவர்ந்தது. அந்த ஊரின் வளமோ. ஊராரின் வாழ்வோ என் உள்ளத்தைக் கவரவில்லை. அந்த ஊரின் அமைப்புத் தான் என் உள்ளத்தைக் கவர்ந்தது. வடக்கிலும் மேற்கிலும் மலைகள் சூழ்ந்து, வானுற ஓங்கிய மதில் சுவர்களாக நின்றன. அவற்றில் பெரிய மரங்கள் இல்லை; ஆனால் பச்சைப் பசேலென மஞ்சம் புல்

வளர்ந்து போர்த்திருந்தது. மேற்கே நின்ற மலைகள் மண் மலைகள்; வடக்கில் ஓங்கிய மலைதான் கல் மலை; அந்த மலையே உயரமான மலையுமாகும். அந்த மலையின் அழகுக்கு அழகு செய்வனபோல் அதில் இரண்டு குவடுகள் இருந்தன. ஒன்று தட்டையாய் அமர்ந்திருந்தது: மற்றொன்று குவிந்து ஓங்கியிருந்தது. இந்த இரண்டுக்கும் ஊரார் சட்டக் கல் கூர்ச்சுமலை என்றும் வழங்கும் பெயர்கள் மிகச் பொருத்தமாக இருப்பது அறிந்து மகிழ்ந்தேன். மலையின் தோற்றத்தைச் சங்கப் புலவர் ஒருவர் கண்டால், அதன் குவடுகள் இரண்டையும் இரண்டு கைகளாகப் புனைந்து பாடியிருப்பார். இந்த மலையைச் சங்கப் புலவர் ஒருவரோ பலரோ அந்தக் காலத்தில் பார்த்திருக்கக் கூடும்; பாடல்களும் பாடியிருக்கக் கூடும். ஆனால், அந்தப் பாடல்கள் காலவெள்ளத்தை நீந்திக் கரையேற முடியாமல் அடித்துக் கொண்டு போகப் பட்டிருக்கலாம். யார் கண்டார்கள்? காலவெள்ளம் எத்தனையோ நூல்களை அடித்துக் கொண்டு ஓடுவதை இருபதாம் நூற்றாண்டிலும் நாம் கண்ணாரக் காண்கிறோமே! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அச்சுப் பொறியும் மற்றக் கருவிகளும் இல்லாத பழங்காலத்தில் அந்த வெள்ளத்தில் அழிந்தவை எவ்வளவோ? பாடல்கள் போனாலும், மலை போகவில்லை; நிற்கிறது; ஓங்கி நிற்கின்றது; ஒரு கையை வானுறச் சுட்டிக்கொண்டு அந்த மலை இன்னும் இறுமாந்து நிற்கின்றது.

"நான் விரும்பிக் குளித்து வந்த மற்றோர் இடம் ஊர்க்கு வடக்கே மலையடிவாரத்தில் உள்ள பெரிய ஓடை என்னும் அருவியாகும். 'கலசல' என்ற ஒலி

யோடு வரும் அந்தக் குளிர்ந்த நீரில் குளித்து, பக்கத்தே ஓர் அத்தி மரத்தின் கீழே உள்ள பாறை மேல் அமர்ந்து நல்ல நூல்களைப் படிப்பது வழக்கம். என் வாழ்வில் பலநாள் மனம் அமைதியில் மூழ்கிய இடம் அது. பாடல்களை வாய்விட்டுப் பாடி மகிழ்ந்த இடம் அது.

"மலையில் சில சுனைகள் உண்டு. சுனைகளின் இடையில்—பாறைகளின் சிறு பள்ளங்களில் மஞ்சள் நிறமான துகள் காணப்படும். 'தேவலோகத்துப் பெண்கள் (அரமகளிர்) வந்து சுனைகளில் குளிக்கும்போது பூசிக் கொள்வதற்காகத் தோய்த்த மஞ்சள் அது' என்பார்கள். அங்கே வளரும் நுண்ணிய பாசிகள் உலர்ந்தபின் அவ்வாறு மஞ்சள்நிறம் பெறுவது இயற்கை. அதுவே உண்மை என்பதை வளர்ந்த பின் உணர்ந்தேன். முருகன் வேல்பட்ட காரணத்தால் அந்த மலை, வேலம் என்று பெயர் பெற்றது என்பார்கள். ஏழு மைலில் வள்ளிமலை இருப்பதையும் சுட்டிக் கூறுவார்கள். காட்டில் வேல மரங்கள் இருப்பதை அறிந்தும், இவ்வாறு கற்பனை செய்து மகிழ்ந்தார்கள்.

"மலையின் அந்தப் பக்கத்தில் தாழை ஓடை என்ற ஓடை உண்டு. அங்கே உள்ள தாழைமரங்கள் அழகான காட்சியாக இருக்கும். சங்க இலக்கியங்களில் வரும் இயற்கைக் காட்சிகளையும், காந்தள் முதலான மலர்களின் அழகையும் உவமைச் சிறப்புக்களையும் பாராட்டுவதற்கு இந்த அனுபவம் எனக்குப் பயன் பட்டது."

மேற்காணும் கட்டுரைப் பகுதியினால் டாக்டர் மு.வ. அவர்களின் இனிய இலக்கியவளத்தை நன்கு காணலாம்.

அடுத்தபடியாக அவருக்கு இலக்கியம் பிறந்த இடம் என்று எண்ணிப் பார்க்கிறபொழுது அவர் குறிப்பிடும் செய்தி இயற்கையையும், இலக்கியத்தையும் இணைத்துப் பார்த்த அவர்தம் நெஞ்சம் புலனாகின்றது. அப் பகுதி வருமாறு :

"ஒரு பாட்டு; அதைக் குறித்துப் பல நாள் போராட்டம்; இரண்டு நாள் இரவும் பகலும் ஏக்கம்; மூன்றாம் நாள் மாலையில் வேலத்து மலையை அடுத்த அழகிய ஓடையில் உலவும்போது எதிர் பாராத விளக்கம்; நல்ல தெளிவால் பிறந்த பேருவகை இவையே இந்நூலாக உருப்பெற்றன."

(ஓவச்செய்தி; நன்றியுரை )

"ஆதலின் சங்க நூல்களைக் கற்பவர், வாழ்க் கையின் உண்மைகளை மறவாமல் ஆராய்ந்து காண வேண்டும். வாழ்க்கையைப் பற்றிய தெளிவு பெறாத வரும் சங்க இலக்கியத்தைக் கற்று அந்தத் தெளிவு பெறமுடியும். வாழ்க்கையால் இலக்கியக் கல்வியும், இலக்கியக் கல்வியால் வாழ்க்கையும் திருந்தி வளம் பெற முடியும் என்ற உண்மையை இங்குக் காணலாம். இது மட்டும் அன்று, ஒரே வகையான தூய உயர்ந்த அமைப்பு, சங்க இலக்கியம் முழுவதும் ஊடுருவி நிற்ப தால், ஒரு பாட்டைக் கற்பவர்க்கு ஏதேனும் ஐயம் எழுந்தால் மற்றப் பாட்டுக்களின் கருத்துக்கள் முன் வந்து துணை செய்யும்: ஐயம் போக்கும்; உண்மை உணர்த்தும்."

(சங்க இலக்கியம் பற்றிய மு.வ.வின் கருத்து

அகநானூற்றில் ஒரு பாட்டை எடுத்துக்கொண்டு அதை எளிய இருநூறு பக்கங்களில் விளக்கங்கள் வழங்கியிருப்பதனை 'ஓவச்செய்தி' எனும் ஒரு நூலால் டாக்டர் மு.வ. புலப்படுத்தியுள்ளார். 'ஓவச் செய்தி' எனும் ஒரு நூலே அவர்தம் இலக்கிய வளத்திற்கு இன்றும் சான்று பகன்று கொண்டிருக்கின்றது.

சங்க இலக்கியம் குறித்து அவர் எழுதியிருப்பது சற்று சிந்திக்கத் தக்கதாகும்.

அடுத்தபடியாக அவருடைய நூல் 'குறுந்தொகைச் செல்வம்' ஈண்டு கருதத்தக்கது அந்நூலின் முன்னுரையில் அவர் இலக்கியத்தைத் துய்க்கும் முறையினை இனிது எடுத்துக் கிளத்தியுள்ளார். இலக்கியம் படிப்பவருக்கு அவர் எழுதியிருக்கும் செய்திகள் பெரும் துணை செய்யவல்லதாகும். இதுபோன்று இலக்கியத்தினை இனிது துய்ப்பதற்கு வழி முறைகளைப் புலப்படுத்துபவர்கள் இக் காலத்தில் இல்லை எனலாம். அப் பகுதி வருமாறு :

> "பாட்டுக்கு உயிர் உணர்ச்சி; உடல் கற்பனை; உடை ஒலிநயம், குறுந்தொகைப் பாட்டுக்களில் உடை எளியதாக உள்ளது; உடல் அழகுற அமைந்துள்ளது; உயிர் போற்றத்தக்கதாக உள்ளது. உயிரின் வாழ்வுக்காக உடலும், உடலின் காப்புக்காக உடையும் அமைந்த அமைப்பை இவற்றில் காணலாம். நுணுகியுணரும் செவிப்புலன் வாய்ந்தவர்க்கே, இப்பாட்டுகளில் உள்ள ஒலிநயம் (Rhythm) புலனாகும். பிற்காலத்துப் பாட்டுப் போலவோ, கலித்தொகைப் பாட்டுப் போலவோ எளிதில் விருந்தாகும் இசைக் கவர்ச்சி இவற்றில் இல்லை, நுட்பமாக செவி உடையவராய், எளிமையான நயமே போதுமென அமைப

வர்க்கே இங்கே விருந்து உண்டு. உடலாகிய கற்பனையும் அளவுபட்டு அமைந்துள்ளது, தசைநார்த் திரட்சியும் பெருக்கமும் அமைந்து காண்போரை மருட்டும் உடல் வளர்ச்சி போன்ற கற்பனைகள் சில நூல்களில் உள்ளன. ஆயின், இவற்றில் உள்ள கற்பனை• காந்தியடிகளின் தூய உடல் போன்றது; வலிமை மிக்க உடல் அன்று; நலம் நிறைந்த உடல் ஆகும்; இடர்ப்பாடின்றி உணர்ச்சி விளங்குதற்கு ஏற்ற நோயற்ற உடல் ஆகும். எளிய உடை சூழ்ந்து நோயற்று விளங்கும் இந்த அழகிய உடலில் அமைந்துள்ள உணர்ச்சி மாசற்றது; நெறியானது; போற்றத் தக்கது."

(குறுந்தொகைச் செல்வம்; முன்னுரை)

சங்க இலக்கியப் பாட்டினை டாக்டர் மு.வ. அவர்களைப் போல இலக்கிய வளத்தோடு இனிது புலப்படுத்தி, படிப்பவர் மனத்தில் காட்சித் திரைகளை விரித்தவர் இந் நூற்றாண்டில் எவரும் இல்லை என்று துணிவாகக் கூறலாம்.

"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்த்தது
நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும்" என்று
அன்னைகூறினள் புன்னையது நலனே;
அம்ம நாணுதும் நும்மொடு நகையே..."

எனும் நற்றிணை—172—ஆவது பாடலுக்கு அவர் எழுதியிருக்கிற விளக்கம் எத்துணை அளவு இலக்கிய வளம் வாய்ந்ததாக உள்ளது என்பதனை 'மணல் வீடு' என்ற

அவர் நூலில் இரண்டாவது கட்டுரையாக அமைந்துள்ள 'உணர்வும் உறவும்' எனும் கட்டுரையில் நன்கு காணலாம்.

"காதலனும் காதலியும் திருமணத்தில் கலந்து இல்லறத்தில் தலைப்பட்டுக் கணவன் மனைவியாக அன்புடனும் பண்புடனும் வாழும் இனிய பெற்றியினைக் கூடலூர் கிழார் பாடிய குறுந்தொகையின் 167—ஆவது பாடலால் அறியலாம். அந்தப் பாடல் வருமாறு :

"முளிதயிர்ப் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"

"திருமணம் செய்து இல்வாழ்க்கை தொடங்கிய ஒரு குடும்பத்தில் மனைவி தயிர்க்குழம்பு சமைத்தாள். முற்றிய தயிரைத் தன்மெல்லிய விரலால் பிசைந்தாள். சேர்ப்பன சேர்த்துத் தாளிக்கத் தொடங்கினாள். குறித்த நேரத்தில் விரைந்து தாளிக்கத் தவறினால் நறுமணமும் சுவையும் குன்றுமாதலின் தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே நெகிழ்ந்த தன் ஆடையை உடுத்திக்கொண்டாள். உடனே தாளிக்கத் தொடங்கினாள். தாளிப்புப்புகை மேல் எழுந்து கண்ணில் பட்டது. புகைக்காகத் தயங்கிச் சிறிது பொறுத்தாலும் சுவைப் பயன் கெடும் என்று அஞ்சி, புகைக்கு இடையே உற்று நோக்கிக் துழாவிச் சமைத்து முடித்தாள். இவ்வாறு சமைத்த இனிய புளிச்சுவை உடைய குழம்பைக் கணவனுக்கு இட்டபோது அவன் 'நன்றாயிருக்கின்றது' என்று பாராட்டியவாறே

உண்டான். அந்தப் பாராட்டுதலைக் கேட்ட மனைவியின் முகம் மகிழ்ச்சியுற்றது அகத்தே நிறைந்த மகிழ்ச்சி புறத்தே நுட்பமாகப்புன் முறுவலாக விளங்கியது.''

இந்தப் பாடலை நம் கண்முன் கொண்டுவரும் டாக்டர் மு. வ. அவர்கள் விளக்கத்திற்குக் கையாளும் உத்திகள் இளைஞர் உலகம் இனிது கற்றுத் தெளிய வேண்டிய ஒன்றாகும். மேலும் பகுதி வருமாறு:

''திருமணத்திற்கு முன் இந்த இளைஞனுக்குத் தன் விருப்பு வெறுப்பே முன்னோங்கியிருந்தன. அதனால்தான் தாயின் அன்பு கலந்த உணவையும் மகிழ்ந்து போற்ற முடியாத மகனாக இருந்தான். தாயின் அன்புக்கும் இல்லாத ஆற்றல், காதலுக்கு அமைந்திருத்தல் வியப்பே ஆகும். தாயின் அன்பு ஏற்படுத்த முடியாத பெருமாறுதலை ஒருத்தியின் காதல் அவன் உள்ளத்தில் ஏற்படுத்திவிட்டது. தான் விருப்பு வெறுப்பை முன்னோங்க விடாமல் தன் காதலியின் மகிழ்ச்சியையே பெரிதாகப் போற்றும் மனம் அமைந்துவிட்டது. ஆதலின் போற்றத்தக்க சுவை அமையாத உணவையும் 'இனிது'எனப் போற்றி உண்டான்.

''விருப்பு வெறுப்பு முன்னோங்குவதற்குக் காரணம் உள்ளத்தே குடிகொள்ளும் தன்னலமேயாகும். காதல் குடிபுகுந்த பின் அங்குத் தன்னலத்தின் ஆட்சி செல்வதில்லை. தன்னலத்தின் விளைவாக தன் விருப்பு வெறுப்பு மேல் எழுதல் இல்லை. பிறர் விரும்பு மாறு சொல்லுதலும் செய்தலுமே இயல்பாக அமைந்துவிடுகின்றன. அதனால் இனிமை குறைந்த

உணவிலும் இனிமை கண்டு போற்றும் மனப்பான்மை வருகின்றது.

"புது வாழ்க்கை தொடங்கிய இந்த இளம் பெண் நேற்றுவரையில் எவ்வாறு வாழ்ந்தாள்? தன் மெல்லிய விரல்கள் காந்தள் மலர்போல் விளங்குமாறு மாசு படாமல் காத்துவந்தாள். தாய் வீட்டில் தயிர் பிசைந்தாலும் விரல்களில் அழகுக் குறைவு என்று எண்ணும் மனம் இருந்தது. உடுத்திய ஆடை ஒழுங்கு தவறாது" மாசு படாதவாறு காக்கும் ஆர்வம் இருந்தது. அழகிய கண்களுக்கு மைதீட்டி அவை குவளை மலர்போல் விளங்குமாறு காக்கும் அழகுணர்ச்சி இருந்தது. தன் அழகைக் காத்துக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டு, அதை ஒரு கலையாக்கி நாள்தோறும் அழகுபடுத்திக் கொள்வதற்காகச் சில நாழிகை செலவிட்டு வாழ்ந்த இளம் பெண், இன்று புக்ககத்தில் எத்தகைய பெரு மாறுதல் உற்றாள்! தன் அழகு என்ற தன்முனைப்பு அவள் உள்ளத்தை விட்டு அகன்று, கணவன் மகிழ வேண்டும் என்ற வேட்கையால் தியாக உணர்வு வளர்ந்து விட்டது. ஆகவே மெல்லிய விரல்கள் 'முளிதயிர்' பிசைந்தன. தூய ஆடையைத் தயிர் பிசைந்த கைகள் உடுத்தின. தாளிப்புப் புகையில் மையுண்ட கண்கள் மூழ்கின. அன்று அவள் விரும்பியது தன் அழகு அன்று; கணவனின் மகிழ்ச்சியே ஆகும். விரும்பியதைப் பெற்றாள்; அவள் உள்ளம் நிறைந்தது. அந்த நிறைவால் முகத்தில் நுண்ணிய புன்முறுவல் பொலிந்தது.

"அவள் உள்ளத்திலும் தன்னலத்திற்கு இடம் இல்லை; அவன் உள்ளத்திலும் தன்னலம் நீங்கி

விட்டது. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் போக்கிக் கொள்ளுதற்கு அரிய தன்னலம் எளிதில் போகுமாறு பெரு மாறுதல் செய்தது காதல்.''

(குறுந்தொகைச் செல்வம்)

மேலும், உணர்வோவியமாகச் சங்கப் பாடல்களில் அமைந்திருக்கும் திறத்தினை டாக்டர் மு. வ. அவர்கள் வருணிக்கும் பாங்கும் மனங்கொளத் தக்கதாகும். அதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பகுதியினைக் கூறலாம் :

''மாமை நிறம் உடைய இந்த இளம்பெண் நம் தாய் போன்ற கற்பொழுக்கம் உடையவளாகி விட்டாள். மூடிய செம்பில் தனித்துக் கிடந்த பிறர் குடிக்கொள்ளாமலே அழகும் மணமும் இழந்து வாடும் மலர்களைப் போல், தனித்துத் துயருற்று உடல் மெலிந்தாள். கணவன் செய்த கொடுமையை நமக்குச் சொல்லவும் நாணி மறைத்து நடக்கின்றான்'' என்று வியந்து பாராட்டினான்,

''யாயா சியளே மாஅ யோளே
மடைமாண் செப்பின் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
..........................................................
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பா டும்மே'' —குறுந்-9

"கணவன் மெல்ல வீட்டிற்குள் நுழைந்தான். தான் செய்த குற்றம் நெஞ்சத்தை வருத்த மெல்ல உள்ளே சென்றான். தன் மனைவி தன்னை வெறுத்துக் கடிந் துரைப்பாள் என்றும், அவளுடைய சினத்தை மாற்ற என்ன செய்வது என்றும் எண்ணியவாறே சென்றான்,

அவளோ அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக முக மலர்ச்சியோடு எதிரே வந்து இன்சொல் கூறி அன்புடன் வரவேற்றாள். அதனால் தலைவன் நெஞ்சம் அவனை மேலும் வருத்தத் தொடங்கியது. இத்தகைய பெருந்தன்மை உடையவளுக்குத் தவறு இழைத்தோமே என்று நாணினான். இந்தக் காட்சியை ஒதுங்கியிருந்து கண்ட தோழி அவளு டைய பண்பாட்டை நினைந்து மேலும் போற்றி னாள்; ''மகிழ்ந்து விளையாடும் விளையாட்டில் திளைத்துக் கிடக்கும் இளம் பெண்ணான இவள் நம் தாய்போல் நிறைந்த பண்பாடு பெற்றுவிட்டாளே. கணவன் செய்த கொடுமையை மறைத்தவளாகலின் அவனே நாணுமாறு அன்புடன் எதிர்கொள்ள வரு கிறாள்'. என்று பாராட்டினாள்.''

''காஞ்சி யூரான் கொடுமை
கரந்தனன் ஆதலின்நாணிய வருமே —குறுந்-10

'கொங்குதேர் வாழ்க்கை' என்ற அவர்தம் இலக்கிய நூல் 'கொங்குதேர் வாழ்க்கை' என்று குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள இரண்டாவது பாடலைப் பற்றிய விளக்க மாகும். ஈண்டும் ஒரு பாட்டினை ஒரு நூலாக விரிந் துரைக்கும் வியத்தகு ஆற்றல்-இலக்கிய ஆற்றல் டாக்டர் மு வ. அவர்களின் தனித் திறமையேயாகும். இந்நூலில் இலக்கியத்தின் இனிய பெற்றியினை டாக்டர் மு. வ. அவர்கள் புலப்படுத்தும் பாங்கு பாராட்டத் தக்கதாகும். கீழ்க்காணும் பகுதியினைப் படிக்கின்ற பொழுது 'இலக் கியச் செல்வி' எனப்படுவது இன்னதுதான் என்பது நமக்குப் புரிகிறது.

''இசைக்கும் இல்லாத தனிச்சிறப்பு ஒருவகையில் இலக்கியத்திற்கு உண்டு. இசை நுண்ணிய உணர்ச்சிகளை மட்டும் புலப்படுத்த, இலக்கியம் உணர்ச்சிகளைப் புலப்படுத்துவதோடு அறிவுக்கும் விருந்தாய் அமைகிறது. அதனால்தான் பாடுந்தோறும் கேட்குந்தோறும் இனிமை பயக்கும் இசைபோல் அல்லாமல் நினைக்குந்தோறும் பேசுந்தோறும் எப்போதும் இன்பம்பயக்கும் தனிச்சிறப்பு இலக்கியத்திற்கு உள்ளது உள்ளத்தைக் கனிவிக்கும் பெருஞ்சிறப்பு இலக்கியத்திற்கு அமைந்திருந்தால்தான் அது பல நூற்றாண்டுகளைக் கடந்தும் அழியாமல் வாழ வல்லதாய் விளங்குகின்றது. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழந்தமிழருடைய ஓவியம் எங்கே? சிற்பம் எங்கே? நாடகம் எங்கே? இசையும் எங்கே? சில மறைந்து போயின; சில திரிந்து நிற்கின்றன. பழந்தமிழ் இலக்கியம் ஒன்றுதான் இன்றுவரையில் நாம் பெற்று மகிழும் பெருங்கலைச் செல்வமாய்த் திகழ்கிறது. தலைமுறை தலைமுறையாக மக்கள் நினைந்து நினைந்து மகிழ்ந்து போற்றிக் காத்து வருதற்குரிய கலைச் செல்வமாக உள்ளது இலக்கியம்.

"இத்தகைய இலக்கிய மணத்தைத் தேர்ந்தறியும் பேறு பெற்ற தும்பிகளே புலவர்கள். மற்ற மக்கள் பணத்தையும் பதவியையும் உணவையும் இதையும் அதையும் தேர்ந்தறிய வல்லவர்களாக விளங்க இந்தப் புலவர் பெருமக்கள் மட்டுமே இலக்கிய மலர்களை நாடிக் கொங்கு தேர்ந்தறியும் பேறு பெற்றவர்களாக விளங்குகின்றார்கள்.

''ஆயின் தும்பிகளுக்கு வாய்த்த வாழ்க்கை தனிச்சிறப்புடையது. கொங்கு தேர்தலைத் தும்பி

பொழுது போக்காகக் கொள்ளவில்லை; அதையே வாழ்க்கையாகக் கொண்டுள்ளது. கொங்கு முகர்ந்த வாறே உள்ளத்தால் வேறு எதையும் நாடுவதில்லை. அதன் உள்ளம் ஒன்றிய வாழ்க்கை கொங்குதேர் வாழ்க்கை.

"இலக்கிய இன்பத்தைப் பலரும் நுகர்கிறார்கள். எந்தெந்தத் துறையிலோ வாழ்க்கையை நடத்திக் கொண்டே பொழுதுபோக்காக இலக்கியத்தை நாடு கிறார்கள், ஒரு சில வேளைகளில் இலக்கியத்தின் பக்கமாகத் தலையை நீட்டுகிறார்கள் என்று கூறலாம்; அவர்களின் மேல் குற்றம் இல்லை; அவர்கள் வாழ்க்கை அப்படி அமைந்தது, அவர்களைப்போல் அல்லாமல் இலக்கியத் தொண்டையே தொழிலாகக் கொண்டவர்கள் சிலர். அவர்களிலும் வயிற்றுப் பிழைப்புக்காக அதைச் செய்துவிட்டு உள்ளத்தால் வேறொன்றை எண்ணி ஏங்குவோரும் உள்ளனர். அவர்களைப்போல் அல்லாமல் இலக்கியத் துறை யையே உள்ளம் உவந்த தொழிலாகவும் தொண் டாகவும் ஏற்று மகிழ்கின்றவர்கள் ஒருசிலர்; அவர் களே இலக்கியத்தும்பிகள்; கலை உலகத்தில் கொங்கு தேர் வாழ்க்கை உடையவர்கள்.

"சிறகுகள் என்றவுடனே கற்பனை, அல்லது பாட்டு, அல்லது கலைஞரின் வாழ்க்கை நினைவுக்கு வருதல் இயல்பு.

"பறவைகள், புறத்தே சிறகுகள் பெற்று வாழ் கின்றன: கலைஞர், அகத்தே கற்பனை என்னும் சிறகுகள் கொண்டு பறந்து வாழ்கின்றனர். பறவைகள் வான வெளியை அளக்கின்றன; கலைஞரோ எங்கும்

எதையும் அளந்து உணர்கின்றனர்; மற்ற உயிர்களின் உள்ளமெல்லாம் பறந்து திரிந்து அவைகள் 'உணர்வன எல்லாவற்றையும் அளக்கும் ஆற்றல் உடையவை கற்பனைச் சிறகுகள்.

''எவ்வாறோ, கலைஞரின் வாழ்க்கை பறவை களின் வாழ்க்கையை நினைவூட்டுவதாக உள்ளது.

''மனிதன் நத்தையும் நண்டும்போல, ஆடும் மாடும்போல, மண்ணிலே பிறந்து மண்ணிலே வாழ் கின்றவனே ஆயினும் அவன் மனம் பறவைபோல் உயரஉயரப் பறந்து வானத்தில் தவழும் இயல்பினது. இவ்வாறு பறக்கும் இயல்புடைய மனத்திற்கு அமைந்த சிறகுதான் கற்பனை என்பது.

''மனம் கனவிலும் பறந்து திரிகின்றது; நனவிலும் பறந்து திரிகின்றது. கனவில் பறந்து திரியும்போது நம் விருப்பம்போல் பறக்க முடிவதில்லை. கள் உண்டவன் தன்வயம் இழந்து கள்ளின் மயக்கத்திற் கேற்ப இயங்குவதுபோல், கனவும் உறங்கும் நிலையில் அறிவின் மயக்கத்திற்கேற்ப நம் வயம் அன்றி நடை பெறுகின்றது, ஆதலின் நனவில் பறந்து திரியும் மனமே பெருமைக்கு உரியது.

''நனவில் பறக்கும் மனத்தின் ஆற்றல் அதன் கற்பனைத் திறனுக்கு ஏற்றவாறு அமையும்; உயர்ந்த கற்பனைகளிலே பழகியவரின் மனம் உயர்ந்த எல்லை களில் பறக்கவல்லதாம்; இழிந்த கற்பனைகளில் பழகியவரின் மனம் தாழ்ந்த எண்ணங்களிலே சுழலும். பேராசையும் பொறாமையும் பகைமையும். கொண்ட ஒருவன் தன் ஆக்கத்தையும் பிறன் அழிவையும்

பற்றிக் கற்பனைகள் செய்து குறுகிய எல்லைகளில் வாழ்நாளைக் கழிப்பான்.

"இத்தகைய அழகிய கற்பனைச்சிறகு வாய்ந்த புலவர்கள் தாம் இன்புற விழைகின்ற நெஞ்சத்தினர்: தாம் பெற்ற கற்பனை இன்பத்தைப் பிறரும் பெற வேண்டும் என்ற ஆர்வத்தினர். தாம் முயன்று எய்திய கற்பனை உலகத்தைப் பிறரும் எய்த வேண்டும் என்ற வேட்கையால் காவிய ஏணிகள் அமைத்துத் தரும் கருணையாளர். உண்மையாகவே காவியங்கள், உயரப் பறக்கும் மனம் இல்லாதவர்க்குக் கைகொடுத்து உயர இழுத்துச் செல்லும் கருவிகள், இத்துணைச் சிறப்பு அமைந்த காவியங்களைப் படைத்து உயர்ந்த வாழ்வு வாழுமாறு தூண்டுகின்றவர்களே புலமைத் தும்பிகள்.

"பழங்காலத்துச் சான்றோரின் உள்ளத்தில் உயர்ந்த உறவுக்கு உவமை தேடியபோது தும்பியின் தேன்கூடு அல்லது புலவரின் காவியம் உவமையாக வந்தமைந்தது. மலர்களின் கொங்கு தேர்த்து தும்பி இயற்றும் தேன்கூடும் இலக்கியங்களை ஆராய்ந்து புலவர் இயற்றிய காவியமும் சான்றோர்க்கு ஒரு நிகராகத் தோன்றின போலும்.

"தேன் நுகரும் தும்பிகள் பாடி மகிழ்வன; கூடிக் களிப்பன. பாடாமல் இருந்தாலும் அவைகளால் இயலாது; ஒருங்கே கூடாமல் இருந்தாலும் அவை களால் இயலாது. இந்த இரு பெற்றியும் இலக்கியத் தும்பிகளாகிய புலவரால் இயலாது. தம் போன்ற மற்றப் புலவர் பெருமக்களோடு அளவளாமல் இருத்தலும் இயலாது."

—கொங்குதேர் வாழ்க்கை; ப : 35-42

முல்லைத் திணை என்பது தமிழிலக்கியத்தில் கற்புத் தொடர்புடைய ஒரு சொல்லாகும். இந்த முல்லைத் திணையை அறிமுகப் படுத்தி 'முல்லைத்திணை' என்ற ஒரு நூலினை டாக்டர் மு.வ. அவர்கள் படைத்துள்ளார்கள். அந்த நூலை படிக்கிறபொழுது முல்லைத்திணையைப் பற்றி, அதன் இலக்கியப் பின்னணியினைப் பற்றி அறிந்தவர்கூட அறிந்துகொள்வதோடு அந்த முல்லைத் திணை விளக்கும் கற்பு நெறியினை இளம்கண்டு பாராட்டுகின்ற அளவிற்குத் தம்மைப் பதப்படுத்திக்கொள்கின்றவர்களையும் காணமுடியும். ஒரு தொடரை, ஒரு சொல்லை. ஓர் அடியை, உயிர்ப்பொருளை, ஓர் ஒழுக்கத்தினை எவ்வாறு அறிமுகப்படுத்தவேண்டும் என்றதற்குப் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

"மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்து நாகரிகத்தை வளர்ப்பதற்கு ஏற்ற நிலப் பகுதி இதுவே ஆகும். குறிஞ்சி நிலமாகிய மலைப் பகுதியில் மனிதன் இயற்கையை எதிர்த்து வென்று வயிறு வளர்க்கவேண்டும். வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருத நிலத்தில் மனிதன் இயற்கையை எதிர்பார்த்து நிற்காமல் உழைத்துப் பாடுபட்டு வயிறு வளர்க்கவேண்டும். கடற்பகுதியாகிய நெய்தல் நிலத்தில் வாழும் மனிதன் மற்ற நிலப்பகுதிகளின் உதவியை எதிர்பார்த்து வாழவேண்டும். முல்லை நிலத்தில் இயற்கையை எதிர்பார்த்து நம்பி வாழ வேண்டும். அங்கு வாழ்க்கை துன்பமாகத் தோன்றாமல் பொழுதுபோக்காகத் தோன்றக்கூடிய வகையில் இயற்கை மனிதனுக்குந் துணை செய்கிறது. ஆதலின் கவலை குறைந்த இனிய எளிய வாழ்க்கை முல்லை நிலத்தில் அமைந்திருக்கிறது.

"மனிதன் நாகரிகம் பெற்று வளரத் தொடங்கியது முல்லை நிலத்திலேயே ஆகும். மக்கள் ஓர் இனமாய்க் கூடிச் சமுதாயமாய் அமைந்தது முதல் முதலில் முல்லை நிலத்திலாகும், அதனால்தான், முல்லை நிலத்தில் பசுக்களை மேய்ப்பதற்கு உதவும் கருவியாகிய கோல், மக்களினத்தின் தலைவனுடைய ஆட்சிக்கு அறிகுறியாக அமைந்தது. அவன் ஏந்திய கோல் அவனுடைய குடிமக்கள் கோலாக நின்றது. அவன் நல்ல முறையில் நேர்மையாக ஆளும் காலத்தில் அந்தக் கோல் செங்கோல் எனப் புகழப்பட்டது. நாகரித்தின் தொடக்கமாகிய அக்காலத்தில் அந்தத் தலைவனுக்குச் செல்வமாக விளங்கியவை மாடுகளே. அதுபற்றியே மாடு என்றால் செல்வம் என்னும் பொருளும் அமைந்தது.

"இவற்றால், இனமாய்க் கூடி ஆட்சிமுறை அமைத்துச் செல்வம் சேர்த்த நாகரிகம் முல்லை நிலத்தில் தோன்றியதை உணரலாம்!"

—முல்லைத்திணை! 5 ப,5—6.

'நடைவண்டி' என்ற அவருடைய இலக்கிய நூல் அந்தத் தலைப்பிற்கேற்பவே ஒரு குழந்தை நடை பயில்வதற்கு நடைவண்டி எப்படிப் பயன்படுகிறதோ அதுபோலவே இலக்கியம் கற்பவர்க்கு 'நடைவண்டி' எனும் நூல் அருந்துணையாக அமைவதனை விளக்கி நிங்கின்றது.

"நங்கை ஒருத்தி நம்பி ஒருவனிடம் காதல் கொண்டாள். அவனுடைய அழகை மட்டும் கண்டு போற்றிக் காதல் கொள்ளவில்லை. அவனுடைய உள்ளப் பண்பையும் ஒருவாறு உணர்ந்து நம்பிக்கை கொண்ட பிறகே காதல் கொண்டாள். அவனும் அவ்

வாறு அவளுடைய அழகையும் பண்பையும் உணர்ந்து போற்றியே காதல் கொண்டான். இருவர் காதலும் வளர்ந்துவந்தன. இந்த வளர்ச்சிக்குத் தோழி ஒருத்தி துணையாக இருந்தாள். அந்தத் தோழி வாழ்க்கைப் பொறுப்பை நன்கு உணர்ந்தவள். ஆதலால் அறிவுரைகளைக் கூறியும் நெறிகளை உணர்த்தியும் அவ்வப்போது இருவர் நெஞ்சத்தையும் பண்படுத்திவந்தாள்.''

—நடைவண்டி; ப. 18

'புலவர் கண்ணீர்' எனும் அவர்தம் நூல் இலக்கியம் மனிதமனத்தை எவ்வாறு ஆழமாகச் சென்று தாக்கவல்லது என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளதனைக் காணலாம். புலவர்தம் துயர் மறந்து பிறர் துயருக்காக உருகும் நெஞ்சம் மறந்த நிலமையாளன் என்பதனை,

'வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே'

எனமுடியும் குடவாயிற் கீரத்தனாரின் புறநானூற்றுப் பாடலுக்கு (242) அவர் அறிமுக உரையாக எழுதியிருக்கும் கருத்துகள் கற்றோர் நெஞ்சம் களிவிப்பனவாகும்.

அன்பு பற்றியும், காதல் பற்றியும் டாக்டர் மு.வ. அவர்கள் தரும் விளக்கம் 'குறள் காட்டும் காதலர்' எனும் இலக்கிய நூலில் இனிது அமைந்துளளது.

"அன்பு வாழ்வை இயக்கும் பெருஞ் சக்தி, அதற்கு முன் மற்ற எல்லாம் மறைந்துவிடும். எவ்வளவு தடைகளையுப் கடந்து செல்லும் ஆற்றல் அன்புக்கு உண்டு. காதலரின் அன்பும் அத்தகைய ஆற்றல் உடையது. காதலிக்குக் காதலனுடைய காதல் பற்றியே

ஐயம் ஏற்படும்; வெறுப்பும் ஏற்படும். ஆனால், காதலன் ... வந்தவுடன், அந்தப் பழைய அன்பு தலையெடுத்துவிடும்; இடையே தோன்றிய சோர்வு, ஐயம், வெறுப்பு எல்லாம் மறைந்துவிடும். காதலனுடைய அன்பான மொழிகளைக் கேட்டவுடன், அவன் மேல் கொண்டிருந்த கடுமையான எண்ணங்கள் எல்லாம் பறந்து ஓடிவிடும். பழைய அன்பின் வயப் பட்டு நெஞ்சம் குழைந்துவிடும்.

''காதல் ஆற்றல் மிகுந்தது. நெஞ்சத்தின் உறுதி என்னும் கதவை...நாணம் என்னும் தாழ்போட்ட நெஞ்சக்கதவை...இந்தக் காதல் கோடரியாய் உடைத்துத் திறந்துவிடுகிறது. தம்மை வெறுத்து ஒதுக்கியவரின் பின்னே செல்லாத மானம் ஒன்று உண்டு. ஆனால் காதல் நோய் உற்றவர்கள் அறியாத ஒன்று அது. பலமாயங்கள் வல்ல கள்வனாகிய காதலனுடைய பணிவான மொழி என்னுடைய பெண்மையை உடைக்கும் படையாகிவிடுகிறது. அவரிடம் வெறுப்புக் காட்டி ஊடல் கொள்ளவேண்டும் என்று சென்றேன். ஆனால் என் நெஞ்சம் அவரிடம் கலந்து குழைவதைக் கண்டு தழுவினேன். கொழுப்பைத் தீயில் இட்டாற் போல் உருகும் நெஞ்சம் உடைய என் போன்றவர்களுக்கு ஊடல் கொண்டு நிற்போம் என்றும் வலிமை உண்டோ?" என்றாள்.

—குறள் காட்டும் காதலர்; ப : 99

ஒரு கடற்காட்சியினை டாக்டர் மு.வ. அவர்கள் வருணிக்கும் பாங்கு நெய்தல் நிலமே நம் கண்முன் வருகின்ற வகையில் அமைந்திருக்கக் காணலாம் அப்பகுதி வருமாறு :

"கடலில் காக்கைகள் சேர்ந்து நீராடும் காட்சி அழகியதொன்றாகும். கடலில் காற்று மோத அலைகளிலிருந்து பிசிர்கள் எழுந்து பொங்குவதும் மற்றோர் அழகிய காட்சியாகும். கடற்கரையில் மணல்மேட்டில் உள்ள நுண்ணிய மணல் துகளைக் காற்று வீசித் தூவும்போது, அவை மெல்லிய ஆடை போல் எழுந்து ஆடுகின்றன.

"செல்வம் மிக்க பெரிய வீட்டில் வரும் விருந்தினரைப் போற்றி மகிழ்வதற்காக மகளிர் முற்றத்தில் பலியாக இட்ட கொக்கின் நகம் போன்ற சோற்றைக் காக்கை தின்னும்.

"ஆண் காக்கை, நோன்பு நோற்கும் பெண்கள் கொய்து அழித்த அடும்பின் கொடிகளை உடைய மணல் பரப்பில் ஒரு பக்கத்தில் நிறைந்த சூலோடு தங்கிய பேடைக்காக அயிரை மீனைப் பிடிக்க உப்பங்கழியைத் துழாவிப் பார்க்கும்.

"கடற்கரையில் மணல்மேட்டில் அமரும் நாரைகளின் கூட்டம், வெண்ணிற ஆடை உடுத்த படை வீரர்களின் அணிவகுப்புப் போல் புலவர்க்குத் தோன்றுகிறது.

"நாரைக்கூட்டம் குவிந்த வெண்ணிற மணல் மேட்டில் ஏறி வரிசையாக இருக்கும் காட்சி, அரசருடைய காலாட்படையின் அணிவகுத்த கூட்டம்போல் தோன்றும்."

மேற்காணும் இவ் வருணனைகள் அவரது 'நற்றிணைச் செல்வம்' (ப : 56-59) எனும் நூல்வழி அறியலாம்.

மேலும் சங்க இலக்கியம் பரவ வேண்டும் என்பதற்கு டாக்டர் மு. வ. குறிப்பிடும் கருத்து வருமாறு :

"எவ்வளவு சிறப்புவாய்ந்த இலக்கியமாயினும் அதன் எதிர்காலம், கற்கும் மக்களைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு புறம், அதனை ஆழ்ந்து கற்று உணரும் புலவரும் வேண்டும். மற்றொருபுறம், அதன் கருத்தை உணர்ந்துபோற்றிப் புகழும் பொதுமக்களும் வேண்டும். பொது மக்களின் உள்ளத்தில் இடம் பெறாமல், புலவர் நெஞ்சில் மட்டும் வாழும் வாழ்வு போதாது. பொது மக்களின் புறக்கணிப்பு, இலக்கியத்தின் எதிர்கால வாழ்வுக்கு இடையூறாகும்.

"சங்க இலக்கியம் என்றால் என்ன என்று அறியாதவரும், அந்தத் தொடரைக் கேட்டறியாதவரும் பலர். இந்த நிலை தமிழகத்தில் இனியும் நீட்டித்தல் நன்றன்று. சங்க இலக்கியம் என்றால், எமது எமது என்று பெருமிதத்துடன் எண்ணும் நெஞ்சமும், கூறும் நாவும் இனி மிகுதல் வேண்டும். ஷேக்ஸ்பியர் போன்ற புலவர் பெருமக்களின் நூல்களுக்கு அத்தகைய சிறப்பான வாழ்வு அமைந்திருத்தலை மேற்கு நாட்டவரிடையே காணலாம்."

—நெடுந்தொகை விருந்து; முன்னுரை; ப : 3, 4.

'குருவிப்போர்' எனும் தம் இலக்கிய நூலில் 'வாழைத் தாய்' என்ற கட்டுரையில் அவர் வழங்கியுள்ள செய்திகள் இலக்கியக் கட்டுரை எழுதுவோர்க்கு இனிது பயன்படும். அவை வருமாறு :

"தாய்மையின் சிறப்பை விளக்குவதற்கு அவர் பற்பல சான்றுகளைக் காட்டத் தொடங்கினார்

மாணிக்கவாசகர் இறைவனை, "அம்மையே அப்பா" என்று விளித்தபோது முதலில், 'அம்மையே' என்றது தாய்மையின் சிறப்பாலேயே என்றார். மொழி தந்தைமொழி என்று கூறாமல், 'தாய்மொழி' என்றது ஏன் என விளக்கினார். தாயின் அன்புதான் கைம் மாறு கருதாதது என்றார். அன்பு மிக்க காதலரும் ஒருவரிடமிருந்து ஒருவர் ஏதேனும் நன்மை எதிர் பார்ப்பதாகவும், பெற்ற தாய் தன் குழந்தையிட மிருந்து எந்த உதவியும் எதிர் பாராமல் அன்பு ஒன்றே கருதி வளர்ப்பதாகவும் எடுத்துரைத்தார். கோழி யிடம் இந்தத் தாய்மை சிறந்து விளங்குவதாகச் சொல்லி, தாய்க்கோழி தான் தின்னாமலே தன் குஞ்சு களை அழைத்துத் தின்னச் செய்யும் அன்பை விளக் கினார்; கன்று ஈன்ற பசுவின் அன்புநெஞ்சத்தை விரித்துரைத்து, 'கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே' என்ற ஓர் அடியின் சிறந்த கருத்தைப் புலப்படுத்தினார்.

'வயிற்றில் பிறக்கும் மக்களுக்காகத் தன் வாழ் வையே தியாகம் செய்யும் மனப்பான்மையையும் தாயிடமே காணமுடியும் என்று அவர் அழுத்தந் திருத்தமாகக் கூறினார். நண்டு தேள் ஆகிய உயிர் கள் குஞ்சுககளை ஈன்றதும் மாய்ந்துவிடும் தன்மை யைக் குறிப்பிட்டார். வாழையும் ஏறக்குறைய இப் படித்தான் என்று சொன்னார். ஆனால், குலை தள்ளிய பிறகே (தாறு ஈன்ற பிறகே) மாய்கின்றது என்னும் வேறுபாட்டையும் எடுத்துக்காட்டினார்."

—குருவிப்போர்; ப : 31—33

தமிழின் முதற் காப்பியமாம் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகளைத் தமிழ்நாட்டிற்கு இலக்கியப் பண்புகள் மிளிர அறிமுகப்படுத்தியவர் டாக்டர் மு.வ. என்றே கூறலாம். இளங்கோவடிகளைத் தமிழராக, கலைஞராக, அறவோராகப் பார்த்த நெஞ்சம் டாக்டர் மு.வ. அவர்களுடைய நெஞ்சமாகும். 'இளங்கோவடிகள்' எனும் நூலில் 'கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை' என்று குறிப்பிட்டது மு.வ. அவர்களின் இலக்கிய ஈடுபாட்டினை இனிது புலப்படுத்தும்.

> "கலைகளில் சிறந்தது இலக்கியக் கலை. காலவெள்ளத்தைக்கடந்து நெடுங்காலம்நிற்கவல்ல ஆற்றல் மிக்க கலையும் அதுவேயாகும். தமிழ்நாட்டு மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் பார்க்கப் பலர் வருகின்றனர். உலகத்துப் பல நாடுகளிலிருந்தும் வருவோர் மாமல்லபுரத்தைக் கண்டு வியந்து பாராட்டுகின்றனர். இசை ஓவியம் முதலான மற்றக் கலைகளைவிட அழியாமல் திரியாமல் நெடுங்காலம் வாழும் திறன் சிற்பக் கலைக்கு உண்டு. ஆயினும் கால வெள்ளம் அதனையும் சிதைக்கின்றது; திரிக்கின்றது. மாமல்லபுரத்துச் சிற்பங்களில் சிதை பொருளையும் காணலாம். திரி பொருளையும் காணலாம். அவை ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இளங்கோவடிகள் இயற்றிய காவியக் கலையோ பதினைந்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்டதாகும். அந்தக் கலை சிதைவும் திரிபும் எதுவும் நேராமல் இளங்கோவடிகள் படைத்தது படைத்தவாறே விளங்கக் காண்கிறோம்."

—இளங்கோவடிகள்: பு: 100

டாக்டர் மு.வ. அவர்கள் இலக்கியங்களின்பால் நிறைந்த ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது அவர்தம் கூற்றால் விளங்கக் காணலாம்.

> ''தமிழகத்தின் முழுமணிகளாய் விளங்கி உலகிற்கு ஒளி பரப்பி வருவன சில. அவற்றுள் இங்குக் குறிக்கத் தக்கன இரண்டு; ஒன்று, திருவள்ளுவரின் திருக்குறள்; மற்றொன்று கண்ணகியின் கற்பு."

—கண்ணகி; முகவுரை; ப : 55

அடுத்து, இலக்கியக் கல்வியினை எவ்வாறு எய்த வேண்டுமென்பதற்கு டாக்டர் மு.வ. அவர்கள் தரும் விளக்கம் வருமாறு:

> "இலக்கியக் கல்வி பயன்படவேண்டுமானால், இலக்கியத்தை முதலில் உணர்ந்தறிய வேண்டும்; பிறகு ஆய்ந்தறிய வேண்டும். அப்போதுதான் இலக்கியத்தை நன்கு கற்கவும் முடியும்; கற்றதனால் பயன் பெறவும் முடியும்.
>
> ''உணர்ந்தறிவது என்பது இதயம் கொண்டு இலக்கியத்தை உணர்வது; புலவர் உணர்ந்தவாறே கற்பவரும் உணர முயல்வது; நூல் எழுதிய காலத்துச் சூழ்நிலைக்குள் புகுந்துநின்ற புலவர் காட்டியவாறு காண்பது; ஏன் எவ்வாறு என்ற கேள்விகள் அறியாமல் தன்னை மறந்து கற்பது; அறிவு குற்றேவல் செய்ய, உணர்வு முன் நின்று உணர்த்த, உணர்ந்து கற்கும் முறையாகும் இது.
>
> ''ஆய்ந்தறிவது என்பது மூளை கொண்டு நுணுகி இலக்கியத்தைக் கற்பது; புலவர் உணர்த்திய வற்றை இன்றைய உண்மைகளைக் கொண்டு

சீர்தூக்கிக் கற்பது; அவர் காலத்து வாழ்க்கையை இக்காலத்து வாழ்க்கையோடு ஒப்பிட்டு ஆராய்வது; எதற்கும் காரணகாரியப் பொருத்தம் கண்டு கற்பது; அறிவு தலைமை தாங்க, உணர்வு உற்றுழி உதவ, ஆராய்ந்து கற்கும் முறையாகும் இது."

'கண்ணகி' எனும் இலக்கிய நூலில் கண்ணகி குறித்து டாக்டர் மு.வ. அவர்கள் வழங்கும் கருத்துகள் வருமாறு:

"கற்பின் ஞாயிறு கண்ணகி, தமிழகத்தின் கீழ்த் திசையில் தோன்றிக் கற்பொளி பரப்பி விளங்கியது; சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினம் திருமண வாழ்த்தொலியைக் கேட்டது. தமிழகத்தின் நடுவே அந்த ஞாயிறு கடுமையாய்க் காய்ந்தது; பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை, சீற்றம் மிக்க வீரவுரையைக் கேட்டது. தமிழகத்தின் மேற்குத் திசையில் அந்த ஞாயிறு சாய்ந்தது; மறைந்தது; சேர நாட்டின் தலைநகராகிய வஞ்சிமாநகரம் வழிபாட்டின் வாழ்த்தொலியைக் கேட்டது."

—கண்ணகி; ப: 110

'மாதவி' எனும் நூலில் இறுதியில் மாதவி குறித்து மு.வ. அவர்கள் கூறும் கருத்துகள் வருமாறு:

"கோவலன் கண்ணகியிடத்தும் காதல் கொண்டான்; மாதவியிடத்தும் காதல் கொண்டான். கண்ணகியுடன் வாழ்ந்த வாழ்க்கையில் எளிமையும் தூய்மையுமே கண்டான்; கலையும் திறனும் காண வில்லை. கொண்ட குறிக்கோளும் பெற்ற பண் பாடுமே போதும் என்று வாழ்ந்தவள் கண்ணகி

கணவனுடைய மனவளர்ச்சிக்கு ஏற்றவாறு தானும் கற்று வளர விரும்பவில்லை; "கற்பனவும் இனி அமையும், காதலனுடைய அன்புதான் வேண்டும்" என்று எந்த உணர்வையும் நாடாமல் நின்றாள்.

"கண்ணகியின் வாழ்வுகணவனுக்காகவே வாழ்ந்து கணவனுக்காகவே முடிந்தது. மாதவியின் வாழ்வு காதலில் நின்று பிறகு அதையும் கடந்து அறத்துறையில் சென்றது. மனம் மாறிய மாதவி, பிறந்த குடும்பத்தின் தீமையை வேருடன் களைந்தாள். அது போன்ற மற்றக் குடும்பங்களின் சீர்திருத்தத்திற்கு வழிகாட்டியாக விளங்கினாள். பெரும் புரட்சி செய்தாள், உலகம் புகழுமாறு உயர்நிலை உற்றாள் மாதவி."

—மாதவி; ப : 86—87

ஒரு பாட்டிற்கு விளக்கமாக ஒரு நூலே எழுதும் திறம் பெற்ற டாக்டர் மு.வ. அவர்கள் ஒரு பாட்டிற்கு ஒருபக்கமே விளக்கமாக எழுதின எளிய சொற்களால் அரிய கருத்துகளைப் புலப்படுத்தியிருக்கும் பாங்கு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும். பெருங்கண்ணன் எனும் குறுந்தொகைப் புலவர் பாடிய பாடல் வருமாறு:

"புள்ளும் புலம்பின; பூவும் கூம்பின;
கானலும் புலம்புநனி உடைத்தே; வானமும்
நம்மே போலும் மம்மந்த்து ஆகி
எல்லை கழியப் புல்லென் றன்றே
இன்னும் உலானே தோழி இந் நிலை
தண்ணந் துறைவர்க்கு உரைக்குநர்ப் பெறினே"

—குறுந்தொகை : 310.

இப் பாடலுக்கு விளக்கமாக மு.வ. அவர்கள் தரும் செய்தி ருமாறு :

"திருமணத்திற்குப் பொருள்தேடச் சென்ற தலைவன் பிரிந்து பல ஆண்டுகள் ஆயின. மாலை நேரங்களில் தலைவியின் துயரம் பெருகிற்று, பறவைகளின் ஒலி, மலர்கள் குவிதல், கடற்கரைச் சோலையின் அமைதி, வானத்தில் ஒளி குறைதல் இவை யாவும் மாலைப்பொழுது வந்ததையும் இன்னும் தலைவன் வராததையும் நினைவூட்டி அவளை மேன்மேலும் கலங்கச் செய்தன. இந்த நிலையில் தலைவி தான் உயிர்வாழப் போவதில்லை என வருந்தினாள். எனினும், தலைவனிடம் தூது சென்று அறிவிப்பவர் யாரேனும் இருந்தால் இன்னும் உயிர் வாழ இயலும் எனத் தோழியிடம் கூறினாள்.

"பறவைகளும் ஒலித்தன. மலர்களும் கூம்பின. கடற்கரைச் சோலையும் தனிமைமிக உடையதாகி, பகலின் ஒளி குறையவே பொலிவு அற்றதாயிற்று. இன்னும் யான் உயிரோடு இருப்பேன் தோழி; இந்த என் நிலைமையைத் தலைவர்க்குத் தூது சொல்வோர் வாய்த்தால் இன்னும் உயிரோடு இருப்பேன்."

—குறுந்தொகை விருந்து; ப: .

'தமிழ் நெஞ்சம்' என்ற தம் நூலில் இலக்கியத்திற்கும் அறிவியலுக்கும் இடையே அமைந்துள்ள வேறுபாடுகளை மு.வ. அவர்கள் விளக்கமாக விரித்துரைத்து உள்ளார்கள். மேலும் மு.வ. அவர்கள் சிக்கலான பாலியல் செய்திகளை உவமை நயத்துடன் எளிமையாக விளக்கியுள்ளார்கள்.

டாக்டர் மு.வ. அவர்கள் ஓர் உயர்ந்த இலக்கியப் படைப்பாளர்; அதேநேரத்தில் அரிய இலக்கியங்களை எளிமையாகப் பழகு தமிழில் உணர்ந்தியவர். பலாப்

பழம் போல் விளங்கும் சங்க இலக்கியப் பாடல்களைப் பாடுபட்டுப் பிரித்துப் பலாச்சுளைகளைக் தமிழ் இனத்திற்குத் தந்தவர். பக்திப் பாடல்களைப் படிப்பவர் மனத்தில் பதியும்வண்ணம் பாங்குறத் தந்தவர். இலக்கியச் செவ்வி அறிந்தவர்; இலக்கியப் பற்று மிகுந்நவர்.

சுருங்கச் சொன்னால் அரியவற்றையெல்லாம் எளிதில் விளக்கியவர்.

## 2. டாக்டர் மு.வ. வின். புதின வளம்

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் நன்கு அறிமுக மான பெயர்—ஒலிக்கின்ற பெயர் டாக்டர் மு.வ. என்பதாகும். அப்பொழுதெல்லாம் திருமணம் நடைபெறுகிறதென்று சொன்னால் அந்த வீட்டில் டாக்டர் மு.வ. அவர்களுடைய நாவலைப் பரிசாகக் கொடுப்பார்கள். இவர்கள் தமது 'செந்தாமரை' தொடங்கி 'வாடாமலர்' வரையில் ஒவ்வோர் ஆண்டு விடுமுறையிலும் ஒரு நாவல் எழுதினார்கள். இதற்கென ஒரு திட்டம் வைத்திருந்தார்கள். ஒருமுறை எந்த வசதியும் இல்லாத ஒரு பள்ளிக்கூடத்தில் நாவலை எழுதிக் கொண்டிருந்த பொழுது அந் நாவலில் ஓரிடத்தில் தன்னையும் அறியாமல் அழுது விட்டதை ஒரு சிறுவன் பார்த்துவிட்டு அருகில் உள்ளவர்களிடம் ஓடிப்போய் அங்கு ஒருவர் உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கிறார் என்று அவன் கூறிய பிறகுதான், அவருக்குத் தான் அழுததே தெரியவந்ததாகக் கூறுவார்கள். இதை இங்குக் குறிப் பிடுவதற்குக் காரணம், அவர்கள் நாவல் எழுதுகிற பொழுது அந்த நாவலின் பாத்திரத்தோடு ஒன்றிப் போய் விடுவார்கள்.

அடுத்து, பாத்திரப்படைப்பு என்று நாம் பார்க்கிற பொழுது, அவர் தாம் சந்தித்த சமுதாயத்தில், அவரது வாழ்க்கையில் தாம் சந்தித்த மனிதர்களை, அவற்றிற்கு உணர்வும் உயிரும் கொடுத்து நாவலாக

ஆக்குவார்கள். சாதாரணமாக நாவல் எழுதுவதற்கு முன்பு அதில் உள்ள பாத்திரங்களைப் பற்றிய குறிப்பினை எழுதிக்கொள்வார்கள். 'கயமை' என்ற ஒரு நாவலில் இடம்பெறும் 'ஆணவர்' என்ற பாத்திரத்தை எடுத்துக்கொண்டால், இந்த 'ஆணவர்' இன்னவரைப் போன்றவர் என்று கல்கி அவர்களைப் போன்று குறிப்பு எழுதிவைத்துக் கொள்வார்கள். இப்படி, தாம் சந்தித்த சமுநாயத்தில், காணும் மனிதர்களுக்கு உணர்வும் உயிரும் கொடுத்து தம் நாவல்களை ஆக்கினார்கள்.

ஒரு முறை சேலத்தில் நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு, பொற்கிழி வழங்கும் விழா ஒன்று நடந்தது. அப்போது ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக இருந்தார். அவர்களோடு, டாக்டர் மு.வ. அவர்களும், கல்கி அவர்களும் ரயிலில் முதல் வகுப்பிலே பயணம் செய்தனர். கல்கி அவர்கள் முதல் அமைச்சரிடம் டாக்டர் மு.வ. அவர்களை அறிமுகப்படுத்திப் பேசும்போது, "இவர்தான் டாக்டர் மு.வ. இவர்கள் பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியராக இருக்கின்றார்" என்றெல்லாம் கூறிவிட்டு, "இன்று தமிழ்நாட்டிலே இவருடைய நாவல்கள்தான் என்னுடைய நாவல்களைவிட அதிகம் விற்பனையாகின்றன" என்று சொல்லி இருக்கின்றார். உடனே ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் சற்று அயர்ந்து இருந்துவிட்டு. "உண்மையிலேயே சொல்கிறீர்களா? உங்கள் நாவல்களைவிட இவர் எழுதிய நாவல்கள் அதிகம் விற்கின்றனவா." என்று வியந்து கேட்டார்களாம். அதற்கு, கல்கி அவர்கள் "ஆமாம், என் நாவல்களைவிட இவர் நாவல்கள் அதிகம் விற்கின்றன" என்று கூறினார்களாம். இது ஒரு நிலை.

ஆனால், தொடக்கத்தில் இவருடைய முதல் நூலை வெளியிட யாரும் முன்வரவில்லை. இவருடைய முதல் நாவலான 'செந்தாமரை'க்கு முதலில் இவர் வைத்தபெயர் 'முருங்கைமரம்' என்பதாகும். அந்தப் பெயர் அந் நாவலுக்குப் பொருத்தமாக இல்லை என்று சொல்லி, அதை மாற்றிச் 'செந்தாமரை' என்று பெயர் வைப்பதற்குக் காரணமாக இருந்தவர் அவர்களுடைய முதன்மை மாணவராகிய மதிப்பிற்குரிய பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் ஆவர்.

அந்நாவலில் செந்தாமரை என்ற பெண் காதல் வயப் பட்ட ஒரு நிலையில் விளங்குகிறாள். இந்தப் படைப்பில் இடம்பெறுகிற ஒரு பாத்திரம் ஒரு கேள்வி கேட்கிறது. இந்தப் பெண்கள் இந்த நாட்டிலே எப்படி வாழ வேண்டு மென்று பெரியவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னால் "வெளியே நிற்கக்கூடாது. கதவை ஒருக்களித்துவிட்டு வெளி உலகத்தைப் பார்க்கலாம். அப்படி வெளி உலகத் தைப் பார்த்தாலும் அங்கே போகிறவர்களிடத்திலே பேசக்கூடாது. அப்படியே பேசினாலும் ஒரு வாக்கியத்தை முழுமையாகப் பேசக்கூடாது என்று இந்த உலகம் சொல் கிறது. இப்படி எந்தத் தொல்காப்பியனாரும் சொல்ல வில்லை." என்று பேசுகிறது.

இதை நாம் சற்று ஆழ்ந்து பார்ப்போமேயானால், 'குறுந்தொகை'யின் எதிரொலியாக இதனைப்பார்ககலாம்:

"வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரில் துஞ்சலோ இலளே"

—குறுந்தொகை; 292

சங்க இலக்கியம் முழுவதும் நாம் பார்ப்போமே யானால் இப்படிப்பட்ட ஓர் அடியை வேறெங்கும் பார்க்கவே முடியாது.

ஒரே ஒரு நாள் தெருவில் யாரோ ஒருவன் போனான். அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான். அவனை எனக்குத் தெரியாது. நான் அவனைப் பார்த்துச் சிரிக்கவில்லை. ஆனால் என்னுடைய தாய் அதனைக் கவனித்துவிட்டாள். அன்றிலிருந்து, "அவன் யார்? உன்னைப் பார்த்துச் சிரித்தானே அவன் யார்? அவனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு" என்றெல்லாம் கேட்டு என்னுடைய தாய் என்னைக் கொடுமைபடுத்திக் கொண்டிருக்கிறாள். ஆகவே, 'நரகத்திலே எவ்வளவு அதிக துன்பம் இருக் கிறதோ அங்கு என்னுடைய தாய் செல்லவேண்டும்' எனது தாய் 'நீங்குதல் இல்லாத நரகத்தில் 'துன்புறு வாளாக' என்று தன்னைப் பெற்ற தாயையே கடிந்து கொள்கின்ற ஒரு பெண்ணை இங்கு நாம் பார்க்கிறோம். அதுவும் குறுந்தொகையிலே ஒரே ஓர் இடத்தில் நாம் பார்க்கின்றோம். வேறு சங்க இலக்கியங்களில் இப்படிப் பட்ட ஓர் ஆழமான வியப்பான உணர்ச்சி புலப்படுத்தப் படுவதை நாம் பார்க்க முடியவில்லை.

அதுவும் உவமை வாயிலாகப் பேசுகிறார்.

''மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை''

குளிப்பதற்கு என்று ஒரு பெண் போகிறாள். அதுவும் ஆற்றிலே குளிக்கிறாள். அப்பொழுது அந்த ஆற்றிலே ஓர் அழகான மாங்காய் அடித்துக்கொண்டு வந்தது. அதனை அவள் எடுத்துத்தின்றுவிடுகிறாள். உடனே அந்த நாட்டி னுடைய சொந்தக்காரன்—அரசனுடைய காவலர்கள் அவளைப் பிடித்துவிடுகிறார்கள். அவளை அரசன் முன்

னிலையில் கொண்டுபோய் நிறுத்துகிறார்கள். அரசன் அவளுக்குத் தண்டனை கொடுக்கிறான். அவையிலுள்ள சான்றோர்கள் அவளுக்காகப் பரிந்துபேசுகிறார்கள். அத் தண்டனைக்குப் பதிலாக அப் பெண்ணின் தந்தை அவள் எடைக்கு எடை பொற்பாவையோடு எண்பத்தொரு ஆண் யானைகளையும் கொடுப்பதற்கு முன்வந்ததையும் ஏற்றுக் கொள்ளாது, அந்தப் பெண்ணைக் கொலை செய்த நன்னனைப் போல, நீங்காத நரகத்தில் தன் அன்னையும் துன்புறுவாளாக என்று கூறுவதாக அமைந்துள்ளது. இதையே 'பெண்கொலை புரிந்த நன்னன் போல' என்று சொல்கிறார்.

அந்தக் காலத்திலே நீதிக்குப் பெயர் பெற்றவர்கள் கோசர்கள். அந்தக் கோசர்கள் ஒரு குறிப்பிட்ட பொது இடத்திலே நான்கு பேர்—ஊருக்கு வெளியிலே ஆல மரத்தினடியிலிருந்து நீதி சொல்வார்கள். அவர்கள் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்கு வந்தவுடனே அவர்களோடு வந்திருப்பவர்கள் கொம்பு ஊதி ஒலி எழுப்புவார்கள். அதனைக்கேட்டு அனைவரும் வருவார்கள். அவர்கள் ஒரே ஒரு சொல் மட்டுமே சொல்வார்கள். ஒரு சொல் சொல்லிவிட்டு அடுத்த ஊருக்குப் போய்விடுவார்கள். அந்த 'ஒன்று மொழிக் கோசர்கள்' வந்து தங்கிய இடம் 'கோசமுத்தூர்' என்றானது. அது தற்பொழுது 'கோயமுத்தூர்' என்று ஆகியுள்ளது. இவ்வாறு இரா. இராகவையங்கார் அவர்கள் தாம் எழுதிய 'கோசர் ஓர் என்ற சிற்றாராய்ச்சி' என்ற நூலிலே எழுதியிருக்கிறார். அசோகருடைய கல்வெட்டு இவர்களைச் 'சத்தியபுத்திரர்' என்று பேசுகின்றது. அந்தச் சத்திய புத்திரர்கள் இந்தக் கோசர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று ஆராய்ச்சிகள் சொல்கின்றன. அந்தக் கோசர்கள், பெண் கொலை புரிந்த

நன்னனைத் தண்டிக்கவேண்டுமென முடிவெடுக்கிறார்கள். இக் கோசர்கள் பின்னாளில் நன்னனின் அந்த மாங்கவும் தந்த மரத்தையே—நாட்டினுடைய காவல் மரத்தையே வெட்டி விடுகிறார்கள். காவல் மரம் என்று சொன்னால் அதனை அரசனைப் போல மதிக்கவேண்டியது மக்கள் கடமையாகும்.

**"...............................நன்னன்**
**நறுமா கொன்று நாட்டிற் போகிய**
**ஒன்றுமொழிக் கோசர் போல**
**வன் கட் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே"**

—குறுந்தொகை; 73

இப்படிப்பட்ட ஒரு புரட்சியை நாம் காணுமாறு டாக்டர் மு.வ. அவர்கள் தம்முடைய முதல் நூல் 'செந்தாமரை'யிலேயே எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

புரட்சியான கருத்துகளை முதல் நூல்லிலேயே வைத்து எழுதியுள்ளார் டாக்டர் மு.வ. என்பது விளங்கும்.

'கள்ளோ? காவியமோ?' நாவல் ஒரு மிகப் பெரிய புரட்சியை—குடும்பப் புரட்சியைச் செய்கின்ற நாவல் ஆகும். இந்நூல் வெளிவந்தபோது அதனைப் படித்து விட்டுப் பல பெண்கள் பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கல்வியில் உயர்ந்த ஒரு பெண்ணும், கல்வியில் குறைந்த ஓர் ஆணும் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்த உதவியது "கள்ளோ காவியமோ" தான் என்று அக் கடிதத்தில் கண்டிருந்தது. ஒரு வீட்டு வேலைக்காரியை மணந்தான் ஓர் இளைஞன். அந்தப் பெண் நல்ல பண்புடையவள் என்று கருதுகின்றான். அவள் பெயர் மங்கை. நல்ல பண்புள்ள ஒரு பெண்ணின் பெயரை மங்கை என்று பெயந்

வைக்கக் காரணம் என்னவென்றால், அவருக்குப் பிடித்த பெயர் புனிதவதி, திலகவதி, மங்கையர்க்கரசி என்பன வாகும். இந்த மூன்று பேர்களும்தான் தமிழை—தமிழ்ப் பன்பாட்டை—தமிழ்ச் சமயத்தை மீட்டுக்கொடுத்தார்கள் என்பது டாக்டர் மு.வ. வினுடைய அசைக்கமுடியாத நம்பிக்கை. இந்த மூன்றுபேரும் உறுதியாக இருக்க வில்லை என்று சொன்னால் நம்முடைய தமிழ் இன்றைக்கு இருந்திருக்காது என்று சொல்வார்கள்.

'மங்கை' என்ற பாத்திரம் வீட்டு வேலைக்காரி, அவளுடைய நற்பண்புகள் அந்த வீட்டுக்காரருடைய பிள்ளை 'அருளப்பனு'க்குப் பிடித்து விடுவதனால் அவன், அவளைத் திருமணம் செய்துகொள்கிறான். ஆனால், சிக்கல் எங்கே உண்டாகின்றது? ஓர் இரக்கத்தின்பால் அவன் அவளைத் திருமணம் செய்து கொண்டானோ? என்கிற ஒரு நிலையை அவர் நாவலின் பிற்பகுதியில் எடுத்துக்காட்டுகின்றார்.

பல ஆண்டுகள் மாதவியோடு மகிழ்ந்து வாழ்ந்தவன் கோவலன்,

> "ஆடல் மகளே யாதலின் ஆயிழை
> பாடுபெற் றனளைம் அப்பைந்தொடி..."

இப்படிப்பட்ட ஓர் எண்ணம் அவனுடைய உள்ளத்தின் ஆழத்தில் இருத்திருக்கின்ற காரணத்தினாலேதான் அப்படி அவன் சொல்லியிருக்கிறான். அவனுடைய உள்ளத்தின் ஆழத்திலே அது இல்லை என்று சொன்னால் இப்படிப்பட்ட ஒரு சொல்லை அவன் சொல்லியிருக்க மாட்டான். அதனாலே அவனுடைய அடிமனத்தின் ஆழத்தில் அந்தக் கருத்து இருந்திருக்கிறது. 'ஆடல்

மகளே ஆதலின்' என்று அவன் சொல்லக்கூடாது. ஆனால் அவன் சொல்லிவிட்டான்.

அதே போலத்தான் இன்னோர் இடத்திலே அவர்களுடைய வாழ்க்கையிலே பிளவு ஏற்படுகிறது.

டாக்டர் மு வ. அவர்களின் நாவல்களின் மையக் கருத்துகள் அனைத்தும் சங்க இலக்கியங்களிலிருந்தும் சிலப்பதிகாரத்திலிருந்தும் பெறப்பட்டவை ஆகும்.

ஏனென்றால், இந்த இரண்டு இலக்கியச் சான்றோர்களும் அவர்களுக்குப் பிடித்த சான்றோர்கள்.

இங்கேதான் சற்று ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்வேண்டும்.

**"மாதவி தன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்"**
என்று சொல்கிறார்.

அப்பொழுது,

**"திங்கண்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சிக்**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்வாழி காவேரி**
**கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்**
**மங்கை மாதர் பெருங்கற்பென் றறித்தேன் வாழி காவேரி"**

என்று பாடுவதைக் காண்கிறோம்.

இங்கே நாம் மங்கை, மாதர், பெருங்கற்பு என்ற மூன்று சொற்களை நோக்குவோம்.

காவிரிக்குச் சொந்தக்காரன் சோழன். ஆனால் இந்தச் சோழன் கங்கையிடம் போய்விட்டான். அப்படி கங்கை

யிடம் போனாலும் காவிரி அவனைக் கோபித்துக் கொள்ள வில்லை. அதுபோல, கண்ணகிக்கு உரிமையுடைய கோவலன் இப்பொழுது கங்கையாகிய மாதவியைக் கொண்டு விட்டான். அப்படி மாதவியைக் கொண்டாலும், கண்ணகி அவனோடு ஊடவில்லை. இதைப் பின்னாளில் மாதவியைக் கண்ணகி கொஞ்சம் கூடக் கோபித்துக் கொள்ளவில்லை என்று தனது வஞ்சிக்காண்டத்திலே பேசுகிறார் இளங் கோவடிகள்.

இப்படி, கங்கையை அடிப்படுத்திய அந்தக் கோவலன் —காவிரிக்குச் சொந்தக்காரனாக இருக்கின்ற கோவலன்— இவனை அந்தக் காவிரி கோபித்துக் கொள்ளவில்லையே என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் என்றால், வழிவழியாக இந்த நாட்டிலே இருந்து வருகிற கற்புதான் காரணமாகும். ஆகவே, கண்ணகியை அவன் நெஞ்சம் நினைந்துவிட்டது என்று நுட்பமான மனத்தை உடைய— கலைமனத்தை உடைய மாதவி குறைகாண்கிறாள். அதனாலேதான் அவள் எதிர்ப்பாட்டுப் பாடுகிறாள்.

அந்த வகையிலேதான் இங்கே ஒரு கற்புடைய மனைவியின் கடமை?

"ஆண்கடன் அகறல் அதுநோன் றொழுகுதல்
மாண்பொடு புணர்ந்த மாசறு திருநுதல்
கற்புடை மகளிர் கடனெனக் காட்டி"

என்று பெருங்கதை பேசுகிறது.

ஒரு குலமகள், தன் கணவன் எவ்வளவுதான்கொடுமைப் படுத்தினாலும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது ஒரு மரபு.

அந்த வகையிலே இல்லாமல் இங்கே எதிர்ப்பாட்டு பாடுகிறாள் மாதவி. இப்பண்பு கண்ணகியிடத்திலே காண முடியாதது. இவளும் ஒருவனிடத்திலே காதல் கொண்டவள் போல எதிர்ப்பாட்டுப் பாடுகிறாள்.

"தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்"

இது கலையில் இருக்கிற ஒரு நிலை. ஏன் என்று கேட்டால் கலையில் மேம்பாடுடையவர்கள் கலையிலே தோற்கக்கூடாது என்று நினைப்பார்கள் இன்றைக்கும் அது உண்டு. அதை நீங்கள் திரைப்படத்திலே கூடப் பார்க்கலாம் 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' என்ற திரைப் படத்திலே இரண்டு பேருக்கும் இடையே யார் வெற்றி பெற்றார்கள் என்பதற்குப் பதிலாக, இறுதியில் மின்சாரத்தை நிறுத்திவிடுவதாகக் கதையை முடித் துள்ளனர்.

இதற்குக் காரணம் வாழ்க்கையில் தோற்றுப் போவதை ஏற்றுக் கொண்டாலும் கதையிலே கூட, கலைஞர்கள் தம் கலையில் தாம் தோற்றுப்போவதை விரும்பமாட்டார்கள். அப்படிப்பட்ட ஒருநிலையில்தான் "கள்ளோ? காவியமோ?" நாவலில் நாம் பார்க்கிறோம்.

இக் காவியத்திலே அக் கதை நாயகன் ஒரு வேலைக் காரியை விரும்பி மணக்கிறான். ஆனால் அவன் உள்ளத் தின் ஆழத்திலே அவனுக்கு தவறான எண்ணம் இருக்கின்ற காரணத்தினாலே என்ன இருந்தாலும் இவள் வேலைக் காரிதானே, அந்தப் புத்திதானே இருக்கும், என்று

சொல்லிவிடுகிறான். அதனால் அவர்கள் குடும்பத்திலே ஒரு பிளவு ஏற்பட்டுவிடுகிறது. இது எதனாலே? அந்தப் பெண்ணினுடைய உள்ள உணர்வுகளை, உடல் இயல்புகளை அவன் அறிந்துகொள்ளாமல் போனதனால் தன்னுடைய தோழன் வருகிறபொழுது அவள் வந்து கதவைத் திறக்கவில்லை; சரியாக உபசரிக்கவில்லை என்று சொல்கிறான். ஆனால், அவளுக்கு மாதவிலக்கு என்ற காரணத்தினாலே அவள் உடல் சோர்வு, மற்றும் வயிற்று நோய் காரணமாக அவள் தன்னுடைய கடமைகளைச் சரியாகச் செய்யமுடியவில்லை என்பது பின்னாலே அவனுக்குத் தெரியவருகிறது. இதை அவன் புரிந்துகொள்ளத் தவறிவிட்டான். ஒரு கணவன் என்றால் இவற்றைப் புரிந்துகொண்டிருக்கவேண்டும். அவளுடைய உடற் கூறுகளை, உள்ள இயல்புகளை, உள்ள உணர்வுகளைத் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். இயல்பாக எல்லோருடைய வீட்டிலும் நடக்கக்கூடிய நிகழ்ச்சிதான். ஆனால் அந்த ஒரு சிறுநிகழ்ச்சி. அன்பால் இணைந்திருக்கக்கூடியவர்களுடைய வாழ்க்கையைப் பிரித்துவிட்டது. அவ்வாறு அவர்கள் பிரிந்துவிடுவதற்குக் காரணமாக இந்த நிகழ்ச்சி அமைந்துவிட்டது என்பதை வைத்துக்கொண்டு 'கள்ளோ காவியமோ' என்ற நாவலை அமைத்துள்ளார்.

ஆகவே, அந்தக் 'கள்ளோ காவியமோ'வைப் படித்துப் பார்க்கிறபொழுது, அன்பால் இணைந்த இரண்டு உள்ளங்கள் பிரிந்து போய்விடுகின்றதனையும் அந்தமங்கைப் பாத்திரம் அவலப் பாத்திரமாகப் பின்னர்ப் போய்விடுகின்றதையும் நாம் பார்க்கின்றோம். அவளுக்குப் பிறக்கிற அந்தக் குழந்தை அவளை விரும்பவில்லை, அக்குழந்தை— தன்னுடைய தந்தையினிடத்திலே வளர்கின்ற 'தேன்மொழி'— சின்னஞ்சிறு குழந்தை. அச் சின்னஞ்சிறு

குழந்தைகூட, தன் தாயை வெறுக்கிறது. ஏனென்றால் தாயினிடத்திலே அக் குழந்தை வளரவில்லை. தன் தாயை அது மதிக்கவில்லை என்கிற பொழுது அந்த நாவலின் முத்தாய்ப்பை பின்வருமாறு வைக்கிறார் மு. வ.

> ''தேன்மொழி தன் தாயின் கன்னத்தைத் தொட்டாள்; தடவினாள். ''அம்மா'' என்றாள். மூடியிருந்த கண்கள் திறந்தன; நன்றாகப் பார்த்தன; என்னையும் பார்த்தன. முகம் மலர்ச்சி பெற்றது.

> ''அந்தக் குடும்பவிளக்கு அணைவதற்கு முன்னே ஒருமுறை அழகாக ஒளி வீசியது"

—கள்ளோ? காவியமோ? ப, 267

இந்தச் சொற்களையெல்லாம் நாம் பார்க்கவேண்டும். இப்படி, சொற்செட்டாக, ஒவ்வொரு சொல்லிலும் அந்த அவலத்தைக் கோத்துக் கோத்து எழுதுகிறவர் டாக்டர் மு.வ. அவர்கள்.

புதினத்தைப் பொறுத்தவரையில், பத்திரிகைகளில் தொடர்கதையாக வெளிவந்தபிறகே, அதனை நூலாக அச்சிடப் பதிப்பாளர்கள் முன்வருவார்கள். ஆனால், டாக்டர் மு.வ. அவர்களின் நூல்கள் பதின்மூன்று நூல்களில் பதினொரு புதினங்கள் நேரடியாக நூல்களாக வெளிவந்திருக்கின்றன. மற்ற இரண்டும்கூட நட்பின் காரணமாக தங்களது பத்திரிகையின் விற்பனைக்காக அவைகளைத் தொடர்கதையாக வெளியிடவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்காகத்தான் அப் பத்திரிகையில் வெளியிட்டார்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்த இரண்டு நாவல்களைத் தவிர மற்ற நாவல்கள்

முழு நாவல்களாக வெளிவந்திருக்கின்றன. இது தமிழ் நாட்டிலே எந்த ஓர் ஆசிரியருக்கும் அக்காலத்தில் கிடைக்காததொரு பெருமையாகும்.

டாக்டர் மு.வ. அவர்கள் ஆழ்ந்த அன்புள்ளம் கொண்டவர். ஒருவருடைய துன்பத்திலே பங்குகொள்ள வேண்டும் என்கிற மனம் உடையவர். அவரது நாவலில் உரையாடல்தான் அதிகம் என்று சில திறனாய்வாளர்கள் கூறுவார்கள். ஆனால், அந்த உரையாடல் மூலமாக ஒருவனுடைய உள்ளத்தைத் தூய்மைப்—படுத்தலாம் என்று எண்ணுகிறவர் டாக்டர் மு.வ அவர்கள். இதுதான் அவர்களுடைய நாவலுக்கும் மற்றவர்களுடைய நாவலுக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஆகும்.

ஒரு தமிழன் என்று சொன்னால், மூன்று நூல்களை வாங்கவேண்டுமென்று குறிப்பிடலாம். அவை என்ன நூல்கள் என்று பார்த்தால் ஒன்று டாக்டர் மு.வ. அவர்களின் "தங்கைக்கு"; இரண்டாவது பாவேந்தர் பாரதிதாசனுடைய ''குடும்ப விளக்கு"; மூன்றாவது நூல் திரு.வி.க. அவர்களின் "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம்" என்பனவாகும்.

தாய்மார்கள் தங்கள் பெண்களைப் புகுந்த வீட்டிற்கு அனும்பும்போது சீர் வரிசையோடு திருவாசகத்தையோ, தேவாரத்வையோ அல்லது திருக்குறளையோ கொடுத்து அனுப்பவேண்டும். ஆனால் இன்றைக்கு எத்தனை தாய்மார்கள் அதைச் செய்கிறார்கள். இதை எவரும் செய்வதில்லை.

டாக்டர் மு.வ. அவர்கள் நல்ல நூல்களை அடிக்கடி படிக்கவேண்டு மென்று சொல்லுகிற பெக்ழுது, ஒரு மனிதன் வெயிலில் அலைந்துவிட்டு வருகிறவன் எப்படி

அந்தப் புழுக்கம்தீரக் குளிக்கவேண்டுமென்று சொல்கிறானோ, எப்படித் தெப்பமாக வியர்வையில் நனைந்த நாம் தண்ணீரிலே குளிக்கவேண்டுமென நினைக்கிறோமோ அதுபோல சான்றோர்களின் நூல்களில் குளிக்கவேண்டும், அடிக்கடி அந்தக் கருத்துகளிலே குளிக்கவேண்டும் என்று சொல்வார்கள்.

ஒரு மேல் நாட்டு அறிஞர், நூலினை,

My never failing friends are they
With Whom I Converse day by day

என்பார்.

'என்னைவிட்டு நீங்காத நண்பர்கள் அவர்கள். நாள்தோறும் அவர்களோடு நான் உறவாடுகிறேன்' என்று சொல்கின்றார்.

பிட்ஜிரால்டு என்ற எழுத்தாளர் ஒருவர் சொல்வார்.

Herewith a loaf of brcorl benath the bough;
A flask of wine and a book of Verse and thou;
Singing me in the wrilder-ness
And theWilderness is Paradise enow.

'வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும்தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம்நிறைய மதுவுண்டு'

என்று உமார்கயாம் கூறுவதாகக் கவிமணி பாடுவர்.

நாமும் அதுபோன்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இசுலாமியப் பெருமக்கள் வீட்டில் உள்ள 'குரானைப் போலவோ, கிறித்துவப் பெருமக்கள் வீட்டில் உள்ள 'பைபிளை'ப் போலவோ இந்துக்கள் வீட்டில் ஒரு சமய நூல் இருப்பதில்லை.

இலக்கிய உலகில் சிறிய பரிசிலிருந்து மிகப்பெரிய 'ஞானபீட' விருது வரை வாங்கியவர் அகிலன். அவர்கள் ஓரிடத்திலே டாக்டர் மு.வ. அவர்களைப் பற்றிச் சொல்லும்போது "எங்களுக்கெல்லாம் வாராத துணிச்சல் டாக்டர் மு.வ. அவர்களுக்கு உண்டு" என்றுசொல்வார்கள். ஏனென்றால் டாக்டர் மு.வ. அவர்கள் தம் நூலொன்றிற்குக் 'கயமை' என்று பெயர் வைத்துள்ளார். அதில் உள்ள ஒரு பாத்திரத்தின் பெயர் 'ஆணவர்' என்று வைத்துள்ளார். அவர் வாழ்க்கையில் எல்லாவகை மக்களையும் கண்டவர். அதனாலே அவர்கள்,

**''அந்தி வானத்தின் அழகும் உண்டு; வைகறை வானத்தின்**

**சிறப்பும் உண்டு''**

என்று சொல்வார்கள். ஆக மனம் மட்டும் இருந்தால் எல்லாம் முடியும் என்று சொல்வார்கள்.

அவர்களுடைய நாவல்களைப் படிக்கிறபொழுது, அந்தப் புதின வளத்தைப் பார்க்கிறபொழுது அவை வாழ்க்கையை உயர்த்துவது என்பதில் எவருக்கும் எந்தவிதக் கருத்துவேறுபாடும் இருக்கமுடியாது. அவருடைய நாவலைப் படித்து முடித்ததும் வாழ்க்கையில் ஒரு தெளிவு ஏற்படும் அவருடைய "கள்ளோ காவியமோ" என்ற நாவலை நல்ல கணவன் மனைவியர் படித்தால் அவர்கள் தம் வாழ்க்கையில் சண்டையிட்டுக் கொள்ளமாட்டார்கள்.

அதேபோல "அகல் விளக்கு" புதினத்தை இளைஞர்கள் படித்தால் வாழ்வில் சிறக்கலாம். ஆக, டாக்டர் மு.வ. அவர்களுடைய ஒவ்வொரு நாவலையும் படித்தால், அந்த நாவலைப் படித்துமுடித்தவர்கள் வாழ்க்கையில் அமைதி

யாக வாழமுடியும். இதற்குச் சான்றாக அவர்களுக்கு வந்த பல பாராட்டுக் கடிதங்களைச் சொல்லலாம்.

டாக்டர் மு.வ. அவர்கள், பெண்களுக்கு அறவுரை சொல்லும்பொழுது, தாரகமந்திரமாக ஒன்றைச் சொல்வார்கள்.

**"உரிமைக்காகப் போராடிக் காலம் கழிக்காதே;**
**அன்புக்காக விட்டுக்கொத்து இணங்கி நட"**

என்று சொல்வார்கள். "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்று சொன்ன நாலடியார் வாக்கு ஏதோ இல்லற வாழ்க்கைக்கு என்று கருதாதீர்கள். அது ஒரு காதல் வாழ்க்கைக்கும்தான். என்று கொள்ளுங்கள்" என்பார்கள் இப்படி இலக்கியத்தை வாழ்க்கையுடன் அந்த அனுபவத்திற்குக் கொண்டு போகும்போது ஒரு புதினத்தாலே ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கவேண்டும் என்று விரும்பியுள்ளார் பெருந்தகை டாக்டர் மு.வ. அவர்கள் என்பது நன்கு விளக்கமுறும்.

இந்த நூற்றாண்டில் தமிழ்ப் பேராசிரியராகப் புகழ் படப் பணியாற்றிக் கொண்டே புதின ஆசிரியராகவும் புகழ் பூத்து விளங்கியவர் மு.வ. எனலாம். இத்தனைக்கும் அவர் எழுதிய நாவல்களின் எண்ணிக்கை, அவர் எழுதிய மொத்த நூல்களின் எண்ணிக்கையில் ஏழில் ஒரு பங்கே என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்தம் முதலாவது புதினம், 'செந்தாமரை'யினை 1946 ஆம் ஆண்டில் எழுதினார். அடுத்த புதினம் 'கள்ளோ? காவியமோ?' அடுத்த ஆண்டு 1947இல் வெளிவந்தது. மூன்றாவது புதினம் 'பாவை' அதற்கும் அடுத்த ஆண்டில்—1948 இல் வெளியானது. 'அந்த நாள்', 'மலர்விழி', 'பெற்ற மனம்', 'அல்லி', கரித்துண்டு' ஆகியன 1949, 1950, 1951, 1952

1953 முதலான ஆண்டுகளில் ஒன்றன்பின் நன்றாக வெளி வந்தன. மூன்றாண்டு இடைவெளிக்குப் பின்னர் 1956 ஆம் ஆண்டில் 'கயமை', நெஞ்சில் ஒரு முள்' ஆகிய இரு புதினங்களுமே வெளிவந்தன. சாகித்திய அக்காதெமி பரிசு பெற்ற 'அகல் விளக்கு' 1958 ஆம் ஆண்டிலும், 'மண் குடிசை' அதற்கு அடுத்த ஆண்டாம் 1959 இலும், இறுதி நாவல் 'வாடாமலர்' 1960 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன— எனவே பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்கள் எழுதிய ஏறத்தாழ எண்பத்தைந்து நூல்களில் 13 நூல்களே புதினங்களாகும். பதினைந்த ஆண்டுக்கால இடைவெளி யில் (194 —1960) இப் புதினங்கள் எழுதப்பெற்று வெளி வந்துள்ளன.

> "செந்தாமரையில் தொடங்கிய அவரது படைப்பு வாழ்க்கை, காலப்போக்கில், பற்பல மாறுதலும் வளர்ச்சியும் உற்று, வாடாமலரைப் படைக்கும் போது முழுமையும் முதிர்ச்சியும் பெறு வதைக் காண்கிறோம். படைப்பு வாழ்க்கையில் அனுபவம் ஏற்பட ஏற்பட, விரிவான தம் வாழ்க்கை அனுபவங்களைக் கலைப் படைப்புக்களாக வடிக்கும் பயிற்சி மிக மிக, டாக்டர் மு.வ. பலவகையான கருப் பொருள்களைக் கையாளுவதிலும் (Thanks), வாழ்க்கையின் பல பகுதிகளுக்கு உரிய பலவகையான மாந்தர்களைப் படைப்பதிலும் வெற்றிகாண்கிறார்.",

மேற்காணும் கருத்தினை டாக்டர் இரா. மொகன் 'டாக்டர் மு.வ.வின் நாவல்கள்' (பக்கம் : 2) என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் மு.வ. அவர்களை டாக்டர் தனி நாயகம் அடிகளார் 'சென்னை நாவலாசிரியர்' (The Nvalest of the City of Madras) எனக் குறிப்பிட்டுள்ளார். காரணம்

சார்லஸ் டிக்கன்ஸ் என்னும் ஆங்கில நாவலாசிரியர் தம் நாவல்களின் தளமாக இலண்டன் மாநகரத்தை எடுத்துக்கொள்வது போல டாக்டர் மு.வ. அவர்களின் நாவல்கள் பலவற்றின் நிகழ்ச்சிகள் நிகழுமிடங்கள் சென்னை மாநகரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை யும் கொண்டனவாக உள்ளன. எடுத்துக்காட்டாக, 'கரித் துண்டு' என்னும் நாவலின் தொடக்கம் பின்வருமாறு அமைந்துள்ளத்தைக் காணலாம்.

> "சென்னையில் பச்சைப்பன் கட்டடத்திலிருந்து பாரிமுனை வரையில் ஒருவர் நடந்து போனார் என்றால் அவருக்கு வாழ்க்கையில் பெரும் பகுதி விளங்கி விட்டது என்று சொல்லலாம். ஆனால் அவருடைய கண்ணும் செவியும் போதிய அளவுக்குப் பண்பட்டிருக்க வேண்டும். காணும் காட்சிகளிலும் கேட்கும் ஒலிகளிலும் வாழ்க்கையின் உண்மைகளை உய்த்துணரும் பயிற்சி அவருக்கு இருக்க வேண்டும் இருந்தால் பயன்பெற முடியும், பச்சைப்பனுக்கும் பாரிமுனைக்கும் இடையில் பரந்த உலகமே இருப்ப தாகக் கூறலாம்.
>
> (பக்கம் .9)

டாக்டர் மு.வ. அவர்கள் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கியவர்; சமுதாயச் சிக்கல்களை நன்கு தெரிந்தவர். பெண்கள் படும் துயரத்தையும், சில சமயங்களில் பெண் களால் ஆண்கள் படும் துயரங்களையும் தம் புதினங்களில் பாடுபொருளாக அமைத்துப் புதினங்களைப் படைத் துள்ளார். மேலும் இளைஞர் உலகின் சிக்கல்களையும் தம் புதினங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். சுருங்கச் சொன்னால் தாம் கூர்ந்து பார்த்த சமுதாயத்தின் பல்

வேறு காட்சி நிலைகளையும் தம் புதினங்களில் எடுத்துக் காட்டியுள்ளார் எனலாம்.

ஒரு புதினப் படைப்பாசிரியர் புதினத்தின் கரு (Plot) வினை யடுத்து முதலிடம் தருவது பாத்திரப் படைப்பிற்கேயாகும். அருமையான பாத்திரப்படைப்பு களால் புதினப் படைப்பாளர் பெயர் பெறுகிறார். கல்கி யின் பாத்திரப் படைப்புகளில் 'பொன்னியின் செல்வன்' நந்தினியும். அரு இராமநாதனின் 'வீர பாண்டியன் மனைவி'யின் ஜனநாதனும், அகிலனின் 'வேங்கையின் மைந்தனி'ன் ரோகிணியும், தி.ஜானகிராமனின் மோகமுள்' யமுனாவும், கொத்தமங்கலம் சுப்பு (கலைமணி)யின் 'தில்லானா மோகனாம்பாளில்' வைத்தியும், நா. பார்த்த சாரதியின் 'குறிஞ்சிமலர்' அரவிந்தன், பூரணியும், தமிழ் வாணனின் 'ஹலோ சங்கர்லாலின்' சங்கர்லாலும், விந்தனின் 'பாலும் பாவை' அகல்யாவும், நம் நெஞ்சை விட்டு என்றும் அகலாத கதைப் பாத்திரங்கள் எனலாம்.

டாக்டர் மு.வ. அவர்கள் படைத்துள்ள பாத்திரங்கள் பல அவற்றுள் மறக்க முடியாத பாத்திரங்கள் 'கள்ளோ? காவியமோ?' மங்கை; 'மலர்விழி' செல்வநாயகம், 'கரித் துண்டு' மோகன், 'அகல் விளக்கு' சந்திரன், 'கயமை' ஆணவர், 'நெஞ்சில் ஒரு முள்' வடிவு,' 'வாடா மலர்' தாயைப்பன் முதலியோர் ஆவர். ஆசிரியர் அறவாழி, தமிழா சிரியர் முருகய்யா, சான்றோர் மெய்கண்டார் முதலியோர் சிற்சிலவிடங்களில் குறிப்பிடப்பட்டாலும் அவர்கள் பேச்சால், தூது விளைவிக்கும் பயனால் நம் நெஞ்சில் நிற்கிறார்கள்.

டாக்டர் மு.வ. அவர்கள் தாம் பாத்திரங்களுக்குப் பெயரிடும் முறை குறித்த ஓர் ஆழமான செய்தியினை

டாக்டர் இரா. மோகன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

"டாக்டர் மு.வ.வின் பெயரிடு முறையில் ஒரு புதுமையும் ஒழுங்கும் காணப்படுகின்றன. மு.வ. கொள்கையும் குறிக்கோளும் கொண்டு உயர்ந்த வாழ்க்கை வாழும் நல்லவர்களுக்குத் தூய தமிழ்ப் பெயர்களை இடுவார். அறவாழி, மெய்கண்டார், கமலக் கண்ணர், அருளப்பன், சீராளர், திலகம், பாவை, செந்தாமரை, மங்கை, மலர்விழி, மென் மொழி, மான்விழி, தேமொழி ஆகிய பெயர்கள் அத்தகையன. குறிக்கோளும் பண்பாடும் இல்லாமல் மனம் போன போக்கில் வாழ்க்கை நடத்தும் தீயவர்களுக்குப் பெயர்களையும் அவ்வாறே வைப்பார். ஆணவர். அகோர், சுப்பு ரத்தினம், கேசவ ராயன், வசீகரம், சகசாம்பாள் போன்ற பெயர்கள் அவ்வகையின. உயர்ந்த வாழ்க்கை வாழாமல், சாதாரணமான வாழ்க்கை நடத்துவோர்க்குச் சாதாரணப் பெயர்களை இடுவார். திருவேங்கடம், வேலய்யன், குழந்தைவேல், மணி, சந்திரா, வள்ளி, ரேவதி, கனகா ஆகிய பெயர்கள் அவ் வகைக்குக் காட்டுகள் ஆகும். நாம் கேள்வியே பட்டிராத புதுமையான பெயர்களையும் மு.வ. வைப்பதுண்டு, மாலன், மாசன், குய்யான், இமாவதி, இந்திரா ஆகிய பெயர்கள் அவ் வகைக்குச் சான்றாய் அமையும் பெயர்கள் ஆகும்."

—(டாக்டர் மு.வ.வின் நாவல்கள்; பக்கங்கள் 70, 71)

டாக்டர் மு.வ. அவர்களின் தலையாய வேட்கை நல்ல குடும்பம் அமைய வேண்டும் என்பதுதான். கணவனும் மனைவியும் ஒத்து அன்பான இல்லறம் நடத்த வேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வம் பின் வரும் பகுதி

யால் விளக்கமுறும் :

"எனக்கு ஆணும் பெண்ணுமாகக் குடும்பங்கள் அன்பாக வாழவேண்டும் என்பதில் ஆசை உண்டு. ஏன் என்றால், கணவனும் மனைவியுமாக அன்பாக வாழும் வாழ்க்கை இல்லை என்றால், காட்டில் உள்ளதைவிட நாட்டில் கொடுமையான விலங்குத் தன்மை இருக்கும். இந்த நாகரிகம் எதுவும் ஏற்பட்டிருக்காது. காட்டை விட மிகுதியான உறுமல் நாட்டில் இருக்கும், அல்லது, உலகத்தில் பாதிப்பேர் பைத்தியக்காரராக இருப்பார்கள். ஆகையால் எப்போதுமே நான் காதல் வாழ்க்கையை ஆதரித்து வருகின்றேன். தோட்டத்தில் ஒரு நல்ல முல்லைக் கொடி செழித்து வளர்ந்து பூத்தால் எப்படி மகிழ்ச்சி அடைவேனோ, அப்படி எந்தக் குடும்பத்திலாவது அன்பாக வாழ்க்கை நடந்துவதைப் பார்த்தால் மகிழ்ச்சி அடைவேன்' (நெஞ்சில் ஒரு முள், ப : 389)

இவ்வாறு அன்பான வாழ்க்கை வாழ்ந்த புதினப் பாத்திரங்கள் இருவரின் வாழ்க்கையினை 'அந்தநாள்' என்றும் புதினத்தில் 'ஆறுமுகம்' என்னும் பாத்திரத்தின் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

"பொன்முடி! எப்படியோ வாழ்ந்தோம். உலகத்தை வாசற்படிக்கு வெளியே விட்டு விட்டு வாழ்ந்தோம். உலகப்பற்றை விட்ட இடம்தானே வீடு? நாம் வாழ்ந்த வாழ்வு வீட்டு வாழ்வுதான்! பிறருடைய புகழையும் மதிப்பையும் பொருட் படுத்தாமல் வாழ்ந்தோம். உலகத்தை உள்ளே விட்டிருந்தால் வாழ்க்கை ஒரு பெருஞ்சுமையாகி விட்டிருக்கும். நமக்கோ வாழ்க்கை ஒரு நல்ல விளையாட்டாகவே

முடிந்தது. இன்பம் துன்பம் இரண்டிலும் விளையாடினோம். வாடகை வீட்டில் குறைந்த வருவாயில், நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தோம். பணம் நிறைந்த வாழ்க்கை இல்லையானாலும் மனம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தோம். போதும்''

(அந்த நாள்; ப : 101)

இல்லறத்தில் ஈடுபடும் ஆண் பெண் ஆகிய இருவரும் என்னென்ன தகுதிகளைக் கண்டு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது குறித்தும் மு.வ. அவர்கள் தம் கருத்துகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''ஒரு நாள் இரண்டு நாள் கண்ணராக்கண்டு மகிழ்த்து குலாவுகிற உறவுக்கு—விபசார நட்புக்கு—அழகு கட்டாயம் வேண்டும்—ஆனால் வாழ்நாள் முழுவதும் பழகும் வாழ்க்கைத்துணைக்கு அன்புதான் முதலில் வேண்டியது; அழகு இருந்தால் இருக்கட்டும்''

(களளோ? காவியமோ? —ப : 134.)

இவ்வாறு அன்பால் இணைந்த கணவனும் மனைவியும் இல்லற வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் அன்றாட வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழவேண்டும் என்கிறார். மேலும் ஒருவரை ஒருவர் நம்பிக் காதல் வாழ்க்கையில் ஒருவகைக் கண்முடி வாழ்க்கையினை-கள்ளங்கரவற்ற ஒரு குழந்தை போன்ற மனப்பான்மையுடன் வாழவேண்டும் என்கிறார். குணம் நாடிக் குற்றமும் நாடுகின்ற மனம்பான்மை இல்லற வாழ்க்கையில் ஈடுபடும் கணவனும் மனைவியும் கொள்ள வேண்டும் என்கிறார். வாழ்க்கையின் தொடக்கநாட்களில் உரிமைக்காகச் சிறிது போராடலாம் பிறகு கணவனுக்கு இணங்கி மனைவி நடக்கவேண்டும். அவ்வாறு நடந்தால்

தான் தவறுகின்ற கணவனைத் திருத்த ஒரு வாய்ப்புஏற்படும் அளவுக்குமேல் கணவனோடு போராடினாலும் அதனால் பயன் விளையாது என்கிறார், அளவுக்கு மேல் போராடு வதும் தவறு; அளவுக்குமேல் விட்டுக் கொடுப்பதும் தவறு என்று வற்புறுத்துகின்றார். அளவு தெரிந்து நடந்தால் இன்பமே, எந்நாளும் துன்பமில்லை என்கிறார். ஆடவர் சிலர் தங்கள் கற்பனையில் தங்களுக்கு மனைவி இன்னன்ன பண்புகள் கொண்டவராக வரவேண்டும் எனத் தங்களுக்குள்ளேயே ஒரு கற்பனைக் கோட்டையை எழுப்பிக் கொள்வார். மனைவியிடம் அளவுக்குமேல் அழகு, அன்பு, அடக்கம், அறிவு, ஆற்றல் முதலியனவற்றை எதிர்பார்த்து ஏமாந்து துன்புறுவர். எனவே இதற்கு ஒரே வழி, விரும்பியது கிடைக்கவில்லையென்றால், கிடைத்ததை விரும்பவேண்டும் என்கிறார்.

மேலும் டாக்டர் மு. வ. ஒரு புரட்சிகரமான கருத்தினையும் குடும்ப வாழ்வு குறித்துக் குறிப்பிடுகின்றார். அன்பால் வாழ்க்கையில் பிணைந்தவர்கள், பின்னர் மனவேறுபாடுற்றுப் பிரிய வேண்டிய நிலைமை நேரிட்டால் அவர்கள் எந்தச் சிக்கலுமின்றிப் பிரிந்துபோகச் சமுதாயம் அனுமதிக்க வேண்டும் என்கிறார். அவர் கருத்தினை 'அல்லி' என்னும் புதினத்தில்,

> "கணவன் மனைவிக்கு இடையே தீராத வெறுப்பு ஏற்பட்ட பிறகு விட்டு விலக உரிமை வேண்டும். அறிஞர் ஷா கூறுவதுபோல், விலகுவதற்குக் காரணம் என்ன என்று கேட்க நீதிமன்றமும் முன்வரக்கூடாது. விலக உரிமை இல்லாமல் கட்டுப்படுத்துவதற்கு மணம்—திருமணம் என்ற பெயரே கூடாது" (ப; 287)

என்றும், 'நெஞ்சில் ஒரு முள்' என்னும் புதினத்தில்,

"குடும்பம் என்றால் ஒருவர் மனக்கவலையை மற்றவர் குறைப்பதற்காக ஏற்பட்டது. ஆனால் உள்ள கவலையை வளர்த்து மீளாத் துன்பத்தில் வருந்துவதானால், அந்தக் குடும்பத்தைக் கலைத்து விடுவதே நல்லது,"

என்றும்,

"முடிந்தால் வாழலாம்; முடியாவிட்டால் பிரியலாம். உலகம் பரந்த உலகம். எல்லோருக்கும் இங்கே இடம் உண்டு. அவரவர்கள் தங்களுக்குப் பொருத்தமான இடம் தேடிக் கொண்டு வாழ்வதே நல்லது"

என்றும் டாக்டர் மு. வ. அவர்கள் குறிப்பிடும் கருத்துகள் (பக்கங்கள் 480-485) புரையோடிப் போன சமுதாயப் புண்ணிற்கு அவர் இடும் அருமருந்துகள் எனலாம்.

டாக்டர் மு. வ. தாம் படைத்துள்ள பாத்திரங்கள் அனைவரும் நல்ல தமிழ் பேசுபவர்களாகவே படைத்துள்ளார். பாத்திரங்களுக் கேற்ப உரையாடல்களை அமைக்கவில்லை; அவருடைய நடை எளியது; தூயது; விழுமியது. நடை எனப்படுவது ஓர் ஆசிரியரின் தனிப்பட்ட சிந்தனை, பார்வை என்று கருதப்படுகின்றது. பேராசிரியர் டாக்டர் மா. இராமலிங்கம் அவர்கள் மு. வ.வின் நடை குறித்துப் பின்வருமாறு தம் கருத்தை வழங்கியுள்ளார் :

"சின்னஞ்சிறு வாக்கியங்கள். உள்ளத்தில் இருக்கும் சிந்தனைத் தெளிவை அப்படியே பிரதிபலிக்கும் தொடரமைப்புக்கள், சிக்கலான விஷயத்தையும்

போகிற போக்கில் எளிமையாகப் புரிய வைத்துவிடும் பண்பு—இவையே மு. வ. நடையின் தனிச்சிறப்புக் கள்'' (நாவல் இலக்கியம்; ப: 166)

என்று குறிப்பிடுகின்றார்.

டேவிட் சித்தையா அவர்கள் டாக்டர் மு. வ. அவர்களின் மொழிநடை பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்து கள் உள்ளபடியே மிகச் சிறந்த திறனாய்வாக அமைந் துள்ளதைக் காணலாம்:

"மு. வ. அவர்கள் நடை எளிமையானது. தெளி வானது. இனிமையானது, தூய்மையானது. தமிழ் மயமானது. அமைதியான காட்டில் ஓடும் தனிமை யான சிற்றருவியைப் போன்றது. அதன் இனிய ஓசை எவ்வளவு நேரமானாலும் எத்தனை தடவை யானாலும்கேட்டு அனுபவிக்கலாம். தெளிவு, அமைதி, தனித்தன்மை ஆகிய மூன்றையும் அவர் நடையில் சுவைக்கலாம். நேருக்கு நேர் பார்ப்பது, நேராகவே சொல்வது, எளிய பதங்களைப் பயன்படுத்துவது, பேச்சு சந்தங்களைப் பின்பற்றியே வசனம் அமைப்பது—இவை இவருக்கு இயல்பாகவே அமைந்த கை வண்ணங்கள்" (வளரும் தமிழ் இலக்கியம்; ப: 142-143)

டாக்டர் மு. வ. அவர்கள் தூய இலக்கிய நடை எழுதுவது உண்டு. சிற்சில சமயங்களில் உயிரும் உணர்ச்சி யும் துலங்க நடைச்சித்திரங்களைத் தம் நடைமூலம் நம் கண்முன் கொண்டு வருவதும் உண்டு, முன்னதற்கு 'மலர்விழி' என்னும் புதினத்தில் வரும் கீழ்க்காணும் பகுதியினை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்;

"கதிரவன் செந்நிறப் பிழம்பாய்ப் பல நிறக் கடலில் அமைதியாக மூழ்கும் காட்சியைக் கண்டேன். கதிரவனின் மறைவுக்குப் பரபரப்போடு அலங்காரங் கள் செய்து கொண்டிருந்த மேகங்களும் ஏதோ அமைதியடைந்து கண்மூடி வழிபாடு செய்வதுபோல் இருந்தன. பகலில் கண்ட பல காட்சிகளையும் மறந்து தாயின் 'ஆராரோ' பாட்டை மட்டும் கேட்டபடியே கண்ணை மூடி உறங்கத் தொடங்கும் குழந்தையைப் போல், வான மண்டலமே பறவை களின் பாட்டொலியைக் கேட்டபடியே கண்மூடி உறங்குவது போல் இருந்தது. காலையில் எழும் போதும் இயற்கைத் தாய் இவ்வாறு ஒலி செய்து கொஞ்சினால்தான் இந்த வானக் குழந்தை மறுபடி யும் கண் திறந்து பார்க்கும்." (மலர்விழி : 203)

உணர்ச்சி மிக்க நடைக்கு டாக்டர் மு. வ அவர்கள் 'கள்ளோ? காவியமோ?' என்னும் புதினத்தில் அமைந் திருக்கும் பின்வரும் பகுதியினை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம் :

"அப்போது என்னுடைய மோட்டாரின் ஊதொலியே கேட்டது. எழுந்து எட்டிப் பார்த்தேன். அவர் இறங்குவதைக் கண்டேன். டிரைவர் கைகாட்ட மாடிப்படிகள் ஏறிவந்தார். அவர் முகத்தில் ஒன்றும் இல்லை; ஏதோ ஒரு வகை அமைதி இருந்தது.

"எதிரில் சென்றேன்.பார்த்ததும் கைகூப்பினேன். 'மங்கை' என்றார். என் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு பேசாமல் நின்றார்?" (ப : 238)

டாக்டர் மு. வ. வின் புதினங்கள் சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் பல; பெண்ணுலகம் படும் துன்பத்

தினையும், இளைஞருலகு பெறும் இன்னல்களையும். சமுதாயத்தில் கொடியவர் சிலர் நல்லவர்களை நலியச் செய்வதனையும், குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல் களையும் தம் புதினங்களைப் படிப்பவர் மனத்தில் பதியச் செய்யும் வகையில் அவர் தம் புதினங்களைப் படைத் துள்ளார். அவருடைய எழுத்துகள் சமுதாய நோக்குடை யனவாக இருந்தன.

சமுதாயம் நல்லவர்களை நலியச் செய்து இறுதியில் அவர்களைத் தீயவர்களாக்கிவிடுவதனைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

> "நாம் எல்லோரும் சேர்ந்து என்ன செய்து வருகிறோம் தெரியுமா? அறத்தை நம்பும் நல்லவர் களை முதலில் வறியவர்களாக ஆக்குகிறோம்; பிறகு இரக்கமற்றவர்களாக ஆக்குகிறோம்; பிறகு போக்கிரி களாக மாற்றுகிறோம்." (கரித்துண்டு; ப : 54)

எத்தன்மைத்தான சமுதாயம் அமையவேண்டும் என்பதனை மு. வ. அவர்கள் "கயமை" என்னும் புதினத்தில்,

> "வயிறு வளர்ப்பது பற்றியும் குடும்பம் வாழ்வது பற்றியும் யாருக்கும் கவலை இருக்கக் கூடாது. உழைக்கக் கையும் காலும் இருந்தால் உயிர்வாழ உரிமையும் உண்டு என்ற நிலைமை நாட்டில் ஏற்பட வேண்டும். பிறந்தவர்கள் எல்லோரும் ஏதாவது தொழில் செய்து பிழைக்க முடியும் என்ற கட்டாயப் பொருளாதார நிலைமை ஏற்படவேண்டும். இப்போது கட்டாய வயிறு, கட்டாயக் குடும்பம், கட்டாயக்கல்வி, கட்டாய ராணுவம் என்று என்னென்னவோ இருக் கின்றன. ஆனால் கட்டாய உணவு, கட்டாய உடை,

கட்டாய வீடு, கட்டாயப் பொழுதுபோக்கு, கட்டாய உழைப்பு என்ற அமைப்புகள் வரவில்லை, அதனால் தான், எப்படியாவது வாழவேண்டுமே என்ற கவலை ஒவ்வொருவரையும் வாட்டுகிறது. எப்படியும் வாழ முடியும் என்ற நம்பிக்கை உள்ள சமுதாயமாக அமைக்கவேண்டும்" (ப : 105, 106) என்று குறிப் பிட்டுள்ளார்.

மு. வ. அவர்கள் படைத்த புதினங்கள் சிலவற்றின் தொடக்கமும் முடிவும் நம் நினைவுத் திரையில் நீங்காத இடம் பெற்றுவிடுகின்றன. எடுத்துக் காட்டாக,

**செந்தாமரை :**

**தொடக்கம் :**

"பெற்ற தாயைவிடப் பெரிய துணை இல்லை என்கிறார்கள். எனக்கோ பெற்ற தாயே பெரிய பகையாய் இருக்கிறாள்."

**முடிவு :**

"பணத்தின் எல்லை, சட்டம் வெல்வதும் சாட்சி தேடுவதும்; காதலின் எல்லை, சேர்ந்து வாழ்வதும் பிரிந்து சாவதும் தவிர வேறு உண்டோ?"

**கள்ளோ? காவியமோ?**

**தொடக்கம் :**

"உலகம் பொல்லாதது. அவர் நல்லவராக இருந் தாலும் உலகம் பொல்லாதது"

**முடிவு :**

"அந்தக் குடும்ப விளக்கு அணைவதற்கு முன்னே ஒருமுறை அழகாக ஒளிவீசியது".

## மலர்விழி

**தொடக்கம் :**

அந்தப்படத்தைக் கண்டதும் என் உள்ளத்தில் ஒரு வகை ஒளி வீசியது என்றே நான் நம்புகிறேன் அப்போது பெற்ற புதிய உணர்ச்சி இத்தன்மையானது என்று கூற முடியவில்லை.

**முடிவு :**

"சாவித்திரியின் கண்கள் மலர்விழியின் கண்களை நோக்கியபடி கண்ணீர் உதிர்த்தன"

## கரித்துண்டு

**தொடக்கம்:**

"சென்னையில் பச்சையப்பன் கட்டடத்திலிருந்து பாரிமுனைவரை ஒருவர் நடந்து போனார் என்றால், அவருக்கு வாழ்க்கையின் பெரும்பகுதி விளங்கி விட்டது என்று சொல்லலாம்".

**முடிவு :**

"அந்தக் காட்டுவாகைக? மரத்தின் நிழலில் ஒவ்வொரு கரித்துண்டாதப் பொறுக்கி ஆர்வத்துடன் அடுக்கிவைத்துக்கொண்டிருந்த அவளுடைய அன்பான கையை என்மனம் நினைத்தது."

## நெஞ்சில் ஒரு முள்

**தொடக்கம் :**

"படிப்பு உடம்பை மட்டும் மென்மையாக்குகிறது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அது மனத்தையும் மென்மையாக்குகிறது என்பதை இப்போது நன்றாக உணர்கிறேன்",

**முடிவு :**

"அப்போதுதான் கண்ணழகன் குழந்தை விஜயாவை எடுத்துக்கொண்டு எங்களை நோக்கி வந்தான். அவனைத் தொடர்ந்து கீதாவும் வருவதைக் கண்டேன்".

## அகல் விளக்கு

**தொடக்கம் :**

"பாலாற்றங்கரையில் நானும் சந்திரனும் கை கோத்து உலாவிய நாட்கள் எங்கள் வாழ்க்கையிலேயே பொன்னான நாட்கள்".

**முடிவு :**

"வலப்பக்கத்தே விளையாட்டு வெளியில் ஒரு பந்தாட்டம் நடந்துகொண்டிருந்தது. ஆரவாரத்திற்கு இடையே, "விளையாட்டாக இருந்தாலும் விதிகளுக்குக் கட்டுப்படவேண்டும் தெரியுமா? நீயே அரசன் என்று எண்ணிக்கொண்டு, உன் விருப்பம் போல் ஆடமுடியாது. தெரிந்துகொள்" என்ற குரல் கேட்டது. சிறிது தொலைவில் வந்துவிட்ட பிறகும் பந்தாட்டக்காரரின் ஆரவாரம் கேட்டுக்கொண்டிருந்தது."

## பாவை

**தொடக்கம் :**

"பழனியப்பன் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்ட போது, திண்ணையில் மணியக்காரர் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார்,"

**முடிவு :**

''குழந்தையின் செயலைக் கண்ட கண்ணப்பர், இந்த விளையாட்டின் அடிப்படை அறியாமல் திகைத்தார்''. பிறகு ஒருமுறை பாவையின் செயலை நேரில் கண்டதும் அவருக்குக் குழந்தையின் விளையாட்டு முழுதும் விளங்கியது''.

**பெற்ற மனம் :**

**தொடக்கம் :**

'தெற்கே பார்த்த வீடு; பெரிய பங்களா; அழகான கட்டடம்; நாற்புறமும் அழகான சுற்றுச்சுவர். இரண்டு பக்கங்களில் சிறப்பான தோட்டம்; எல்லாம் வளமான காட்சியாக இருந்தன.''

**முடிவு :**

"அங்கே வாசற்படிக்கு மேல் பச்சை நிறத்தால் சீராளர் தீட்டியிருந்த எழுத்துகள், ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற எழுத்துகள் அப்போது அவர் கண்களில் பட்டன.''

**வாடாமலர்**

**தொடக்கம் :**

"நானே கதை கட்டுவேன். அடுக்கடுக்காகப் பல கதைகளைக் கட்டி ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பேன். ஒன்றுக்கொன்று தொடர்பிருக்கிறதா, கதைகளில் பொருத்தம் இருக்கிறதா என்பதைப் பற்றி நானும் கவலைப்படவில்லை; அவனும் எண்ணிப் பார்க்கவில்லை''

**முடிவு :**

"கட்டடத்திற்கு—இந்தப் பள்ளிக்கூடத்துக்கு—வாடாமலர் என்று பெயர் வைக்கப்பட்டதா?" என்றாள் மனைவி.

"ஆமாம்" என்று சொல்லி அந்தத் தென்கிழக்கு மூலையைப் பார்த்தேன்.

"அங்கே அந்தப் பூஞ்செடிகள் செந்நிற மலர்கள் பூத்து அழகாக விளங்கின."

இவ்வாறு டாக்டர் மு.வ. அவர்கள் எழுதியுள்ள புதினங்கள் அனைத்தும் பொழுது போக்குப் புதினங்களாக அமைந்துவிடாமல், ஓர் இலட்சிய வாழ்க்கையைச் சித்திரித்து, வாழ்க்கையின் பல்வேறு சிக்கல்களை விளக்கி, எப்படியாவது வாழலாம் என வாழ்பவர், இறுதியில் அடையும் இன்னல்களையும், இப்படித்தான் வாழ்வேண்டும் ஒத்து நெறியோடு வாழ்பவர் பெறும் மன அமைதியினை விளக்குகின்றன. சுருங்கச் சொன்னால் டாக்டர் மு.வ. அவர்களின் புதினங்கள் ஒருவர் நல்ல வாழ்வு வாழ வழிவகுக்கும் குறிக்கோள் நோக்குடைய புதினங்கள் எனவாம்.

## 3. டாக்டர் மு.வ. வின் சிந்தனைவளம்

டாக்டர் மு.வ. அவர்கள் எதையும் எளிமையாகப் புரியவைக்கக்கூடிய ஒரு நடையைக் கொண்டிருந்தார் என்பதனை எவரும் அறிவர். இந்த எளிமையான நடை தான் அவருடைய கருத்துகளுக்கு விளக்கமாக அமைந் திருந்தது. "ஆசிரியருடைய மேல்உடையாக நடையைக் கருதக்கூடாது! அவருடைய தோலே அந்த நடை" "The Style is not the Soul of the author, but the skin of himself" என்று சொல்வார்கள். எதையும் எளிமையாகப் புரியவைக்கக்கூடிய அந்த ஆற்றல் அவரைச் சமுதாயத்திலே மிகப்பெரியவராக வளர்த்தது எதையும் எளிதில் புரியவைக்கக்கூடிய ஆற்றல் என்பது. எல்லோருக்கும் கைவந்த கலை அன்று. அந்தக் கலையிலே அவர் மிகத் திறம்படச் சிறந்து விளங்கினார். அவருடைய எழுத்துகளைவிட அவரோடு பழகியவர்களுக்கு அவர் சொல்கின்ற ஒவ்வொரு சொல்லும் மந்திரச் சொல்லாக இருக்கும்.

அவருடைய வாழ்க்கையிலே பல்வேறு வழிகளில் தொடர்புடையவர்களை நாம் பார்த்திருக்கமுடியும். அப்படி இருந்தவர்களெல்லாம், அவரோடு பேசிவிட்டு வரும்பொழுது ஒரு சிறந்த அறிவுச் சுரங்கத்தைப் பெற்று வந்தோம் என்கிற ஓர் எண்ணத்தோடு வருவதை நாம் பார்க்கலாம்.

அவருக்கு ஒரு குழந்தை மனம் இருந்தது. தமிழிலே எத்தனையோ நூல்கள் வந்திருக்கின்றன. ஒரு பெரும் பேராசிரியர்—தமிழ்நாட்டினுடைய ஒரு தலைசிறந்த

நூலாசிரியர்—'குழந்தை' என்கிற பெயரிலே நூல் எழுதியிருக்கிறார். அது நாம் பாராட்டவேண்டிய ஒன்று. ஒரு குழந்தையினிடத்திலே பேசுகிறபொழுது நம்முடைய மனம் சான்றாண்மை மிக்கதாக ஆகின்றது.

**''முல்லைச் சிரிப்பாலே என்மூர்க்கம் தவிர்த்திடுவாய்**
**சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா''**

என்பார் பாரதி.

இதனைச்சற்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏன் கவிஞர் அப்படிச் சொல்கின்றார்? என்னுடைய கோபத்தை என்னுடைய ஆளுமையை தன்னுடைய சிரிப்பாலே அந்தக் குழந்தை தவிர்த்துவிடுகிறது என்று சொல்வார்.

குழந்தை இயற்கையாக மொழி வளர்ச்சியுடைய குழந்தை. மொழியை எப்படிக் கையாளவேண்டுமென்று தெரிந்த குழந்தை. அதற்குச் சான்று சொல்கிறார். நீங்கள் தடு என்று சொல்லுங்கள் அதிலிருந்து தடுத்தான் என்று சொல்லுங்கள். எடு—எடுத்தான், படு—படுத்தான், இவ்வாறு சொல்லிக்கொண்டேவந்து நடு—நட்டான் என்று சொன்னால், அந்தக் குழந்தையினுடைய முகத்தில் ஒரு சுளிப்பைப் பார்ப்பீர்கள். குழந்தை முகத்தைச் சுளித்துக் கொள்ளும். இதுவரையிலே எடு—எடுத்தான், படு—படுத்தான் என்று சொல்லிக்கொண்டு வந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தக் குழந்தை, நீங்கள் நடு—நட்டான் என்று சொன்னவுடன் தன் முகத்தைச் சுளித்துக் கொள்கிறது. அதற்குக் காரணம், அங்கே நடுத்தான் என்று வரவேண்டும். சில இடங்களிலே வேறுவகையாக அமையும் அது குழந்தையினுடைய தவறு இல்லை. அம் மொழியினுடைய சிக்கல் என்று சொல்வார்.

குழந்தைகளோடு விளையாடுவதில் நேரம் காலம் தெரியாது விளையாடிக் கொண்டிருப்பார். அவருடைய பேரன் புகழேந்தியிடத்திலே அவர் கழித்த காலம் மிகுதி. ஒரு சமயம், ''உன்னுடைய மகன் சேரனைப் போலவே என்னுடைய பேரன் புகழேந்தியும் கண்ணாடி அணியத் தொடங்கி விட்டான்'' என்று எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். குழந்தையோடு குழந்தையாகக் குழந்தை மனங் கொண்டு பேசுவார்; எழுதுவார்.

அவருடைய 'குழந்தை' என்ற நூலை அவர் எப்படித் தொடங்குகிறார் என்பதை நாம் பார்க்கிற பொழுது, அவருடைய சிந்தனை வளத்திற்கு ஒரு தோற்றுவாயாக, தோரணவாயிலாக அமைவதைக் காணமுடிகிறது.

''ஒரு நாள் மாலை நான் நண்பரை அழைத்துக் கொண்டு அவருடைய வீட்டிலிருந்து ஆற்றங்கரைக்குப் புறப்பட்டேன். அவர் அல்லியை அழைத்துக் கொண்டார். அழகன் தானும் வருவதாகக் கெஞ்சினான். அவனுடைய தாயும் அழகனை அழைத்துச் செல்லுமாறு சொன்னாள். "அவன் வேண்டா, நடக்க மாட்டேன் என்று வழியெல்லாம் தூக்கிக்கொள்ளச் சொல்கிறான். என்னால் தூக்கிக்கொண்டு நடக்கமுடியவில்லை" என்றார். ''எனக்கும் அப்படித்தானே இருக்கும்" என்று தக்க மறுமொழி தந்தாள் அந்த அம்மா. உள்ளுக்குள் மகிழ்ந்தவாறே நான் நடந்தேன். அழகன் அழுவதைத் திரும்பித் திரும்பப் பார்த்தவாறே நண்பரும் அல்லியும் வந்தார்கள்.

''தெரு முனைக்கு வந்ததும் நண்பர் என்னைப் பார்த்து, ''அழகன் முன்போல் இல்லை. வீட்டில் ஓடிஆடி விளையாடியபடியே இருக்கிறான்; நொடிப்பொழுதும்

சும்மா இருப்பதில்லை. இப்படி எங்கேயாவது வெளியே அழைத்துக்கொண்டு வந்தால் நடக்கமாட்டேன் என்கிறான், தூக்கிக்கொண்டே போகவேண்டும் என்று பிடிவதாம் செய்கிறான். அதனால்தான் விட்டுவிட்டேன்'' என்றார்.

''வீட்டில் மனம் வேலைசெய்கிறது. மனத்தின் வழியே கைகால் ஆடவும் ஓடவும் முடிகிறது. வெளியே வந்தால் மூளை வேலை செய்கிறது'' என்றேன்.

''அதனால் ஆள்மேல் சுமையாக இருக்கவேண்டுமா?'' என்றார்.

''இது தெரியாதா அய்யா! மனம் புலன்களை இயங்கச் செய்கிறது. உடல் இயங்குகிறது. வீட்டுக்கு வெளியே வரும்போது குழந்தையின் கண் எவ்வளவோ காட்சிகளைப் புதுமையாகக் காண்கின்றது. கண்ணின் வழியாக மூளை கற்கத் தொடங்குகிறது. புதிதாக ஒன்றைக் கற்கும்போது உடம்பு இயங்காது. மூச்சும் வேகமாக ஓடாது. அது இயற்கை. அதனால் நடக்காமல் தோள்மேல் இருந்த படியே கற்கும் ஆர்வம் என்று கருதவேண்டுமேதவிர, சுமையாகத் தொல்லை தரவிரும்புகிறான் என்று கருதக்கூடாது. குழந்தையாக இருக்கும்போது முதல் நான்கு ஐந்து ஆண்டுகளுக்குள் மூளை வளர்கிற வேகம் மிகுதி என்றும், அதன்பிறகு வாழ்நாள் எல்லாம் வளரும் வளர்ச்சியும் அதற்கு ஈடு ஆகாது என்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அதனால் குழந்தையை அடிக்கடி வெளியே அழைத்துக் கொண்டுவருவதுதான் கடமை. ஆங்கிலேயர்கள் அப்படிச் செய்கிறார்கள் பார்!''

—குழந்தை ; ப : 41 42.

'குழந்தை' என்கிற நூலில் இந்த ஒரே ஒரு பக்கத்திலேயே அவர் சொல்கின்ற அந்தக் காட்சிகளைப் பார்க்கிற பொழுது உளவியல் நுட்பம், அந்த மொழியினுடைய நுட்பம், அந்தக் குழந்தை புதிய காட்சிகளைக் காண வேண்டுமென்கின்ற ஓர் ஆர்வம் இவ்வளவையும் கொண்டு வந்து காட்டியுள்ள அந்த நடை மிக எளிமையாக உள்ளது. மிக எளிமையாக, போகிற போக்கிலே புரிந்துகொள்ளக் கூடிய வகையிலே அவர் நடையை எடுத்துக்காட்டுகின்றார். இதுதான் மு. வ. வின் பெருஞ்சிறப்பிற்குக் காரணம் ஆகும். அவர் உளவியல் நுட்பம் மிகமிக வாய்ந்தவராகத் திகழ்ந்தார். இதனை, வகுப்பறையிலே அவர் பாடம் சொல்லிக்கொண்டு வருகிறபொழுது மிக எளிதாகப் பார்க்கலாம்.

உரையாடல் கலையில் டாக்டர் ஜான்சனை மிகச் சிறந்த அறிஞன் என்று சொல்வார்கள். "The Best conversation. alist the world have ever produced" என்பதுதான் டாக்டர் ஜான்சனுடைய பெருமை. இது வரை உலகில் கண்டதில் டாக்டர் ஜான்சனைவிட உரையாடல் திறத்தினில் சிறந்தவர் எவரும் இல்லை என்று சொல்வார்கள். டாக்டர் மு.வ. அவர்களோடு உரையாடியிருப்பீர்களே யானால் இந்தக் கருத்தை விளங்கிக் கொண்டிருக்கமுடியும். காரணம், அவர் ஓர் ஐந்து மணித் துளிகள் நம்மிடத்திலே பேசினார் என்று சொன்னால் அதனை நாம் எழுதிவைத்துக்கொள்ளலாம். அவ்வளவு கருத்துகள் அதிலே இருக்கும். நான் முதன்முதலில் பீ.ஏ. (ஆனர்சு) வகுப்பில் சேர்ந்தவுடன் அவரிடம் அவர் வீட்டில் வேப்பமரத்தினடியில் உட்கார்ந்து என்னுடைய வாழ்நாளில் முதன்முதலில் அவரோடு பேசியதை 60 பக்கத்திற்கு எழுதிவைத்திருக்கின்றேன்.

அடிப்படையிலே நான் இளைஞர்களுக்குச் சொல்லிக் கொள்வது என்னவென்றால் எந்த ஒரு பொருளைப் பார்த்தாலும் கூர்ந்து பாருங்கள். எந்த ஒரு காட்சியைப் பார்த்தாலும் அதை ஆழ்ந்து பாருங்கள் என்பதாகும்.

டாக்டர் மு.வ. அவர்களுக்கு, எழுதக்கூடிய ஆற்றல் எப்படி எப்படி இருந்தது என்பது அவரோடு பழகக் கூடியவர்களுக்குத் தெரியும். அவர் ஒரு நிகழ்ச்சியைச் சொன்னால் அது எப்பொழுதும் நினைவில் நிற்கும்.

டாக்டர் மு.வ. அவர்கள், தான் முதலில் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்ற உதவிய மாசிலாமணி முதலியார் அவர்களை நன்றியோடு தமது நாவலில் மாசிலாமணி முதலியார் தெருவிலே என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கிராமச் சூழலில் வாழ்ந்தவர், அந்த வகையில் பார்க்கிறபொழுது, டாக்டர் மு.வ. சின்னஞ்சிறு வயதிலேயே எளிமையாக எழுதுவது என்பது அவருக்குக் கைவந்த கலை. அக்கலை எப்படி வளர்ந்தது? பெர்னாட்சாவை அவர் ஆழ்ந்து ஆழ்ந்து படிப்பார். அவரது கையில் எப்பொழுதும் ஆங்கில நூல் ஒன்று இருக்கும். அதிலும் பெர்னாட்ஷாவினிடத்திலே பெரிய ஈடுபாடு உடையவர்.

ஒரு மாணவர் அதுவும் அவர்களுடைய நெஞ்சம் கவர்ந்த மாணவர் என்று சொன்னால், பண்பாடு உடைய மாணவர் என்று அவர் எண்ணிவிட்டால் அவர்களுக்கு அவர் உதவியது இருக்கிறதே அதற்கு எல்லையே கிடை யாது. இப்படிப்பட்ட ஒரு மனிதனை நாம் வாழ்க்கையி லேயே பார்க்கவே முடியாது. தமிழ் இலக்கிய வரலாற்றை அவருடைய ஊக்கத்தால்தான் நான் எழுதினேன். நான் அப்பொழுது இருபத்தோரு வயதுப் பையன். அவர், பாரி நிலையத்தாரிடம் எனக்கு நீங்கள் என்ன ராயல்டி

கொடுப்பீர்களோ அதே ராயல்டியை இந்தப் பையனுக்கும் கொடுக்கவேண்டும் என்று என்னை வைத்துக்கொண்டே "போனில்" அவர்களிடம் பேசினார்கள். இப்படிப்பட்ட மனநிலை எவருக்கும் எளிதில் வராது, மிக உயர்ந்த பண்பாடுடையவர்களெல்லாம் அவரோடு பழகியிருக் கிறார்கள் இதனால் அவரது சிந்தனையில் தெளிவு இருந்தது. அவரது சிந்தனையில் குறைபாடே இல்லா திருந்தது. அதற்கும் மேலே அவருடைய சிந்தனையால் பயன் விளைந்தது. அவர் ஒன்று சொன்னால் அது அப் படியே நடக்கும்; அப்படிப்பட்ட ஒரு சிந்தனை வளம் அவரிடத்திலே இருந்தது.

முதல் சிந்தனை அவர் இந்த உலகத்திற்கு ஒரு பெரிய தத்துவத்தைக் கொடுத்திருக்கிறார். எவரும் எண்ண முடியாத, ஆனால் மிகச்சிறந்த ஒரு தத்துவம் அது. அதனை எண்ணினால் வாழ்க்கையில் நிம்மதியாக வாழலாம்.

"இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும்; ஈ எறும்பாலும் முடியும். தேவையானது கிடைக்கும்போது ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலே மொய்க்கின்றன. அதுபோல் இன்பம் உள்ளபோது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக்கொள்வார்கள். ஆகையால் இன்பத் திற்குத் துணையாக வல்லவரை நம்பாதே, துன்பத்திற்குத் துணையாக இருக்கவல்லவரைத் தேடு. உறவானாலும் நட்பானாலும் காதலானாலும் இப்படித்தான் தேட வேண்டும்."

—அல்லி. ப. 124

"நீ விரும்பியது கிடைக்கவில்லை என்றால்
கிடைத்ததை விரும்பவேண்டும்"

என்று சொல்வார். இன்றைக்கு, பலர் தம் வாழ்க்கையில் தான் விரும்பியது கிடைக்கவில்லை என்று சொன்னால் தற்கொலைகூடச் செய்துகொள்கிறார்கள். இதனை அவர் சாடி எழுதுகிறார்.

இக் கருத்தினை 'அல்லி' என்ற பாத்திரத்தின்வழி சொல்லியிருக்கிறார்.

"துன்பந் துணையாக நாடின் அதுவல்லது
இன்ப முண்டோ வெமக்கு"

—கலித்தொகை: பாலைக்கலி: 5: 10—11-

இந்தக் கலித்தொகைக்கு வடிவம் கொடுக்கிறார். ஆகவே' மனத்திலே பதிகிறவகையிலே தத்துவங்களை, சிந்தனை களை நமக்கு எடுத்துச் சொல்கிறார். இதற்கும் மேலே, இந்த நூற்றாண்டிலே பெண் உரிமையை வாழ்த்திப் பேசியவர்கள் பாரதியார், பாரதிதாசனார், திரு. வி.க., மு.வ. பின்னாலே பேரறிஞர் அண்ணா போன்றோர் வருகின்றார்கள். ஏன் என்றால் இவர்கள் பெண்ணுக்குப் பெருமை சேர்க்கவேண்டும், பெண்ணுக்குச் சிறப்புத் தரவேண்டும் என்று பேசியவர்கள். அப்படிப் பேசுகிற பொழுது அவர்களிடத்திலே ஓர் உணர்ச்சி இருக்கும். இங்கே பார்க்கிறபொழுது ஒரு பெண்ணுக்குக் கோபம் வருகிறது. சமுதாயத்தைப் பற்றி ஒரு கேள்வி. அவருடைய எழுத்தில் பார்க்கிறபொழுது எவ்வளவு உணர்வு, எவ்வளவு ஆழம் இருக்கிறது என்பதை நாம் பார்க்கலாம்.

ஒரு நாள் மொழிநூல் வகுப்பு நடத்திக்கொண்டிருந்த பொழுது,

"அன்றியும் தமிழ் நூற்கு ஓர் அளவில்லை
ஐந்தெழுத்தால் ஒரு பாடையென்று
அறையவும் நாணுவர் அறிவுடையோரே"

என்று குறிப்பிட்டுள்ள சுவாமிநாததேசிகர் தமிழில் என்ன இருக்கின்றது; அ, இ, உ, எ, ஒ இந்த ஐந்து எழுத்துக் களைத் தவிர வேறு என்ன இருக்கின்றது. இதைப்போய் உயர்தனிச் செம்மொழி என்று கூறுகிறார்களே, இதில் என்ன சிறப்பு இருக்கின்றது? என்று குறிப்பிட்டுள்ளார். உடனே அவரது கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. 'தமிழ் நாட்டின் சோற்றையும் பருப்பையும், நெய்யையும் தின்றுகொண்டு இப்படி எழுதியுள்ளாரே இப் பெரியவர் என்று அன்றைக்கு முழுவதும் ஒரே கோபமாக இருந்தார். இப்படித் தமிழ்மொழியில் பேசிய ஒருவர் சொன்னாரே என்று கோபப்பட்டார்.

இளங்கோவடிகளைத் தமிழர், கலைஞர், அறவோர் என்ற மூன்று தலைப்புகளிலே கண்டவர் அவர். இளங்கோ வடிகள் மூன்று காண்டங்களின் பெயராக மூன்று தலை நகரங்களின் பெயரினை வைத்ததன் வாயிலாகச் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் தலைநகரங்கள் ஒன்றுபட்டு இருக்கவேண்டும் என்று நினைத்தார். இந்த மூன்று தமிழரசும் ஒன்றாக இருக்கவேண்டும்; தமிழர் என்ற உணர்வுடன் இருக்கவேண்டும் என்று எண்ணினார் இளங்கோவடிகள். ஆகையினால்தான் இளங்கோவடி களையே அவர் கனவுகண்ட முதல் தமிழன் எனலாம்.

'குடவாயில் கோட்டத்து அரசு துறந்து இருந்தாலும் கூட' அந்தத் தமிழனுக்கு, அந்தச் கலைஞனுக்கு, அந்தக் கவிஞனுக்கு, தமிழன் ஒன்றாக வாழவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. இது முதல் நிலை.

அடுத்து,மிகப்பெரிய பகுத்தறிவாளர் கூடச் சோதிடர் இடத்திலேயே போய்ச்சோதிடம் கேட்பது என்பது இன்றைக்கும் இருக்கின்ற ஒரு பழக்கம். அந்தச் சோதிடம்

ஒரு பெண்ணினுடைய வாழ்க்கையை எப்படித் துன்பப் படுத்துகிறது, அவலப்படுத்துகிறது என்பதை எண்ணுகிற பொழுது சொல்கிறார்:

"பெற்று வளர்த்துப் பாராட்டிச் செல்வ மகள் என்று போற்றிய அதே பெண்ணை எவனோ ஒருவன் ஒரு பழம் பஞ்சாங்கத்தைப் புரட்டிச் சொன்னதைக் கேட்டு, அன்றுமுதல் சனியன் என்றும், தரித்திரம் என்றும் பேசுவதா? அவ்வாறு சொன்னவன் சனியன்; அதைக்கேட்டவர் சனியன்; அந்த நம்பிக்கை சனியன்; இந்தச் சனியன் தொலைந்தால்தான் வீடு சீர்ப்படும் குடும்பம் சீர்ப்படும்! இந்தச் சோதிடத்தை எல்லாப் பைத்தியக்காரிகளும் நம்புகிறார்கள்" இது மு.வ. வினுடைய கருத்து. இன்னோர் இடத்திலே அவர் சொல்வார்.

"இந்தக் காலத்தில் ஐந்து ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தவளைக் கண்டால் தெய்வம் என்று கையெடுத்துக் கும்பிடலாம்"

என்பார். ஐந்தாறு பிள்ளைகளைப்பெற்று, அவர்களைத் தம்முடைய வாழ்நாளில் ஒழுங்காக—செம்மையாக வளர்த்த பெண்மணியைக் கண்டால் கையெடுத்துக் கும்பிடுவேன் என்று சொல்கின்றார்.

அவர் இதற்கும்மேலே ஒருபடிசென்று ஓரிடத்தில் எல்லாவற்றையும்விட இயற்கைதான் சிறந்தது என்று சொல்கின்றார். இதிலே அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. இறைவனுக்கு அடுத்த நம்பிக்கை இயற்கையிடம் அவருக்கு இருந்தது.

"நோயை உண்டாக்கியது இயற்கை. நோயைத் தீர்க்கும் ஆற்றலும் அதற்கு உண்டு. நல்ல காற்று, வெளிச்சம், தட்பவெட்பமாறுதல் இவைகளுக்கு இருக்கும் வல்லமை எந்த டாக்டருக்கும் இல்லை" என்று அவர் எழுதுகிறார்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருந்த டாக்டர் மு.வ. அவர்கள் 'பழியும் பாவமும்' என்ற நாவலில் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள்?.

'முந்நூறு நானூறு பேர், மூவாயிரம் நாலாயிரம் பேர் வரவேண்டும் என்றும், முழுதும் தெரிந்தவர்கள் அரை குறையாய்த் தெரிந்தவர்கள் அத்தனைபேருக்கும் அழைப்பு அனுப்பி அனைவரும் வரவேண்டும் என்றும் முயல்வது ஒரு பெரிய ஆடம்பர மூடநம்பிக்கை'

'திருமணத்திற்கு வருமாறு எல்லோருக்கும் அழைப்பு அனுப்பி வற்புறுத்தும் மூடவழக்கம் தொலைய வேண்டும்' என்ற ஒரு கருத்து சொல்கிறார்.

மு.வ. அவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றை எழுத எவருக்கும் அனுமதி தரவில்லை. அவருடைய வாழ்க்கைக் காலத்திலே; அவரோடு நான் உரையாடிக் கொண்டிருந்த காலத்திலே அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை நான் எழுதுகிறேன். அதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்டிருக்கின்றேன். அதற்கு அவர் இடம் தரவில்லை. அதற்கு ஒரு காரணம் சொன்னார். 'இந்த உலகத்தில் சான்றோர்களை ஒரு பெரிய கடல் என்று எடுத்துக் கொண்டால், அதிலே நம்முடைய வாழ்க்கை என்பது ஒரு சிறு துளி. அதை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தச் சிறு திவலைக்கும் ஒரு வரலாறு வேண்டுமா?' என்று கேட்பார்,

அவர்தம் வாழ்க்கைக்குப்பின் அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத நம்முடைய குடும்பத்தை நன்கு அறிந்த உங்களால்தான் முடியும் என்று அவருடைய மூத்த மகனார் டாக்டர் அரசு என்னிடம் கேட்டுக் கொண்டபிறகே நான் அவர்தம் வரலாற்றை எழுதித்தர ஒப்புக் கொண்டேன்.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும்
தென்ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

—திருஞானசம்பந்தர்

என்பது தேவாரம். இந்த உலகத்திலே ஒரே ஒருவர் புகழே பேசப்படவேண்டும். அது மதுரையில் இருக்கக் கூடிய சொக்கநாதப்பெருமான் புகழை மட்டுமே பேச வேண்டும் என்று சொல்வதுபோல, நாம் எப்பொழுதும் இறைவனுடைய புகழையே பேசவேண்டும். நம்முடைய புகழ் பேசப்படக்கூடாது அப்படிப் பேசப்பட்டால் அது ஆணவமாகிவிடும், செருக்காகிவிடும், என்பார்.

இந்த அடிப்படையில் நாம் எண்ணிப் பார்க்கிற பொழுது அவருடைய சமயம் தெளிவாகிறது. அந்தச் சமயம்தான் திருநாவுக்கரசருடைய சமயம். இதை அவர் அடிப்படையிலே சொல்வார்: "சடங்குகளே நம்முடைய வாழ்க்கை வழிபாடாய் ஆகிவிட்டன. இந்தச் சடங்குகளே எனக்குப் பிடிக்காது. இது வழியே தவிர முடிவாகாது. இறைவன் என்பதுதான் முடிவு. நாம் சடங்குகளிலேயே காலம் கழித்துக்கொண்டிருக்கின்றோம். சடங்குகள் சமயம் ஆகாது" என்பார். இதிலே மிகத் தெளிவான எண்ணம் உடையவர். அப்படையிலே ஆழ்ந்த சமயம்-உண்மையான சமயம் என்பது இதுதான் என்று நாம் உணரலாம். அதற்கும்மேலே அவர் தெளிவாகச் சொல்கிற

பொழுது அவருடைய தெளிந்த கருத்தை, சமயங்களைப் பற்றி அவர் சொல்லுகின்ற கருத்தைப் பின்வரும் பகுதி கொண்டு அறியலாம்.

'சமயங்களின் பெயரால் கோயில்களிலும் வீடுகளிலும் நடத்தப்படும் சடங்குகள் எல்லாம் சடங்குகளே என்று உணரவேண்டும். கடவுள் நெறிக்குப் பயன் படும் என்று முன்னோர்களால் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டவை அந்தச் சடங்குகள், சடங்கு களே முதன்மையானவை என்று நம்பிவிடக்கூடாது. சடங்குகளைச் செய்வதே போதும் என்று எண்ணி விடல் ஆகாது. மன ஒருமைப்பாட்டுக்கும் பண் பாட்டுக்கும் உதவும் என்றுமுன்னோர் சிலர் ஒவ்வொரு குழுவார்க்கும் சடங்குகள் சிலவற்றை ஏற்படுத்தித் தந்தார்கள். அந்தச் சடங்குகள் எல்லார்க்கும் தேவை என்றோ, எல்லாக் காலத்திற்கும் தேவை என்றோ வற்புறுத்தக்கூடாது. அவ்வாறு வற்புறுத்துவதால் நாத்திகம் (கடவுள் மறுப்பு) பெருகுமே தவிர வேறு பயன் விளையாது. சமயங்களில் நல்ல உண்மைகள் இருந்தபோதிலும் பொய்ம்மை பெருகியதற்கு அத்த கைய வற்புறுத்தலே காரணம் ஆகும். கடவுள் நெறிக்கு உதவும் வழிவகைகள் என்று ஏற்படுத்தப் பட்டவைகளே தவிர, அவைகளே கடவுள் நெறி அல்ல. சமயங்களில் வழிவழியாக வந்த வேடங்களும் அப்படிப்பட்டவைகளே. அவற்றை விரும்புவோர் கொள்ளலாம்; விரும்பாதவர் விடலாம். வற்புறுத்தல் கூடாது. அவரவர் மனம் வளர்ந்த வளர்ச்சிக்கு ஏற்ற வாறு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது அப்பால் செல்லலாம். அவைகளுக்கு முதன்மை கொடுப்பதால் மக்களிடையே பிளவும்

பூசலும் வளர்ந்து சமுதாயம் தேங்கி நிற்பதை வரலாறு உணர்த்துகிறது. ஆகையால் கடவுள் நெறிக்குத் தவிர வேறு எதற்கும் முதன்மை தரல் ஆகாது!"

அதனால் அவருடைய ஆழ்ந்த கருத்து, இன்றைக்கு மக்கள் கடவுள் நெறியை மறந்துவிட்டு சடங்குகளிலேயே காலம் கழிக்கிறார்கள் என்பதாகும். சடங்குகளின் வழிமுறைகளிலேயே காலத்தைக் கழிக்கிறார்கள். ஆண்டவனிடத்திலே உள்ளம் செல்லவில்லை. அப்படிச் செல்வதற்கு என்ன வழி? மிகப்பெரியவர்கள் தம்முடைய வாழ்க்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

'நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்றீயின்
படமாகுங் கோயில் பகவற்கங் காகும்
படமாடுங் கோயில் பகவற்கொன்றீயின்
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றாகா'.

—திருமந்திரம்.

இங்கே ஒரு தரித்திர நாராயணனுக்குக் கொடுத்தார்கள் என்றால் ஆண்டவனுக்குக் கொடுத்ததுபோல. ஆனால் ஆண்டவனிடத்திலே கொண்டு கொடுத்துவிட்டால், அது நடமாடும் கோயிலுக்குப் போய்ச் சேரும் என்று சொல்ல முடியாது. இதைவிடப் பெரிய தத்துவம் சொல்ல முடியாது.

'ஓர் ஏழைக்கு இரங்கி உதவி செய்; அது ஆண்டவனை வழிபடுவதுபோல ஆனால் ஆண்டவனை நான் நாள் தோறும் வழிபடுகிறேன். பதினாறு பூசைகள் செய்கிறேன். என்றால் அதிலேயே நிற்காதீர்கள். அந்த நெறிகளிலேயே பற்று வைத்துக்கொண்டு போங்கள்" என்கிறார்.

அதற்கு மேலே வாழ்க்கைக்கு ஒரு விளக்கம் தருகிறார். "நம்முன்னோர்களைப் போல் அவ்வளவு அமைதியாக இன்பமாக நாம்வாழமுடியவில்லை.பல வகைகளிலும் நமக்கு உதவிவருகிற அறிவியல் நம் வாழ்க்கையின் அமைதிக்கு அவ்வளவாக உதவி செய்யவில்லை, இயற்கை வளம் மிகுந்து செல்வம் கொழிக்கும் நாடுகளிலும் மக்களின் வாழ்க்கையில் குறை பல இருந்துவந்திருக்கின்றன. வறுமை மிகுந்து உள்ள நாடுகளில் உள்ள குறைகளைச் சொல்லத் தேவையில்லை. ஆகவே பல வகைகளிலும் முன்னேறி யுள்ள இந்தக் காலத்தில் வாழும் வழி மட்டும் இன்னும் தெளிவாக அமையவில்லை என்றும் தெரிகிறது. அதற்கு என்ன வழி? தீர்வு என்ன?

'வாழ்க்கையில் அன்பு வேண்டும், அருள் வேண்டும், உண்மை வேண்டும், நன்றி உணர்வு வேண்டும், என்றெல் லாம் சான்றோர்கள் அறிவுறுத்தினார்கள். இவையெல்லாம் இன்றைக்கும் நீங்கள் பார்க்கலாம்.

'திருக்குறள் முதலான நீதிநூல்கள் இவற்றைத் தெளி வாக உணர்த்துகின்றன. ஆனால் அறிவு என்பதன் விளக்கங்களை மனம் நம்புவதுபோல இந்த அறநெறியை, வாழ்க்கை நெறியை நம்புவதில்லை. வானத்திற் பறக்கும் விமானத்தைப் பற்றியோ வானொலிப் பெட்டியைப் பற்றியோ, சந்திரமண்ட லங்களுக்குச் சென்று வரும் கருவியைப் பற்றியோ, அறிவியல் விளக்கம் சொன்னால் மனம் இயல்போடு கேட்கிறது; நம்புகிறது; பணிகிறது. ஆனால், கடவுள் ஒவ்வொருவருக்கும் ஓர் உடம்பைத் தந்து உடம்புக்குள் நற்பொருள்களைப் படைத்து மனத்தையும் படைத் திருக்கிறார். இந்த உடம்பைக் கொண்டு வாழ்வதற்கு உலகத்திலே ஒரு சிறுபகுதியையும் ஒவ்வொருவருக்கும்

தந்திருக்கிறார். புலன்களைக் கொண்டும், மனத்தைக் கொண்டும் இன்ப துன்பங்களை உணரும் உணர்வையும் இன்பத்தை நாடும் வேட்கையையும் அமைத்திருக்கிறார். முன்னும் பின்னும் நாடி, நல்லதும் தீயதும் பகுத்தறிவதற்குரிய அறிவையும் கொடுத்திருக்கிறார். இத்தனையும் கொண்டு மனிதன் வாழும் வாழ்வில் அளவு அறிந்து நெறி அறிந்து வாழ்ந்தால் அமைதியாக இன்பமாக நெடுங்காலம் வாழலாம். அவன் அளவு அறியாமலும் நெறி அறியாமலும் வேகமாக வாழ்ந்தால்; மனம்போன போக்கில் வாழ்ந்தால் பெற்ற உடம்பும் விரைவில் கெடும்; புலன்களும் பாழ்படும், மனமுங் கலங்கும் அறிவும் தடுமாறும்.'' இது தான் அவர் வாழ்க்கைக்குத் தருகிற விளக்கமாகும்.

ஆக, வாழ்க்கையிலே அன்பு, அருள், நன்றியுணர்வு இவையெல்லாம் வேண்டும். இந்த அடிப்படை உணர்வை நாம் பெற்றிருந்தால் வாழ்க்கையில் நன்றாக இருக்கலாம்.

அதனாலே, ஐந்து சாதி ஆண்களையும் ஐந்து சாதிப்பெண்களையும் அவர் படைக்கிறார்.

''ஆண்களில் ஐந்து சாதிகள்:

மனைவியே தெய்வம் என்று, சொன்னபடி கேட்டு மனைவிக்கு அடங்கி நடப்பவன் முதல் சாதி.

குடும்பத்தில் பற்றும் தொழில் நிலையத்தில் தாமரை இலைத் தண்ணீர் போன்ற மனப்பாண்மையும் உடையவர்கள் இரண்டாவது சாதி.

குடும்பத்தில் பற்றில்லாதவர்; வெளியே ஒருத்தியிடம் அல்லது சிலரிடம் காதல் கொள்பவர்கள்.

திருமணம் செய்து கொள்ளாமலேயே உண்மையான பிரம்மச்சாரிகளாக வாழ்கிறவர்கள் அடுத்த சாதி யினர்.

திருமணம் செய்துகொள்ளாமல் மனம்போன போக்கில் வாழ்க்கை நடத்துபவர்கள் ஐந்தாம் சாதி."

இப்படி ஆண்களில் ஐந்து சாதிகள். அடுத்து, பெண்களில் ஐந்து சாதிப் பெண்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் :

' உலகத்தில் ஐந்து சாதிப் பெண்கள் உள்ளனர். இது பிறப்பால் அமைந்த பாகுபாடு அல்ல. மனத்தால் வாழ்வின் போக்கால் அமைந்த பாகுபாடாகும்.

''பழங்காலத்துத் தமிழ்ப் பெண்கள்போல் குடும்பமே உலகமாய், கணவனே தெய்வமாய் அடக்கத்தோடு வாழும் பெண்கள் ஒருவகை.

சமையலறையிலும், குழந்தைத் தொட்டிலிலும் தங்கள் இன்பத் தொழிலைக் காண்பவர்கள் ஒரு சாதி.

படிப்புக்கேற்ற தொழில் வேண்டுமென்று தேடி குடும்பத்தில் பாதிவாழ்வும் தொழில் செய்யும் இடத்தில் பாதி வாழ்வும் வாழ்கிறவர்கள் அடுத்தசாதி. ஆனால் மானத்தில் பழங்காலப் பெண்களைப்போல் குடும்ப வாழ்வில் விருப்பம் உள்ளவர்கள் இவர்கள்.

குடும்பத்தில் பற்று கொண்டு வெளி வாழ்வில் தாமரை இலைத் தண்ணீர் போல் பற்றில்லாமல் வாழ்பவர்கள் ஒருவகை.

திருமணம் ஆகிவிட்டதே இனிமேல் விலக வழி இல்லையே என்று குடும்பத்தில் வாழ்க்கை நடத்தி

வெளி உலகத்தில் ஆர்வம்மிகுந்த பெண்கள். குடும்பத்தில் அவர்கள் தாமரை இலைத் தண்ணீர்போல் பற்றில்லாமல் வாழ்வார்கள். ஆனால் தொழில் நிலையம், தோழமை உலகம், பொழுதுபோக்கு நிலையம் முதலியவற்றில் ஆர்வமாக இருப்பார்கள். கணவனைப் பெயரளவுக்குக் கொண்டிருப்பார்கள். அல்லது சட்டத்தின் அளவிற்குச் சட்டை செய்வார்கள்.

சில பெண்கள் திருமணம் வாய்க்காது வாழவேண்டியிருக்கிறது. சிலர் திருமணம் கூடிவந்தாலும் வெறுத்துத் தள்ளிவிடுகிறார்கள். இவர்களில் பலர் உலகப் பழிக்கு அஞ்சி, கன்னிப் பெண்களாகவே ஒழுக்கத்தோடு வாழ்ந்து சாகிறார்கள். இவர்கள் நான்காவது வகை.

சிலர் ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மனம் விரும்பியபடி வாழ்கிறார்கள். இவ்வாறு ஒழுக்கத்தில் பற்றில்லாமல் வாழ்கிறவர்கள் ஐந்தாம் சாதி.''

இப்படிச் சொல்லிவிட்டு நகைச்சுவையோடு ஒன்று சொல்கிறார்.

'கலப்புத் திருமணத்தை நான் வற்புறுத்துபவன். ஆனால் ஒன்றே ஒன்றில் கலப்பு இருக்கக்கூடாது. 'இப்படித்தான் வாழவேண்டும் என்கிற ஒரு சாதி, எப்படியும் வாழலாம் என்கிற ஒரு சாதி' இந்த இரண்டிற்குமிடையிலே கலப்புத் திருமணம் இருக்கக் கூடாது'.

இந்த ஒரு வகையிலே அந்த வாழ்க்கையை ஆழ்ந்து பார்க்கிற ஓர் எண்ணம் இருந்தது. அதனாலேதான்

அவருடைய கடித இலக்கியங்களை நாம் நோக்கும் பொழுது. இந்தக் கடித இலக்கியங்களிலே சிந்தனையினுடைய மணிமுடியை நாம் பார்க்கலாம். ஆனால் அதைத் தமிழர் பின்பற்றுவதில்லை. ஏனென்றால், நூல்களைப் படிக்கின்ற வேட்கை, உலகத்திலேயே தமிழகத்தில்தான் குறைவு.

அடுத்து ஒரு கருத்தைச் சொல்கிறார் :

"நல்ல வளமாக வாழவேண்டுமென்று சொன்னால் முதலில் என்னவேண்டும்? உடல் நோயற்று இருப்பது முதல் இன்பம், மனம்கவலையற்று இருப்பது இரண்டாவது இன்பம், உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது மூன்றாவது இன்பம். இந்த மூன்றும் இருக்கிற பொழுதுதான் அந்த வாழ்க்கை மிகச் சிறந்த வாழ்க்கையாக அமைகின்றது" என்பது அவருடைய எண்ணம்.

குடும்ப வாழ்க்கையைப் பற்றி, குடும்பம் எப்படி அமையவேண்டும் என்பது பற்றிச் சொல்கிறபொழுது:

"வீட்டைத் துறப்பது, செல்வத்தை வழங்குவது, உயிரைக் கொடுப்பது இவைகளும் தியாகம்தான். ஆனால், அன்பானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் தியாகம்தான் பெரிய தியாகம்." எல்லாவற்றையும்விட இந்த உலகத்திலே மு.வ. விரும்பியது என்று அவருடைய வாழ்க்கையைப் பார்த்து, அவருடைய பேச்சையும் பார்த்து, அவருடைய எழுத்தையும் பார்த்துச் சொல்லத்தக்கது கணவன் மனைவியும் அன்பால் இணைந்து வாழ்

வதனைக் காண்பதிலேதான் பேரின்பம் என்கிறார், மு.வ. அன்பாக வாழவேண்டும்; விட்டுக்கொடுத்து வாழவேண்டும். பிணங்கி வாழக்கூடாது என்பதிலே அவருக்கு வேட்கை மிகுதியாக இருந்தது. அவ்வாறு விட்டுக்கொடுத்து வாழும் பெருந்தன்மை இல்லா விட்டால், கணவன் மனைவி கூடி வாழமுடியாது. எவ்வளவு அன்பு இருந்தாலும், போரும் பிணக்கும் வளருமே தவிர அன்பும் அமைதியும் வளர முடியாது. அதனால் கணவனும் மனைவியும் கற்கவேண்டிய முதல் பாடம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பது தான். அதுவே கடைசிப் பாடமுமாகும். ஆக, விட்டுக் கொடுத்தல் என்கிற ஒன்றுதான் மிகச் சிறந்த ஒன்று என்று சொல்லலாம். கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள், 'அடக்கிப் பார் அல்லது அடங்கிப்போ' என்று சொல் வார்கள். மு.வ. அவர்களுடைய வாழ்க்கையில் பல முறை சொல்வார்கள்; 'நீ பிறரை ஒதுக்காதே,ஆனால் ஒதுங்கிப் போய்விடு' என்று. மேலும், தம்முடைய வாழ் நாளிலே எதற்கும் மறுப்புக் கொடுக்க மாட்டார். காரணம், தம்முடைய ஆற்றல் அதிலே வீணாகிவிடும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். குடும்ப வாழ்க் கையில்மூன்றாவது பேர் நுழையக்கூடாது என்பதிலே அவருக்கு ஆழ்ந்த அக்கறை இருந்தது. தன்னுடைய இல்லற வாழ்க்கையிலே மூன்றாவது பேருக்குத் தெரியாமல் எவன் ஒருவன் நடத்து கிறானோ அவன்தான் வாழ்க்கையில் வெற்றியடை பவன் என்று கருதுவார்.

அதற்கு முடிமணியாக, முடிப்பதற்கு முன்னாலே அவர் குறித்த பெரிய செய்தி தீங்கு செய்தவருக்குக் கூட அவர் தீங்கு செய்ததில்லை என்பதுதான்.

அடிப்படையிலே மு.வ. அவர்கள் என்ன எண்ணி னார்கள் என்று பார்க்கும்பொழுது. பறவைகள் விலங்குகள் மகிழ்ச்சியாக வாழ்கின்றன. அவைகளைவிட அறிவுடைய மனித இனம் ஏன் அமைதியாக வாழமுடிவதில்லை? என்று கேட்டுவிட்டு, அவைகளுடைய வாழ்க்கையில் வம்புப் பேச்சுக்கு இடம் இல்லை. இந்த மனிதன் பேசிப் பேசியே கெட்டுப் போகின்றான் என்று அவர்கள் சொல்வார்கள்.

சமயங்களிலே, சமய ஒழுகலாற்றிலே அவருடைய கருத்துகள் என்ன? இறைவனை ஆடம்பரமாக வழிபடக் கூடாது. இது அவருடைய அசைக்கமுடியாத கருத்தாகும். இதற்கு என்ன சொல்வார் என்று பார்த்தால், தேர்த் திருவிழா நடக்கும்பொழுது மக்கள் அனைவரும் ஒரே நாளில் ஆண்டவனைப் போய்ப் பார்க்காதீர்கள். அவர வருக்கு ஏற்ற நாளில் அவரவருக்கு வசதியான நாளில் போய் ஆண்டவனைக் கும்பிட்டுவரலாம். இது அவருடைய கருத்து. இந்த எண்ணம் அவருடைய தனித்தன்மை. ஆனால் எல்லாவற்றையும்விட அவர் நெஞ்சில் நிற்பவர் திருநாவுக்கரசரே ஆவர்.

ஏனென்றால் அப்படிப்பட்ட உழவாரத் தொண்டினை இன்றுவரை உலகத்திலே யாரும் செய்யவில்லை என்பது அவருடைய அழுத்தமான கருத்தாகும்.

எண்ணற்ற சான்றோர்கள் இந்த மண்ணிலே நடந்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் நடந்துசென்ற மண்ணிலே நாமும் நடந்து செல்கிறோம். அதுவே நமக்குப் பெருமை. அந்தச் சான்றோர்கள் தம்முடைய சிந்தனைகளை நம் மிடையே வைத்துச் சென்றிருக்கிறார்கள். திருவள்ளுவ ருடைய சிந்தனை என்னவென்று தெரியும், தாயுமானவ

ருடைய சிந்தனை என்னவென்று தெரியும். அங்கே தொடங்கி இங்கே வரையிலும் அடிப்படையிலே ஒன்று தான் என்பார். திருவள்ளுவர்,

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்' (குறள் 1062 :)

என்பார்

பத்துக் குறட்பாக்களில் ஆண்டவனைப் பற்றியே பேசிய திருவள்ளுவர், ஒருவன் பிச்சை எடுத்துத்தான் சாப்பிடவேண்டும் என்கிற நிலை இந்த உலகத்திலே வருமானால், அவனைப் படைத்த ஆண்டவனே அழியட்டும் என்று பேசுகிறார்.

அதற்கப்பால் புறநானூற்றுக்கு வருவோம்.

'தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லாம் ஒரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே'

—புறநானூறு; 189.

என்பது புறப்பாட்டு,

தாயுமானவர்,

'யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாய்' என்று சொல்வார்.

நம்மிடம் அனைத்து வசதிகளும் இருந்தாலும்கூட நாமும் சாதாரண மக்களைப் போல வாழ்ந்து பார்க்க வேண்டும். பிறர் எப்படியெல்லாம் துன்பப்படுகிறார்கள் என்பதை நாம் ஒரு நாளாவது உணர்ந்தாவது பார்க்க வேண்டும் என்று மு.வ. சொல்வார். அதுபோல அவர் பாரிமுனையில் இருந்து பல்கலைக்கழகத்திற்குப் பேருந்தில் சில சமயம் வருவார். இப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னால், இயன்ற அளவுக்கு நாம் பிறருக்கு உதவவேண்டும்.

முடிந்த அளவில் பிறருக்கு உதவு; நம்முடைய சக்திக்கு இயன்ற அளவு பிறருக்கு உதவு என்று சொல்வார். அவர் சிந்தனைகளிலே சிறந்ததாக எண்ணத்தக்கது :

'தனிமனித வழிபாடு அளவுக்குமேல் போகக்கூடாது' என்பதாகும்.

'இளைஞர்களை அவர்களுடைய உள்ளம் வெதும்பு கின்ற வகையில் அவர்களை ஏசி அவர்களுடைய ஊக்கத் தைக் கெடுத்துவிடக்கூடாது' என்பதாகும்,
அதைத்தான்,

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'
—புறநானூறு; 182

என்றது புறநானூறு. அதற்கும் மேலே,

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து'
—திருக்குறள் : 125

என்பது குறள்,

நம்மிடத்தில் வசதிகள் பல இருக்கலாம், ஓரளவாவது வசதிகளை விட்டுக் கொடுத்து வாழவேண்டும்.

''நான் சம்பாதித்து வைத்திருப்பது எட்டு தலை முறைக்கும் போதுமானது. அதனால் நான் எதற்கும் கவலைப்படவேண்டியதில்லை" 'என்று சொல்வார்கள். ஆனால், திருவள்ளுவர் சொல்கிறார் : செல்வர்கள்தாம் கவலைப்படவேண்டும்; மற்றவர்களிடத்திலே பணிந்து போகவேண்டும். ஏனென்றால் செல்வர்கள்தாம் ஈட்டிய செல்வத்தைக் காக்க வேண்டியதற்காக அப்படி இருக்க வேண்டும் என்று சொல்வார். இதனால் முடிந்த அளவு ஏழைக்கு உதவிசெய் என்று சொல்வார்.

அந்த வகையிலே டாக்டர் மு. வ.வினுடைய கருத்துகள் என்று பார்க்கிற பொழுது,

'விரும்பியது கிடைக்கவில்லை என்றால் கிடைத்ததை விரும்பவேண்டும்'

'அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கி நடக்க வேண்டும்; 'உரிமைக்காகப் போராடிக் காலம் கழிக்கக் கூடாது' என்பன முன்நிற்கும்

அதனால்தான் அவர்களுடைய வாழ்க்கையை நாம் நோக்கும்பொழுது, எளிய வாழ்க்கையாக, பிறருக்கு இரங்கும் வாழ்க்கையாக, உதவும் வாழ்க்கையாக இருந்தது என்பதனை அறிய முடிந்தது.

# டாக்டர். மு.வ.வின் சிந்தனை வளம்

டாக்டர் மு. வ. அவர்கள் ஒரு தனி மனிதர் அல்லர்; அவர் ஓர் இயக்கம். அவர் எழுதிய எழுத்துகளைப் படித்துவிட்டு அன்றைக்கு இளைஞர் பலர் அவரைப் பின்பற்றி நடக்கத் தொடங்கினர். அவருடைய நாவல்கள் நிறைய விற்றன. திருமணப் பரிசாக அந்நாளில் மு.வ.வின் நூல்களே அளிக்கப் பெற்றன. வாழ்க்கையின் பல்வேறு தரப்பு மக்களின் ஒட்டு மொத்தமான மதிப்பும் மரியாதையும் மு.வ. பால் படர்ந்தன. மு. வ. அவர்களும் தனி மனிதரை நன்கு நேசித்தார். பெண்களை இரக்க உணர்வோடு பார்த்தார். அதுவும் வாழ்க்கையில் வழி தவறிய பெண்களுக்காக இரக்கம் 'மிகுதியாகக்காட்டினார். இளைஞர்களுக்காகக் கவலைப்பட்டார். ஏழைகளின் துன்பங்கள் கண்டு வருந்தினார், எனவே சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கிப் புண்களையும் கண்டு அவற்றிற்கேற்ப மருந்துகளையும் கண்டார். சுருங்கச் சொன்னால் சமுதாய மருத்துவராகத் துவங்கினார். அவர் எழுத்து அக்காலச் சமுதாயத்தில் பாதிப்பினை ஏற்படுத்தியது. எடுத்துக் காட்டாக 'மண்ணின் மதிப்பு' என்னும் தம் நூலில் தம் கருத்துகளைப் பின்வருமாறு, பெய்துள்ளார் :

> "இந்த நாட்டு மண்ணுக்கு மதிப்பு உயர வேண்டுமானால், இங்கே உள்ள அற நூல்களின் பெருமையைச் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. இந்தநாட்டு மக்களின் வாழ்க்கையையே சான்றாக எடுத்துச்சொல்ல வேண்டும்.அந்த அளவுக்கு

வாழ்க்கை உயரவேண்டும். அறிவுரைகள் உபதேசங்கள்-மட்டுமே போதும் என்று எண்ணிவிடக் கூடாது. அவைகள் ஓர் அளவுக்கு வேண்டும். அவற்றிற்கு அப்பால் குற்றங்களுக்குக் காரணமாக குறைகள் இல்லாத வகையில் வாழ்க்கை நிலையை உயர்த்தி அமைக்க வேண்டும். களவு ஒழிய வேண்டுமானால் நாட்டில் வறுமை இல்லாதவாறு செய்ய வேண்டும். ஒரு புறம் முப்பது ரூபாய்ச் சம்பளமும், மற்றொரு புறம் மாதம் முப்பதாயிரம் ரூபாய் வருவாயும் உள்ள மிக இழிவான நிலையைப் போக்க வேண்டும், ஆயிரம் மடங்கு உள்ள வேறுபாட்டை அகற்றி, இரண்டு மூன்று பங்கு வேறுபாடுதான் என்ற நிலைக்குக் கொண்டு வரவேண்டும்...இந்த மண்ணில் பிறந்த எல்லோருக்கும் வாழ்வு உண்டு, வளம் உண்டு என்ற நல்ல நிலைமை ஏற்படுத்த வேண்டும்.இந்த மண்ணின் மதிப்பு உயர்வதற்கு அதுதான் தக்க வழி'' (ப:10-11)

''வாள் முனையைவிடப் பேனா முனை சீரியது; சிறந்த பயனைத் தருவது" என்று மாவீரன் நெப்போலியன் குறிப்பிட்டதாகக் கூறுவார்கள். தூய உயரந்த எண்ணங்களைச் சமுதாயமான நிலத்தில் விதைத்து விட வேண்டும். அது ஒரு காலத்தில் உரிய—உயரிய பயனை விளைவிக்கும் என உறுதியாக நம்பினார் மு.வ. அதனால் அவர் பட்டம் பதவிகளை விட எழுந்தாளர் என்ற பதவியே தமக்கு மிகவும் பிடித்தாகக் கருதினார். தாம் கடைசி வரையில் ஒப்வு பெற விரும்பாத பதவி, எழுத்தாளர் பதவிதான் என்றும், எழுத்து அவர் உயிருடன் கவர்ந்து விட்ட ஒன்று என்றும், தம் கடைசி மூச்சு உள்ள வரையில் ஏதாவது எழுதிக் கொண்டே இருக்கப் போவதாகவும், எழுத முடியாத போது சொல்லிக் கொண்டே இருக்கப்

போவதாகவும் தரம் மறைவதற்கு ஒரு திங்கள் முன்னர் மதுரைப் பல்கலைக் கழகத்தில் நடை பெற்ற ஒரு கருத் தரங்கில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒருவர் நன்றாக வாழ்வதற்கு மூன்று நன்றாக இருக்க வேண்டும் என்றும், ஒன்று உள்ளம், மற்றொன்று உடம்பு, மூன்றாவது சுற்றுப்புறம் என்றும், தனி மனிதன் விரும்பினால் உள்ளத்தை நன்றாக வைத்திருக்க முடியும் என்றும் எல்லோரும் சேர்ந்து விரும்பினால்தான் சுற்றுப் புறத்தை நன்றாக வைத்துக்கொள்ள முடியும் என்றும் அவர் நம்பினார். அறிஞர் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத பணி தனி மனிதரைத் திருத்துவது அல்ல என்றும், சமுதாயத்தைத் திருத்துவதே யாகும் என்றும், ஆசையோடு போராடுவதை விட்டு அமைப்போடு போராட வேண்டும் என்றும், பொருட்பற்றைப் போக்கு வதை விட்டுப் பணவேட்டையைப் போக்க முயலவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். நல்ல சமுதாயம் ஏற்படவேண்டுமானால் பழங்காலம் போல் மனச்சான்றுக்கு மதிப்பளிக்கும் சிறிய ஊர்களும் சிறிய அமைப்புகளும் ஏற்படவேண்டும் என்றும், அதுவே காந்திய வழி என்றும், பழங்காலத்தில் மக்களுக்கு நம்பிக்கையும் உறுதியும் ஊட்டியதாகிய சமயத்திற்கு ஒப்பாகிய ஒரு புதிய அமைப்பைத் தோற்றுவித்து, அதனைக் கடவுளுடைய ஆணை என ஏற்று எல்லோரும் எல்லோருடைய நன்மைக் காகவும் பின்பற்றி ஒழுக வேண்டும் என்றும் குறிப்பிட்டு உள்ளார்.

'மண் குடிசை' என்ற நாவலில் சமுதாயம் பற்றிய தம் முடிந்த கருத்தை—சிந்தனை வளத்தினைப் பின் வருமாறு புலப்படுத்தியுள்ளார்.

"உலகத்தைத் திருத்த நம் பங்கு முயற்சி செய்வோம். பணவேட்டையும் புகழ் வேட்டையும் அவற்றால் ஆகிய பலவகை ஏக்கங்களும் கவலைகளும் இல்லாமல் சமுதாயம் சீராகஅமைவதற்கு உரிய வகையில் அறிவை வளர்ப்போம்; அறநெறியைப் பரப்புவோம். உடனே பயன் காண முடியாமல் போகலாம். கவலை வேண்டா; எதிர்கால நன்மையைக் கருதிக் கடமையைச் செய்வோம். ஆங்காங்கு நல்ல விதைகளைத் தூவிச் செல்வோம். அதுவும் இயலாத நிலையானால், இயன்றவரை நிலத்தைப் பண்படுத்தி விட்டுச் செல்வோம். அது நம் கடமை; நல்ல கடமையை உணர்ந்து செய்வதே நல்வாழ்க்கை" (ப : 504)

அறத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர் டாக்டர் மு.வ. அவர்களாவர்; கடவுளின் ஆட்சி என்பதே அறத்தின் ஆட்சி என்பார். "அன்பே கடவுள் என்று சொல்லப்படுவதை விடக் கடவுள் அன்பு வடிவானவர் என்று சொல்லப்பட வேண்டும் என்று விரும்பினார் காந்தியடிகள்" என்பார். பலருடைய 'ஆட்டோ கிராப், ஏட்டில் 'அறம் வாழ்க! அறம் வெல்க' என்றே எழுதிக் கையெழுத்திடுவது டாக்டர் மு.வ.வின் வழக்கம். இவ்வாறு அறம் பற்றிய தம் ஆழமான கருத்தினைப் பின்வருமாறு புலப்படுத்தியுள்ளார் :

"தனி மனிதர் வாழ்க்கைக்கு உணவும் உறக்கமும் இருந்தால் போதும்; மக்கள் பலர் கூடிவாழும் சமுதாய வாழ்க்கைக்கோ அறம் கட்டாயம்வேண்டும். மக்கள் எல்லோரும் கூடி நடத்தும் அரசியலுக்கே அறம் சிறப்பாக வேண்டும். உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ,

அதுபோல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும்"

(அறமும் அரசியலும்; முன்னுரை. ப. 3)

அறத்தின்பால்—அறநெறியின்பால் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த டாக்டர் மு.வ. அவர்கள் தாய் மொழிக் கல்வி என்பதிலும் உறுதியாக இருந்தார். பள்ளி களிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமொழி தவிர அனைத்துப் பாடங்களும் தமிழில் கற்பிக்கப்பட வேண்டும் என்பதில் அதிகக் கவனமாக இருந்தார். அக் கொள்கைக்காகத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார்; போராடினார். 'பொய்க்கால்' என்ற விரிவான கட்டுரையினை இப் பொருள் குறித்து எழுதினார். உயிரான இக்கொள்கை குறித்த அவர் தம் தெளிந்த கருத்து வருமாறு :

"நூல்கள் எந்த மொழியில் இருப்பினும் இருக்க, கற்பித்தலும் கற்றலும் தாய்மொழியில் இருத்தல் கடமை என்ற தெளிவுதான் இன்று தமிழ்நாட்டு அறிஞர்க்கு வேண்டும். ஒரு தலைமுறைவரையில் இந்த நிலைக்கு இடம் கொடுப்போமானால், அடுத்த தலை முறையிலேயே அறிவியல் நூல்கள் பல தாய்மொழி யிலேயே இயற்றப்பட்டுவிடும். இந்தத் தலைமுறை யில் தாய்மொழியில் சிந்தனை வளர இடம் கொடுப் போம். அடுத்த தலைமுறையில் நூல்கள் எழ வழி வகுத்தவர்களாவோம், இந்த நாட்டில் அறிவுக்குப் பஞ்சம் இல்லை; தொன்றுதொட்டு மூளைவளம் உள்ள நாடு இது. ஆதலின் நம்பிக்கை கொள்வோம்; துணிவோம்". (மொழிப்பற்று; ப:102)

குழந்தைகளிடத்தில் நீங்காப்பற்றும், அவர்கள் வளர்ச்சியில் அதிக அக்கறையும் கொண்ட மு.வ. அவர்கள் 'குழந்தை' என்றொரு நூல் எழுதியிருப்பதனை முன்னரே கண்டோம். குழந்தைகளை நல்ல முறையில் ஓம்பி வளர்க்கும் பொறுப்பு பெற்றோர்க்கே உண்டு என்பதனை மு.வ. அவர்கள் உணர்த்தும் பாங்கு போற்றத்தக்கதாகும்.

> "குழந்தை இளஞ்செடி போன்றது. மற்றவர்கள் வளர்ந்த மரம் போன்றவர்கள். இளஞ்செடியை வளர்க்கும் மண் நீர் காற்று ஒளி ஆகியவை உயிரற்றவை. என்றும் ஒரு நிலையாக இருப்பவை. ஆனால் குழந்தையை வளர்க்கும் பெற்றோரும் மற்றோரும் உயிருள்ளவர்கள்; உணர்ச்சியுடையவர்கள்; மாறும் இயல்புடையவர்கள். ஆகையால் இளஞ்செடி போலக் குழந்தை இயல்பாக வளரமுடிவதில்லை. வளர்ப்பவர்களின் உணர்ச்சிகளும் விருப்பு வெறுப்புக்களும் அறிவும் அறியாமையும் குழந்தையின் வாழ்வைப் பலவாறு மாற்றியமைக்கக் காண்கிறோம்" (குழந்தை; ப:3)

டாக்டர் மு. வ. அவர்களோடு நெருங்கிப் பழகியவர்களுக்குக்கூட அவர் எச்சமய நம்பிக்கைகளை மேற்கொள்கிறார் என்பதனை அறிந்து கொள்ள இயலாது. அவர் ஆத்திகரா, நாத்திகரா என்று அறிய முடியாமல் சிலர் தடுமாறுவர். டாக்டர் மு.வ. அறத்தில் அசையாத நம்பிக்கை உடையவர். அதுபோன்றே அறத்தின் தலைவர் என்று கருதிய கடவுளிடத்திலும் அசையாத பக்தியுடையவர். பக்தியை ஆரவாரம் செய்து புலப்படுத்திக் கொள்ளாதவர். அமைதியான தியானத்தில் பற்றுமிக்கவர்; திருநாவுக்கரசர் பாடல்களில் உள்ளம் தோய்ந்தவர்.

நம்மாழ்வார் பாடல்களை விரும்பிப்படிப்பார். ஆண்டாள் பாடல்களைப் பாடி மெய்யுருகி நிற்பார். மாணிக்கவாசகரின் மிகப் பல பாடல்கள் அவருக்கு மனப்பாடம். தாயுமான தயாபரர் பாடல்களை வாய்விட்டுப் பாடுவார். வள்ளலார் அருட்பாவிலும் ஈடுபாடு உண்டு. இராமகிருட்டினர், விவேகானந்தர், இராமதீர்த்தர் ஆன்மீக உரைகளில் நெஞ்சம் நெகிழ்ந்து நிற்பார். தட்சிணாமூர்த்தி மூர்த்தத்தில் நெஞ்சம் பறிகொடுப்பார். தாயுமானவரின் பராபரக் கண்ணி, கிளிக் கண்ணி முதலியன அவருடைய பூசனைக்குரிய பாடல்கள். சமயத்துறை பற்றி அவர் கொண்டிருந்த எண்ணம் 'நல்வாழ்வு' என்னும் நூலில் எதிரொலிக்கக் காணலாம்.

> "கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்து, பொதுமையான ஆட்சி புரியும் ஒரு பெருஞ்சக்தி என்று உணர வேண்டும்" (ப : 10)

டாக்டர் மு.வ. அவர்கள் ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக்காலம் தமிழ் நாட்டில் எழுத்துலகை ஆண்ட பெருந்தகையாக விளங்கினார். 'அவர் தொடாத துறை ஒன்றுமில்லை; தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை" என்றபடி, அவர் எழுதுகோல் எல்லாத் துறைகளையும் பற்றி எழுதியது. இலக்கியம் 24; சிறுவர் இலக்கியம் 6; கடித இலக்கியம் 4; பயண இலக்கியம் 1; இலக்கிய வரலாறு 1; மொழியியல் 6; வாழ்க்கை வரலாறு 4; நாவல் 12; சிறுகதை 27; சிந்தனைக்கதை 2; நாடகம் 6; கட்டுரை 11; இலக்கணம் 3; மொழி பெயர்ப்பு நூல் 2; ஆங்கில நூல் 2 ஆக 85 நூல்களாக அவர் எழுதிய அனைத்துவகை நூல்களிலும் அவர் சிந்தனை வளம் சிறந்திருக்கக் காணலாம்.

பின்னிணைப்பு : 1

# டாக்டர். மு. வ. குறித்துச் சான்றோர் பாராட்டு

## I

"வாலாஜா, இராணிப்பேட்டை, வேலூர், வெட்டுவாணம் முதலிய இடங்கட்கு யான் அடிக்கடி செல்வேன். கூட்டங்களில் யான் மு. வரதராஜனாரைப் பார்ப்பேன். அவர் என்னைக் கண்டதும் ஒதுங்கி ஒதுங்கி நிற்பர். பின்னே நாங்கள் நெருங்கிப் பழகினோம். வரதராஜனார் முக அமைப்பு என் மூளைக்கு வேலை அளித்தது. அதைச் சிந்திக்கச் சிந்திக்க என் மூளை அவர் மூளையை நண்ணியது. நுண்ணறிவுக்கேற்ற முகம் வடிந்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தேன்.

"முதல் முதல் வரதராஜனார் பேச்சை யான் வெட்டுவாணத்தில் கேட்டேன்; அப் பேச்சு அவர் முக அமைப்பைப் பற்றி யான் கொண்ட முடிவை உறுதிப்படுத்தியது. அவரது எழுத்தும் பேச்சைப் போலவே இருத்தல் கண்டேன்.

"வரதராஜனார் பேச்சிலும் எழுத்திலும் பர்னார்ட் ஷாவின் கருத்துக்கள் ஆங்காங்கே பொதுளும். அவர் பர்னார்ட்ஷா நூல்களைப் படித்துப்படித்து ஒரு தமிழ் 'பர்னார்ட்ஷா' ஆனார் என்று கூறுதல் மிகையாகாது.

பா்னார்ட்ஷாவைப் பார்க்கிலும் வரதராஜனார் ஒரு துறையில் சிறந்து விளங்குகிறார் என்பது எனது ஊகம். பா்னார்ட்ஷா பலப்பல நூல்களை எழுதி எழுதி முதுமை எய்தியவர். இம் முதுமையில் அவர்க்கு வழங்கும் இக்கால அரக்கப் போர்க்காட்சி வாழ்க்கைக்குக் 'கிறிஸ்து வேண்டும்; பைபில் வேண்டும்' என்னும் எண்ணத்தை அவரிடம் அரும்பச் செய்து வருகிறது. வரதராஜனார்க்கோ அக்கருத்து இளமையிலேயே முகிழ்த்தது; 'வாழ்க்கைக்குச் சமயம் தேவை; கடவுள் தேவை!' என்று இளமை வரதராஜனார் பேசினார்; எழுதினார். கீழ்நாட்டு இளமை மேல் நாட்டு முதுமையை விஞ்சி நிற்கிறது.

''கூட்டம் கூடுதற்கு முன்னர்க் காலையிலும், கூட்டம் முடிந்த பின்னர் மாலையிலும் வரதராஜனாரும் யானும் ஆற்றங்கரைக்குச் செல்வோம்; தோட்டங்கட்குப் போவோம்; இயற்கையை எண்ணுவோம்; பேசுவோம். உண்போம். அவர் திருப்பத்தூரில் வதிந்தபோது இயற்கையோடியைந்த வாழ்வு அவரிடம் தானே தவழ்ந்தது. நண்பரது சென்னை வாழ்க்கை இயற்கையிலே செயற்கையைச் சேர்த்தது. அடிக்கடி நண்பரைச் சென்னையில் காண்பதில் எனக்கு இன்பம் உண்டாகிறது; அதே நேரத்தில் செயற்கையின் சேர்க்கை நினைவு தோன்றும்போது துன்பம் உண்டாகிறது. அன்பரும் சிற்சில போது வருந்துவது எனக்குத் தெரியும்.

''வரதராஜனார் தமிழறிஞரா? சீர்திருத்தக்காரரா? அவர் தமிழறிஞர் என்பது வெள்ளிடைமலை, சீர்திருத்தக்காரர் என்பது உள்ளிட்ட விளக்கு. அவரது சீர்திருத்தப் பேச்சுக்களை யான் பலமுறை செவிமடுத்துள்ளேன். அவர் வாழ்க்கைச் சீர்திருத்தக்காரர். சமூகச் சீர்திருத்தக்காரர்- நாட்டுச் சீர்திருத்தக்காரர்- என்பதில் ஐயமில்லை.

அவரை எனது சீர்திருத்த உலகில் என் உள்ளம் சேர்த்தே இருக்கிறது.

"வரதராஜனார் என் வீட்டுக்கு வருவர்; எனக்கினிய கனிகளைக் கொணர்வர். அவர் என்னிடம் பேசிக் கொண்டே எனது அனறாட வாழ்க்கையை ஆய்ந்துள் ளனர். அஃது எனது மணி விழாவை முன்னிட்டு 'வள்ளுவர் குறட்டார்' வெளியிட்ட மலரில் வரதராஜனார் வரைந் துள்ள ஒரு கட்டுரையால் தெரிகிறது.

"அறிஞர் இப்பொழுது பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருக்கிறார். அவர் பத்திரிகை யுலகிலும் ஓர் ஆசிரியராதல் வேண்டும் என்பது எனது வேணவா. ஆண்டவன் அருள் செய்வானாக."

"வரதராஜனாரிடம் தமிழ் பயிலும் மாணாக்கர் சிலர் என்னிடம் வருவர். அவருள் குறிக்கத்தக்கவர் வேங்கட சாமி, இரகுநாயகன், குருசாமி முதலியோர். (மற்றவர் பெயர்கள் தெரியவில்லை.) இவர்கள் தொண்டால் வருங் காலத் தமிழ்நாடு நன்கு அமையும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டாகியிருக்கிறது."

—தமிழ்த் தென்றல் திரு. வி. க.
திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் :
பக்கங்கள் 660—662;

# II

"பண்டிதர்களாகவோ. அறிஞர்களாகவோ விளங்கிச் சிறப்புற முடியாமல் தோல்வியுற்றவர்களின் பொழுது போக்கிற்குரிய வழியே புதினம் படைக்கும் கலையாகும் என்று பண்டிதர்கள் கருதிய கால கட்டம் ஒன்றிருந்தது அக்கால கட்டத்தில் இன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக இருக்கும் மு. வரதராசன் நாவல் களைப் படைக்கத் தொடங்கினார். அவர் புதினங்களைப் படைக்கும் கலைக்கு, மதிப்பையும் மரியாதையையும் பண்டிதர் உலகிலும் தேடித் தந்துள்ளார். பெருவாரியான நாவலாசிரியர்களுடைய நடை போலில்லாமல் அவருடைய நடை எளிமையாகவும் ஏற்றமிக்கதாகவும் இருந்தது. அவருடைய நாவல்கள் வெற்றிகரமான நாவல்களாகவும், பிரபலமான நாவல்களாகவும் அமைந்தன".

(Dr. M. Varadarajan, the Professor of Tamil in the Madras university has given dignity and respectability to novel writing even in the world of pandits who thought of this art as the hobby of those who failed to become pandits or scholars. His style is both simple and elegant unlike the style of a majority of other novelists His novels are, successful and popular- Prof T P Meenakshisundaran, A History of Tamtl Literature pp, 182-183)

—டாக்டர் மா. எழில் முதல்வன்மொழிபெயர்ப்பு

# III

பெருவாரியான நாவலாசிரியர்களுடைய நடை போலில்லாமல் பேராசிரியர் மு. வரதராசனார் புதுமைப் பாங்குக் காலத்துத் தலைசிறந்த தமிழ் உரைநடை ஆசிரியர்களுள் முதன்மை இடத்தைப் பெறும் தகுதியைப் பெற்றுள்ளார். அவருடைய படைப்புகள் பலதரபட்டன. புதினமாக இருந்தாலும், நாடகமாக இருந்தாலும், கட்டுரையாக இருந்தாலும், மொழியியல் நூலாக இருந் தாலும் சிறுவர்களுக்குரிய பேச்சுரையாக இருந்தாலும், வாழ்க்கை வரலாறாக இருந்தாலும்.........அனைத்திலும் ஒரே வகையான வீறமைதியும், தெளிவும், சமநிலை அமைதியும் பகட்டு ஆரவாரயின்மையும் பேராசிரியர் மு. வரதராசனாருடைய உரைநடையின் சிறப்பு இயல் புகளாக அமைந்துள்ளன,

(டாக்டர் ஆர்.இ. ஆஷெர்; தமிழ் உரை நடை வரலாற்றில் சில முடிமணிகள்; ப:47.)

# IV

"பேராசிரியர், டாக்டர் மு. வரதராஜன் அவர்கள் இளமைமுதலே கல்வியில் கருத்தூன்றி, தமிழில் தோய்ந்து, ஆங்கிலத்தில் தோய்ந்து, இலக்கியங்களில் திளைத்து, அறநெறி ஓர்ந்து, சிந்தனையில் சிறந்து, உலகினை (மனித வாழ்வை)த் தெளிந்து, சமுதாயத்தை வாழ்விக்கும் நோக்குடன் மனிதனின் உரிமையைப் போற்றிக் கடமையை உணர்த்தும் ஆர்வத்துடன் பயன் மிகுந்த புதினங் (காதை)கள் பலவற்றைப் படைத்துள்ளார்.

"பண்பின் திருவுருவாய், அறிவுச் செம்மலாய் முற்போக்காளராய், இலக்கிய மேதையாய், தேர்ந்த திறனாய்வாளராய், புதினப் படைப்பாளராய் விளங்கிய மு.வ. அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தன்னிகரற்ற தொண்டாற்றிய பெருமைக் குரியவர்.

''மக்களிடையே தமிழார்வம் தழைத்திடத் தமது பணியால், உரையால், உரைநடையால் வழி கண்டவர். அவர் அவருடைய படைப்பு இலக்கியங்கள் மூலம், இலக்கியம் பயிலும் ஆர்வம் துலங்கியது; தமிழ் வழிச் சிந்தனை மேம்பட்டது. உரைநடை புதுப்பொலிவு பெற்றது. தமிழர்தம் அறிவு நிலையும் முற்போக்கு உணர்வும் சிறந்தது. இது குறித்து இருவேறு கருத்துக்கு இடமில்லை.

''மு.வ. இயற்றிய புதினங்கள் யாவும் படிப்பவரின் சிந்தனையைத் தூண்டி, கருத்து விளக்கம் செய்து, வாழ்வைத் தெளிந்திடத் துணைபுரிகின்றன.

"மு. வ. வின் நடை ஒரு நீரோடை. அதன் பளிங்கு நீர் போன்ற அவரது சொல்—தொடர்—நடை—அதன் ஆழத்தில் கிடக்கும் சிறு கற்களையும் மணிகளையும், புல்லையும் பூண்டையும் துலங்கக் காட்டும் வகையில் அமைந்தது, அதனைப் படிப்போர் படிக்கும்போதே எவ்வித முயற்சியுமின்றி: அதில் ஆழ்ந்து காணலாகும் நுண்பொருளை எளிதில் கண்டு கொள்ளலாம்."

(பேராசிரியர் க. அன்பழகன்; க. த. திருநாவுக்கரசின் பேராசிரியர் மு.வ. வரதராசனாரின் படைப்பிலக்கியம், அணிந்துரை : V VI VII)

# V

கேள்வி : டாக்டர் மு.வ. வைப் பற்றி உங்கள் கருத்து?

பதில் : இலக்கியம் படித்து விட்டோம் என்ற இறுமாப் போடு வாழும் ஒரு சில தமிழ்ப் பேராசிரியர்களுக்கு நடுவே இருபத்து நான்கு மணி நேரமும் இன் முகத் தோடு வாழ்ந்தவர். தமிழ் படித்தவர்கள் நீங்காத வறுமையில்தான் வாழ வேண்டும் என்பதை உடைத் தெறிந்து, வற்றாத வளத்தோடு வாழ முடியும் என்பதை மெய்ப்பித்தார். எடுத்துக் காட்டான தமிழர். ஒவ்வொரு தமிழரும் டாக்டர் மு.வ.வைப் போல வாழ்ந்தால், வளம் பெறும் தமிழ். வளம் பெறும் தமிழகம். வளம் பெறுவார்கள் தமிழர்கள்.

—தமிழ்வாணன்

('கல்கண்டு வார இதழ்' *31-10-1994*)

பின்னிணைப்பு : 2

## டாக்டர். மு. வ. அவர்களின சிந்தனைகள் சில :

- மனம் ஓரே இடத்தில் வேரூன்றி வளர்ந்து செழித்திடும் மரம்போல் ஒரு நெறியைப் பற்றி உறுதியாக நின்றால் நல்லதுதான். அல்லது எங்கெங்குச் சென்றாலும் மாலையில் குறித்த இடத்திற்கு வந்து சேர்ந்திடும் மாடு போல் எத்தொழிலைச் செய்தாலும் குறிக்கோளை மறக்காத மனமாக இருந்தாலும் நல்லதுதான். ஆனால் இன்ன திசை இன்ன போக்கு இன்ன கூடு என்று வரையறை இல்லாமல் இயன்ற வரையில் பறந்து அலையும் பறவையாக இருந்தால் பயன் என்ன ?

(நெஞ்சில் ஒரு முள் : பக். 6)

- நம் வாழ்க்கை இந்த உலகத்தை நோக்கக் கடலில் ஒரு துளி போன்றது. இந்தச் சிறு வாழ்க்கையில் எல்லாவற்றையும் அறிய முடியாது. எண்ணியவற்றையெல்லாம் செய்யவும் முடியாது. வாய்ப்பும் குறைவு, வாழ்நாளும் குறைவு, ஆகையால் நம் பங்கு மிகமிகச் சிறியது. வாழ்க்கையில் எல்லாம் பெற முடியாது. எல்லாம் அறிய முடியாது. எவ்வளவோ பெறாமல் அமைதி அடைய வேண்டும். எவ்வளவோ அறியாமல் அமைதி அடையவேண்டும்.

(அல்லி : பக். 113)

- குறை இல்லாதவர்கள் உலகத்தில் இல்லை, குறைகளுக்கு இடையே குணத்தைக் கண்டு வாழவேண்டும்,

முள்ளுக்கு இடையே. முரட்டு இலைகளுக்கு இடையே மெல்லிய மலரைக் கண்டு தேனைத் தேடு கிறது தேனீ! அதுதான் வாழ வழி.

(மண்குடிசை: பக். 95)

* நம்மைச் சுற்றிலும் ஏழைகள் உணவுக்கும் உடைக்கும் வழியில்லாமல் வாழும்போது. நாம் ஆடம்பரத்தைத் தேடுவது பாவம் என்பது என் கொள்கை.

(மண்குடிசை : 52)

* உழைப்புக்கும் உண்மைக்கும் தவிர வேறு எதற்கும் மதிப்பு இல்லாமல் போனால் உலகில் குற்றங்கள் குறையும்.

(மண்குடிசை : 436)

* மனிதர் மட்டுமே நெடுநேரம் உட்கார்ந்திருக் கிறார்கள். அதனால்தான் மனிதர்க்கு மட்டும் நோய்கள் பல ஏற்படுகின்றன.

(மண்குடிசை : 93)

* சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள்ள முடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள்.

(தங்கைக்கு : 15)

* உன் சாதிப் பெண்ணாகப் பார்த்து மணந்துகொள். முதலில் நீ என்ன சாதி என்று எண்ணிப்பார். இப்படித்தான் வாழவேண்டும் என்ற சாதியா? என்று தெரிந்துகொள். பிறகு அதே சாதிப் பெண்ணைத் தேடு.

(அல்லி : 28)

* அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கிநட; உரிமைக்காகப் போராடிக் காலங் கழிக்காதே.

(தங்கைக்கு : 39)

* தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித் தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் இருந்து அழிந்தது போதும். இனிமேல் வல்லவர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

(தம்பிக்கு : 6)

* கொஞ்சம் போராட வேண்டும். பிறகு விட்டுக் கொடுக்க வேண்டும். அப்படி நடந்தால்தான் ஆண்களைத் திருத்த முடியும். அளவுக்குமேல் போராடவும் கூடாது. அளவுக்குமேல் விட்டுக்கொடுக்கவும் கூடாது. எதிலும் அளவு வேண்டும்; அளவு தெரிந்துகொண்டு நடந்தால் வாழ்க்கை துன்பம் இல்லாமல் போய் விடும்.

(நெஞ்சில் ஒரு முள், பக். 231-232)

* கணவனோடு வாழும் ஒருத்திக்குக் கணவனுடைய அன்பே முதன்மையானது; மக்கள் இரண்டாம் நிலையினர்; கணவன் பெற்றோரும் தன் பெற்றோரும் மூன்றாம் நிலையினர்; நண்பரும் உறவினரும் நான்காம் நிலையினர்; புகழும் மதிப்பும் ஐந்தாம் நிலையின; கலையும் பொழுதுபோக்கும் ஆறாம் நிலையின; தெருவாரும் ஊராரும் ஏழாம் நிலையினர். இப்படியே மற்றவற்றையும் மற்றவர்களையும் முறைப்படுத்தி வைத்துக்கொள்.

(தங்கைக்கு : பக். 74)

பின்னிணைப்பு : 3

## டாக்டர். மு. வ. வின் வாழ்வியற் கருத்துகள்

* "தமிழர்களிடத்தில் ஒரு குறை உண்டு. இன்றைய போராட்டத்திலே அக்கறை காட்டி உயிரை விடுவார்களே அல்லாமல் நாளைய தற்காப்புக்கு வேண்டிய திட்டம் போட்டு வெற்றி பெறும் வகையில் கடமையைச் செய்ய மாட்டார்கள். சேர, சோழ, பாண்டியர் காலம் முதல் தமிழர் அடைந்து வரும் வீழ்ச்சிக்கு எல்லாம் இதுதான் காரணம். மேடைப் பேச்சும் கைத்தட்டும் இந்தக்குறையை வளர்த்தனவே தவிர, போக்கவே இல்லை. இந்தக் களங்கம் தீரும் வரையில் சில ஆண்டுகளாவது மேடைத் திறமையைத் தமிழர் மறந்து போனாலும் கெடுதி இல்லை."

* "மனம் ஒரு பெரிய உலகம்; அந்த மன உலகில் அந்தியின் அழகும் உண்டு; காலையின் கவர்ச்சியும் உண்டு; நள்ளிரவின் குளிர் மயக்கமும் உண்டு; நண்பகலின் கொதிப்பும் உண்டு. அந்த மன உலகில் கருமுகில்களும் உண்டு; வெண்முகில்களும் உண்டு; உயர்ந்த மலைகளும் உண்டு; ஆழ்ந்த கடல்களும் உண்டு; அந்த மன உலகில் வெயில் பரப்பும் கதிரவனும் உண்டு; வெண்ணிலாப் பொழியும் திங்களும் உண்டு; தட்பமும் உண்டு; மழையும் உண்டு; வளமும் உண்டு; வறட்சியும் உண்டு. அந்த மன உலகைக் காணவேண்டும்; ஆராய வேண்டும்; பாட வேண்டும்; பண்படுத்த வேண்டும்."

* "அன்பு வெல்லவேண்டும்; மானம் தோற்கவேண்டும். அன்புக்காகத் தன்மானத்தை, மதிப்பை, பெருமையை விட்டுக் கொடுக்கத் தயங்குகின்ற பலர் வேறு எந்தத் தியாகமும் செய்யமுடியாது."

* "குறிப்பிட்ட வயது வந்த பிறகு ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கும் படிப்பே கூடாது. அதனால் பலர் இயற்கையின் போராட்டத்துக்கு எளிதில் இரையாகி வருந்த வேண்டியிருக்கிறது. ஆணின் வாழ்க்கை வெளியே பலரோடு பழகித்திரியும் வாழ்க்கை. பலரோடு பழகுவதால் மனம் கெடுவதற்கு வாய்ப்பு உண்டு. ஒழுக்கம் கெடுவதற்கும் வழி உண்டு. சேற்றில் நடந்து வழுக்குவது போன்றது இது, பெண்ணின் வாழ்க்கை குடும்பத்தளவில் பெரும்பாலும் இருந்து, கணவனோடும் மக்களோடும் பழகி அமையும் வாழ்க்கை- மனம் கெடுவதற்கும் வாய்ப்பு இல்லை; ஒழுக்கம் தவறுவதற்கும் வழி இல்லை. மணவில் நடப்பது போன்றது இது. ஆகையால் தவறி விழவே கூடாது. விழுந்தால் நொண்டியாக இருக்க வேண்டும் அல்லது நோயாளியாக இருக்கவேண்டும்,"

* "உலகத்துக்கு அஞ்சுகின்றார்கள் இல்வாழ்க்கையில் தோல்வி அடைகின்றார்கள், உலகத்துக்கு அஞ்சாதவர்கள் இவ்வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றார்கள். உலகமும் வேண்டும் இல் வாழ்க்கையும் வேண்டும். ஆனால் ஒன்று வீட்டுக்கு வெளியே; மற்றொன்று வீட்டுக்கு உள்ளே. வாசற்படிக்கு உள்ளே உலகம் வந்தால், அன்பான மனங்களில் அல்லல் புகுந்துவிடும்."

* "உள்ளதைக் கொண்டு மகிழவேண்டும், வியாபாரம், செல்வம் இவற்றில் மட்டும் அல்ல; மனைவியோடு வாழும் வாழ்க்கையிலும் இதுவேண்டும். மனைவியிடம் அளவுக்கு மேல் அன்பு, பணிவு, அடக்கம், ஒழுக்கம், அழகு, ஆர்வம் எல்லாவற்றையும் எதிர்பார்த்தால் கடைசியில் ஏமாந்து வருந்த வேண்டி ஏற்படும்."

* "மனப்பொருத்தம் இல்லாத கணவனும் மனைவியும் ஒரு வீட்டில் இருந்து நாள்தோறும் போராடுவதைவிட, தனித்தனியே இருந்து, உரிமையோடு நாளைக் கழிக்கலாம்."

* "நமக்கு உள்ள நெருங்கிய செல்வம் இரண்டு. ஒன்று மனம். மற்றொன்று உடம்பு. மனத்தையும் நல்ல வழியில் காப்பாற்றி, உடம்பையும் நோய் இல்லாமல் காப்பாற்றினால் அந்த வாழ்க்கைதான் வெற்றி மிகுந்த வாழ்க்கை, உடல் நோயற்றிருப்பது முதல் இன்பம். மனம் கவலையற்றிருப்பது இரண்டாம் இன்பம், உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது மூன்றாம் இன்பம்."

* "இது பரந்த உலகம். இங்கே எல்லாம் உண்டு. ஆனால் மனம் குறுகி நிற்காமல் பரந்து விரிய வேண்டும், மனம் இருந்தால், எல்லா வாழ்வும் உண்டு. இல்லை என்ற குறைக்கே இந்த உலகத்தில் இடம் இல்லை."

* "ஒவ்வொரு நாளும் கடவுள் வழிபாடு செய்தல் நன்மை பயக்கும்; உள்ளத்தை உயர்த்தும், அமைதி நல்கும். நாள்தோறும் காலையில் கடமைகளைத் தொடங்குவதற்கு முன்பும், இரவில் கடமைகளை முடித்த பிறகும் அமைதியாக உட்கார்ந்து கண்மூடி மனத்தை ஒருமைப்படுத்தி வழிபடல் வேண்டும்."

* "குடும்பம் என்றால், ஒருவரின் மனக்கவலையை மற்றவர் குறைப்பதற்காக ஏற்பட்டது. ஆனால் உள்ள

கவலையை வளர்த்து மீளாத்துன்பத்தில் வருந்துவதானால் அந்தக் குடும்பத்தைக் கலைத்துவிடுவதே நல்லது."

- ‘‘தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித் தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும். இனிமேல் வல்லவர்களாகவும் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழவேண்டும்."

- ‘‘இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும்; ஈ எறும்பாலும் முடியும், துன்பத்திற்குத் துணையாக வல்லவர்களையே தேடவேண்டும். உறவானாலும் நட்பானாலும் காதலானாலும் இத்தகையோரையே தேடவேண்டும்."

- "சாவு என்பது வாழ்க்கைக்குத் தேவையானது. சாவும் வாழ்வும் சேர்ந்தால் வட்டம். இது இல்லையானால் அது இல்லை. இலை பழுத்து வாடி உதிர்ந்தால்தான்; தழை பசுமையாகத் தோன்றுகிறது. பழுப்பதும் தழைப்பதும் போல்தான் சாவும் வாழ்வும்."

- ‘‘தேவைகளைக் குறைத்துக்கொண்டு எளிய வாழ்வு வாழ்வது என்றைக்கும் நல்லது. அதுவே முதன்மையான தவம். கவலை இல்லாமல் வாழ்வதற்கு அது ஒரு வழி. தேவையே இல்லாமல் ஒரு மனிதன் வாழ முடியாது. தேவைகளைக் குறைத்து வாழலாம். பணம் இருந்தால் உலகத்தில் மதிப்பு உண்டு. பணம் இருந்தால் மற்ற எல்லாம் படிப்படியாக வந்து சேரும். பணம் வைத்துக் கொண்டு வாழ்வதுதான் முதல் கடமை."

- ‘‘உலகம் பெண்களுக்குக் கவலையை ஆக்கத் தெரிந்து கொண்டது; ஆனால் போக்கத் தெரிந்துகொள்ளவில்லை."

* "முன் காலத்தில் எல்லாத் தேவைகளையும் துறந்து விட்டுக் காட்டுக்கு ஓடினார்கள். அது அந்தக் காலத்துத் தவம். தேவைகளைக் குறைத்துக்கொண்டு நாட்டிலேயே வாழ்வது இந்தக் காலத்துத் தவம். இது காந்தியடிகள், டால்ஸ்டாய் முதலானவர்கள் வாழ்ந்து காட்டியது."

* "இருக்கிற அளவைவிட அறம் வளர்ந்துவிடப்போவதும் இல்லை; குறைந்துவிடப் போவதும் இல்லை, உலகம் தோன்றிய காலம் முதல் இப்படி ஒரே அளவாக அறமும் பாவமும் கலந்து தான் இருந்து வருகின்றன. நாம் கவலைப்படுவதெல்லாம் வீண். அறம் பாவம் இரண்டையும் காப்பாற்றுகிறார் கடவுள். உண்மையைச் சொல்லப் போனால், அறம் கடமையுணர்ச்சி உள்ள நல்ல பிள்ளை; பாவம்தான் கடவுளின் செல்லப் பிள்ளை, கடவுள் தாயுள்ளம் உடையவர். தாய்க்கு இரண்டு பிள்ளைகள் இருந்து, மூத்த பிள்ளை எல்லோராலும் பாராட்டப்பட்டு, இளையபிள்ளை எல்லோராலும் தூற்றிக் கைவிடப்பட்டால் தாய்க்கு எந்தப்பிள்ளை மேல் அன்பு மிகுதியாக இருக்கும்? மூத்த பிள்ளை நல்லவன், அவன் எப்படியாவது பிழைத்துக் கொள்வான், மற்றவர்களும் அவனுக்கு உதயி செய்வார்கள் என்று தாய் அவனைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படமாட்டாள். ஆனால் இளையபிள்ளையை எல்லாரும் கைவிட்டு விடுவார்களே, அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று மிகுதியாக அன்பு செலுத்துவாள், கடவுளும் அப்படித்தான் செய்கிறார். இந்த உலகம் தீமையை அழித்துவிடுமே என்று அதற்குத் தான் மிக்க வளர்ச்சியையும் வேகத்தையும் கொடுத்திருக்கிறார்."



## சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர் கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு. அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட்.. பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடைகொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர், பேராசிரியராகத் துறைத் தலைவராக விளங்குகிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர். இந்த முற்றிய புலமையாளர், முன்னாள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாவார்.

நாற்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர்தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன் சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்; புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்க நூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி! அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கிய பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி. இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு.

— மா.செ.